கல்கி

KALKI 17.10.2004 ரூ.6.00



தொடரும் பொடா...
கதறும் கிராமம்...!



ி.பி ஏற்றிய
பி.பி.ஸி!

தமிழோ தமிழ்!

இலவசம்: சென்னை ஸ்கேன்
சென்னை வாசகர்களுக்கு மட்டும்


Vairam
Vaibhogam
வை சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா! என்
வைர களஞ்சியமே!
பிரின்ஸ் வழங்குகிறது பாரம்பரிய வைர
நகை கலெக்ஷன்ஸ்! உயர்ந்த ரசனையுடன்
உருவாக்கப்பட்ட நெக்லெஸ்கள்,
காதணிகள், வளையல்கள் மற்றும் பல.
ஒரு பேரின்பத்துக்கு தயாராகுங்கள்!
ப்ரத்யேக டைமண்ட் பிரிவு
நம்பகத்திற்கான சான்றிதழ்
*திரும்ப பெறும் உத்திரவாதம்
தோஷம் நீக்கிய வைரங்கள்
PRINCE
JEWELLERY
rubecon
ONLY AT CHENNAI: PANAGAL PARK, Tel.: 2436 3137 • G-15A, SPENCER PLAZA, PHASE-I, Tel.: 2849 5817
• Showrooms open on Sundays • Join our jewellery savings scheme • www.princejewellery.com • Valet parking available
• EMI schemes available for purchase on CITIBANK, HSBC and ICICI Bank credit cards. Conditions apply.
NAKSHATRA
asmi

பிள்ளையாருக்குத்
தோப்புக் கரணம்
போட்டு தலையில்
குட்டிக் கொள்வதேன்?

‘கஜானனம்
பூதகணாதி ஸேவிதம்’
சுலோகத்தின்
அர்த்தம் என்ன?

பிள்ளையார் சதுர்த்தி
அன்று சந்திரனை
ஏன் பார்க்கக் கூடாது?



இது போன்ற நிறையத் தகவல்களுடன்

‘எங்க ஊர் பிள்ளையார்’

கல்கி தீபாவளிச் சிறப்பிதழில் தொடங்குகிறது. வாசகர்களும் தங்கள் ஊர் விநாயகர் மகிமை, தல புராணம், கணபதி தரிசனம், மந்திரச் சிறப்பு, ஸ்தோத்திரங்கள் என எழுதி அனுப்பலாம்.

Geethanjali

சிறந்த படைப்புக்கு சூப்பர் ஆடியோ நிறுவனத்தினர் வழங்கும் ‘ஓம் கணபதி ஓம்’ ஆன்மிகம் மணக்கும் ஆடியோ சிடி பரிசு

வட்டமேஜை

கொடி பறக்குது!

✉ குடிப்பழக்கம் மனிதனை நாசமாக்கும் என்பதற்கு உதாரணம் அகிலா, தம் கணவர் நடிகர், காலஞ்சென்ற அனுமந்துவைப் பற்றி சொல்லிய கசப்பான அனுபவங்கள்.
சென்னை-97, கே.வி. ராமன்

✉ காந்தி ஜயந்தியை நினைவு படுத்தும் வகையில் நீங்கள் வெளியிட்ட, அமரர் கல்கியின் 'மகாத்(தான)மா' பாடல் பரவசப்படுத்தியது.
வடசென்னை, சுகந்தி நாராயண்

✉ 27ஆம் பக்கத்தில் தெய்வ மகாத்மா என்ற தலைப்பில் அமரர் கல்கி எழுதிய கவிதையைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். தேசப் பிதாவைப் பற்றி இனிமேல் எந்தச் செய்தி வந்தாலும் முதல் பக்கத்தில் பிரசுரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
திருச்சி, ஆர்.வி. ஸ்ரீதர்

✉ அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இடம் பெற்ற பாலுசத்யாவின் 'உங்கள் நண்பர்' சிறுகதை அருமை.
பெங்களூர், கே. விஸ்வநாத்

✉ 'இப்படியும் ஒரு முதலாளி!' , வெள்ளக்கோயில் இராமசாமி - பற்றிய கட்டுரை தேடிப் பிடித்து பாராட்ட வேண்டிய ஒன்று. வாழ்த்து. அது சரி, 'செல்வம் எண்டர்பிரைஸஸ்', 'செல்லம் எண்டர்பிரைஸஸ்' ஆக மாறிவிட்டது ஏனாம்? 'செல்லமே'(?)யின் எதிரொலியா?
சென்னை - 33, மயிலை. கோபி

✉ 'கல்கி' ஒரு தரமான (இலக்கிய) இதழ். இருந்தும், 'புக் பேங்க்', 'ஹலோ இறைவா', 'டபுள் கொண்டாட்டம்', 'ப்ளாஷ்பேக்' போன்ற தலைப்புகள் நெருடுகின்றன.
கல்பூண்டி, பூ.சீனிவாசன்

✉ ஒருநாள் முதல்வராக வர விரும்பும் 'கஜேந்திரா'வுக்கு ஜஸ்ட் பாஸ்! ஒரு நாள் முதல்வனாக நடித்த 'அரசாட்சி'க்கு அபவ் ஆவரேஜ்! எப்படியோ 'பா.ம.க.'வுக்கு கிச்சுகிச்சு மூட்டி விட்டீர்கள்!
திசையன்விளை, ஆர்.ஜி.அம்பிகை ராமன்

✉ 'அரசாட்சி' கவிழ்க்க முடியாத கூட்டணி ஆட்சி என்று அரசியல் பாணியில் விமர்சித்த விதம், சிம்ப்ளி சூபர்ப். உமது விமரிசகரின் ஆட்சி கொடி கட்டிப் பறக்கிறது.
அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ 'இனி, நானே தமிழினத் தலைவர்' என்ற விஜய டி. ஆரின் பேட்டியைப் படித்து தலையில் அடித்துக் கொண்டேன். (என்னுடைய தலையில்தான்!)
மதுரை, பனிமலர்





✉ ஆசிரியர் பக்கம் படித்தேன். அதில் 'பாதுகாக்கப் பட்ட உயிரினமாக' அறிவித்துள்ளது பிரிட்டன் என்றிருக்கிறது. ஆங்கிலத்தில் Protected Area என்பது தமிழில் பாதுகாக்கப்படும் என்று இருக்க வேண்டும். இப்போதும் பாதுகாக்கப்படுகிறது அல்லவா? ஆகையால் பாதுகாக்கப்படும் என்பதுதான் சரியான வார்த்தை.
சென்னை - 10, ஆர்.ஆர்.அமுதன்

✉ ஸ்டெஃபானி விஷயத்தில் நான்கு இளைஞர்கள் குற்றவாளிகள் என்ற போதிலும் மறைமுகமாக அந்தப் பெண்ணும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. பல வருடங்களுக்கு முன் கி. ராஜேந்திரன் கலைமகளில் எழுதிய 'விஷ



வட்டங்கள்' கதை, ஸ்டெஃபானி விஷயத்தோடு ஒப்பு கூறத்தக்கது.

பொன்மலை, ஆர்.பிரகாஷ்

✉ 'டிஸ்கோ கலாசாரம்' தலையங்கம் நாடும் மனுஷனும் போகும் போக்கை நன்கு சாடியிருக்கிறது.

சென்னை, குவளை எழில்

✉ 'என் செல்வமே, ஸ்டெஃபானி...!' கண்ணீரை வரவழைத்தது. ஈடு ஏது அந்த இழப்புக்கு? அத்தாயின் துயரம் கண்ட பிறகாவது மாணவ சமுதாயம் ஈவ்டீசிங், ராக்கிங் போன்ற செயல்களை அறவே நீக்கிட வேண்டும்.

திண்டுக்கல், தயாகவிச் சிற்பி

✉ இளசுகளுக்கு சேஸிங் விளையாட்டு, முடிவு விபரீதம்! ஸ்டெஃபானியின் தாயின் கண்ணீருக்கு பதில் என்ன?

சென்னை, கோ.பிரேமானந்த்

✉ வாழ்வாங்கு வாழ்ந்து, இப்போது வழக்கொழிந்து போன காரணத்தால் அம்மாதிரி மொழிகளின் தகுதியையும் - சிறப்பையும் பாதுகாப்பதற்காகக் கருத்துடன் அவற்றைப் பராமரிக்க என்று பட்டியல் செய்து, செலவும் செய்கிறது அரசாங்கம். உதாரணமாக உருது மொழி. தமிழுக்கு என்ன குறை? நிஜத்தில், ஒன்றும் இல்லை. அதனைப் பார்த்துப் பராமரிக்க, ராக்ஃபெல்லர் ஃபௌண்டேஷனும் - இருக்கை இத்யாதிகளும் அவசியமில்லை.

சென்னை, எம்.ஏ. ராஜேந்திரன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



காதலுக்குப்

குஷியில் த்ரிஷா!

'த்ரிஷா' பெயர்தான் வித்தியாசம்... அம்மணி தமிழோ தமிழ்! பல மாமாங்கமாய் தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளைச் சார்ந்த ஹீரோயின்களுக்குப் பிறகு, கடந்த பதினைந்து வருடங்களாய் நாட்டாமை நடத்தி வரும் மும்பை ஹீரோயின்களுக்கும் மத்தியில், நீண்ட நெடிய காலத்துக்குப் பிறகு, தமிழ்ப் பெண்ணான த்ரிஷா, தமிழ் சினிமாவில் நம்பர் ஒன் இடத்தைப் பிடித்து தமிழர்களின் மானத்தைக் காப்பாற்றியிருக்கிறார். மனம் மகிழ்ந்த வாழ்த்துகளோடு, சட்சட் என நாம் கேட்ட கேள்விகளுக்கு, பட் பட் என அவரளித்த பதில்கள் இதோ!

உண்மையா சொல்லுங்க. சிம்ரன் திருமணமாகிப் போனதில் பெருமூச்சு விட்டீர்கள்தானே?

அவருக்குக் கல்யாணம் ஆனதாலே 'கனவுக்கன்னி'ங்கிற இமேஜ் போயிடும்தான். காலேஜ் ஸ்டூடண்ட் ரோல் எல்லாம் பண்ண முடியாது. இன்னும் சில வருடங்கள் கழித்து, இதே நிலைமை எனக்கும் வரும்ங்கிறதை நல்லாவே தெரிஞ்சு வைச்சிருக்கிறேன்.

அப்பாடா, ஒருவழியா தமிழ்ப் பெண்ணான நீங்க நெம்பர் ஒன் நடிகையாயிட்டீங்க!

எனக்கும் சந்தோஷம்தான். ஆனா ஹிந்தியில பாருங்க, ராணி முகர்ஜி பெங்காலி. ப்ரித்தி ஜிந்தா காஷ்மீரி, ஐஸ்வர்யா ராய் பெங்களூர். அதேபோல தெலுங்கில் டாப் நடிகைகளா, நானும் மும்பை நடிகைகளான ஸ்ரேயா, ஹரிணி, பூமிகாவும் இருக்கோம். அதனால சினிமாவுக்கு மொழியை விட திறமைதான் அவசியம்.

ஆமா, டப்பாங்குத்துப் பாடல்கள்தான் கை கொடுக்குது போல...?

ஆமாமா. முறையா பாலே நடனம்தான் கத்திட்டிருக்கேன். சினிமா டான்ஸ் பத்தி ராஜு சுந்தரம், கலா மாஸ்டர் கிட்டதான் தெரிஞ்சுகிட்டேன். 'வர்ஷம்' தெலுங்குப் படத்துல பிரபு தேவா நடனம் கத்துக் கொடுத்ததுல, பிக்-அப் ஆகி 'அப்படிப் போடு' ஈஸியா பண்ணிட்டேன்.

அதென்ன மணிரத்னம் படத்துல மட்டும் சொந்தக்குரல்?

'ஆய்த எழுத்து'க்குப் பிறகு, எனக்கே மற்ற படங்களிலும் பேச



ச்சைக் கொடி!

ஆர்வம் வந்திருக்கு. நாங்க தமிழ்தான்னாலும் வீட்ல இங்கிலீஷ்தான் பேசுவோம். படிச்ச சர்ச்பார்க் பத்தி கேக்கவே வேணாம். எங்க பாட்டிகிட்ட மட்டும்தான் தமிழ் பேசறதால, சரியான உச்சரிப்பு அவ்வளவா வராது.



விவேக் ஓபராய் பிடிச்ச நடிகர்ங்கறீங்க. பாவம், ஐஸ்வர்யா ராய் கோவிச்சுக்க மாட்டாங்களா?

நோ, சும்மா ஜாலியா பேசினேம்பா. ஐஸ், கோவிச்சுக்கிற அளவுக்கெல்லாம் சொல்லவேயில்லை.

'ஜோடி' படத்துல சிம்ரன் தோழியா நடிச்சது ஏன்?

ஓ! சினிமா பற்றிய ஐடியாவேயில்லாத சமயத்துல, சும்மா ஜாலியா மாடல்ஸ் தேவைன்னு கூப்பிட்டதால போனேன். ஆனா இப்பப் பாருங்க, டி.வியில 'ஜோடி' போடும்போது, நான் வர்ற கொஞ்ச ஸீனையும் விளம்பரத்துல பயன்படுத்தறாங்க. அடராமா! (மனம் விட்டுச் சிரிக்கிறார்.)

ரஜினி, சந்திரமுகிக்கு அழைத்தாரா?

ரஜினிக்கு ஜோடியா 'ஜக்குபாய்'க்கு கே.எஸ். ரவிகுமார் அழைத்தார். ஆனா அடுத்த பிப்ரவரி வரை நான் பிஸிங்கிறதால முடியாமப் போச்சு. 'சந்திரமுகி'க்கு இதுவரை கூப்பிடலை.

கமல்?

இல்லை. இதுவரை எந்தப் படத்துக்கும் கால்ஷீட் கேட்கவேயில்லை.


விஜய் பொதுவா எந்த ஹீரோயின்கிட்டயும் பேச மாட்டார். உங்ககிட்ட மட்டும் எப்படி?

ஹா...ஹா... நல்ல ஜோக்தான். 'கில்லி' ஷூட்டிங் பாதி முடிஞ்சும், நாங்க ரெண்டும் பேரும் பேசிக்கவேயில்லை.

ஃபோன், மொபைல்... எந்த வசதியும் இல்லாத ஆந்திராவிலுள்ள அரக்கு வேலியில் ஷூட்டிங் நடந்தபோதுதான், வேறு வழியில்லாம பேச்சுக் கொடுத்து அப்படியே ஃப்ரெண்ட்ஸாயிட்டோம். ஹலோ, கிசுகிசுக்கு பயந்துட்டு எங்க நட்பை எல்லாம் வெட்டிக்க முடியாது. ஆமா!

திருட்டு வி.சி.டியில படம் பார்ப்பீங்கதானே?

அச்சச்சோ, அதுல யாராவது ஒழுங்கா படம் பார்க்க முடியுமா? ப்ரார்த்தனா



ட்ரைவ் இன்ல, கார்ல உட்கார்ந்துக்கிட்டே படம் பார்க்கிற சுகமே தனிதான்.

ரசிகர்கள் அன்புத்தொல்லை ஏதும்?

அது இல்லாமலா, நம்மூர் 'ஸ்பென்ஸர் ப்ளாசா'விலும், ஹைதராபாத்திலுள்ள ஐமேக்ஸ் தியேட்டரிலும் தெரியாத்தனமா என் அம்மாவோட போனப்ப, திமுதிமுன்னு கூட்டம் வந்துது பாருங்க! எங்களால ஒண்ணுமே பண்ண முடியலை. செக்யூரிட்டிங்க வந்துதான் காப்பாத்துனாங்க.

'அடடா'ன்னு உங்களுக்குக் கிடைக்காம ஏங்கின படம்?

'வாலி', 'உயிரே'. இதுல 'உயிரே' டிவிடியை நூறு முறைக்கும் மேல பார்த்து தேய்ச்சிட்டேன்னா பாருங்க.

உங்க அம்மாவை நடிக்க அழைக்கிறாங்களாமே? போச்சு, நீங்க காலி தான்!

ஒண்ணுமில்லை. வந்த வாய்ப்புகளையெல்லாம் அம்மா ஏற்கெனவே மறுத்துட்டாங்க. நானும் அம்மாகிட்ட 'எதுக்கும்மா இதெல்லாம்'னு சொல்லி வைச்சிருக்கேன். அஸ்கு புஸ்கு!

விஜய டி.ஆர் மேடையில் நீங்க இங்கிலீஷ்ல பேசினதுக்கு வெளுத்து வாங்கினாரே?

ஆங்கிலத்துல பேசினாத்தான் பெருமை அப்படின்னு நினைக்கிற பொண்ணு நான் கிடையாது. இதோ இப்ப உங்ககிட்ட தமிழ்லதானே பேசறேன்? மேடையில அத்தனை பேர் முன்னாடி பேசும்போது, தப்பா பேசிடக் கூடாதேன்னு எனக்கு சுலபமா வர்ற மொழியிலே பேசினேன். இது தப்பா?

அஜித் - விஜய் எப்படி?

விஜய் ரொம்ப அமைதியான சுபாவம். நல்ல மனிதர். அவருக்கு உங்களைப் பிடிச்சுப் போச்சுன்னா, அன்பைக் கொட்டுவார். பள்ளிப் பருவத்திலிருந்தே அஜித் ரசிகை நான். எதையும் மறைக்காம நேருக்கு நேர் பேசிடுவார். ரெண்டு பேருமே ரிஷப ராசிக்காரர்கள் தெரியுமா? அஜித் செட்ல சூப்பரா சமைக்கிறாரு. 'ஜீ' யின்போது அவர் பண்ணிய சிக்கன் கறி சூப்பர்!

எல்லாம் சரிதான். மேடமுக்கு காதல் கல்யாணம்தானே?

ஆமா. இதிலென்ன சந்தேகம்? எங்கம்மாவே நீ லவ் மேரேஜ் பண்ணிக்கோ. அதுதான் சரியாயிருக்கும்னு சொல்லியிருக்காங்க. சினிமாவோ அல்லது எந்த ஃபீல்டாயிருந்தாலும், எனக்கு ஒருத்தரைப் பிடிச்சுதுன்னா, அது என் அப்பா அம்மாவுக்கும் ஓகேதான். லவ்வுக்கு ரொம்ப சப்போர்ட் பண்றவங்க அவங்க!

த்ரிஷா பற்றி பத்திரிகை, டீவி போன்ற எந்த மீடியாவிலும் ஒரு செய்தியும் வரவில்லையென்றால்?

அவ்வளவுதான். மார்க்கெட் இதோட காலின்னு உறுதியா தெரிஞ்சுக்க வேண்டியதுதான்!

- ச.ந.கண்ணன்

அன்பான வேண்டுகோள்



சிவானந்த குருகுலத்தில் இருக்கும் சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இந்த வருடம் தீபாவளி திருநாளை மனமகிழ்ச்சியுடன் கொண்டாட பொது மக்களிடம் உதவிக்கரம் நீட்டுகிறோம். பொதுமக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் இக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாகவோ அல்லது புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்பு, எண்ணெய், சீயக்காய், அரிசி, கோதுமை போன்ற தானிய வகைகளாகவோ நன்கொடை கொடுக்கலாம்.

அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடைத் தொகையினை காசோலையாகவோ / டிராப்டாகவோ **"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"** என்ற பெயரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

பொது செயலர்,
சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,
நெ.20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.
Ph: 2239 1078 / 2239 2444
FAX NO.2279 1017

சென்னையில் உள்ள அன்பர்களின் வசதிக்கு:

M/S.பிரகாஷ் டிரேடிங் கம்பெனி
நெ.156, தம்பு செட்டித் தெரு,
சென்னை - 600 001.
Ph: 2534 2803

சிவானந்த குருகுலம், காட்டாங்கொளத்தூர்
தொலைபேசி எண்கள்: (உள்ளூர்)954114 252345, 251815
(வெளியூர்) 04114 252345, 251815
Email:sivanand@md2.vsnl.net.in / sivanandaseva10@hotmail.com
web:www.sivanandagurukul.org&www.buildhope.org

பின்குறிப்பு: காசோலையாகவோ / டிராப்டாகவோ "சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்" என்ற பெயரில் தான் அனுப்ப வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம். நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.

I.T.EXEMP DIT (E) 2939(88)86-87 DT.17/7/2003

வலைபாயுதே



அட!

அமெரிக்கா, ஃப்ளோரிடா மாகாணத்தை சுழற்றியடித்துக் கொண்டிருக்கும் சூறாவளி பற்றிய சூடான செய்திகளை, புயல் வேகத்தில் தருகிறது hurricanes.net. தற்போதைய வானிலை நிலவரத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது (எல்லாம் சாட்டிலைட் உதவியுடன்) இப்போது வீசும் சூறாவளியினால் ஏற்படும் சேதாரம், இதற்கு முன் வீசிய சூறாவளிகள் பற்றிய ஆதாரங்கள் எல்லாம் கிடைக்கின்றன. சூறாவளிக்கு முன், பின், சூறாவளி சமயத்தில், பாதுகாப்பாய் இருப்பதெப்படி என டிப்ஸ்ஸும் கொடுக்கிறார்கள்.

(இதுதான் உண்மையான சூறாவளி சுற்றுப்பயணம்(?))

தண்ணிக் கஷ்டத்துல வெறும் தரையில நீச்சலடிக்கிற தமிழ்நாட்டு மக்கள், riversongs.com பார்த்தா ஏக்கத்துலேயே இளைச்சுடுவாங்க. ரொம்ப அழகான greeting தளம் இது. நீரோடை ஓடுற மாதிரி, அருவி விழுற மாதிரி, மீன் நீந்துற மாதிரி, தண்ணீரில் வளை வளையா பிம்பம் விழுற மாதிரி, குளுமையோட டிஸைன் பண்ணியிருக்காங்க ஒவ்வொரு கார்டையும். யாருக்காவது ரொம்ப ஸ்பெஷலா e-greeting அனுப்ப நினைச்சீங்கன்னா, தயங்காம இங்க வந்துடுங்க. 'எதை அனுப்ப, எல்லாத்தையும் அனுப்பிடலாமா'ன்னு கூடத் தோணும் உங்களுக்கு!

குட்டி மீனு! பெரிய்ய கனவு!

முதல் வாரத்திலேயே கலெக்ஷனை அள்ளியிருக்கிறது Shark Tale என்ற மற்றுமொரு 3D அனிமேஷன் படம். இப்போது பாக்ஸ் ஆபீஸ் நம்பர் ஒன் இதுதான். ஆஸ்கார் என்ற பேசும் மீனின், பெரிய்ய பெரிய்ய... கனவுகள்தான் கதை. படத்தில் காமெடிக்குப் பஞ்சமில்லையாம். படத்தைப் பற்றிய நியூஸ் இன்னும் வேணுமா? sharktale.comல போய் ஜாலியா குதிங்க!





ஜாலி எஸ்.எம்.எஸ்

ஒரு கல்யாணம் என்பது மூன்று ரிங்ஸ் (ring) சம்பந்தப்பட்டது. ஒன்று என்கேஜ்மெண்ட் ரிங்
இரண்டு வெட்டிங் ரிங்
மூன்று suffering.

- ப்ரெளஸர்


பிரெஸ்டீஜின் பரந்த குடும்பம்.

(உங்கள் உறவினர் எண்ணிக்கை அளவு இந்த குடும்பம் இல்லாவிட்டாலும், நிச்சயமாக உங்களுக்கு இன்னும் உதவிடும்)


ராயல் — 4 பர்னர்


ராயல் — 3 பர்னர்


ராயல் — 2 பர்னர்



பர்ஃபெக்ட்

பிரெஸ்டீஜ் பிரஷர் குக்கரைப் பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியும். இப்பொழுது இந்த குடும்பத்திலிருந்து இன்னும் பல அங்கத்தினர்களை சந்தியுங்கள். மிக ஸ்மார்ட்டான சமையலறை சாதனங்களின் பல வகைகள், பல மாடல்களில் ஒவ்வொன்றும் பார்க்க அழகான ஸ்டைலுடன் இருப்பது மட்டுமல்ல, சிறந்த திறமைசாலியும் கூட! உங்களுக்கு அதிக செலவும் வைக்காத அங்கத்தினர்கள் இவர்கள். சரி, இனி இந்த பிரெஸ்டீஜ் குடும்பத்தை உங்கள் இல்லத்துக்கு சந்தோஷத்துடன் வரவேற்கலாமே!


பிரெஸ்டீஜ் பவர் 750 வா.


மாரத்தான் — 3 ஜார்


மாரத்தான் EX - 30


ஹீரோ — 3 ஜார்

Prestige™

நீங்க இன்னும்
ஸ்மார்ட்டான கிச்சனுக்கு தயாரா?


Prestige SMART KITCHEN

At Prestige Smart Kitchen: Chennai: 742, Mount Road, Ph: 52140254/55/28523039. • No. 24, Amsaveni Complex, Rajalakshmi Nagar, Velachery, Ph: 22440705 • 1/2 Ground Floor, Luz Church Road, Mylapore, Ph: 52074351/52031819 • C/o. Nilgris, Doshi Gardens, Ground Floor, 321, Vadapalani, Ph: 23750424 • Y-220, II Avenue, Anna Nagar, Ph: 26287989 / 26266272. **Tirunelveli:** Junction Bus Stand: 6, Raja Bldg, Ph: 2333373. **Coimbatore:** R S Puram: Ph: 2544554. **Erode:** Brough Road: Ph: 2259815. **Madurai:** Valdi New Street: Ph: 3092109

Mudra South:Prestige:6767:04:TAM

அது கொலையைப் பொறுத்தது!

சிதம்பர ரகசியமாய் - சன் டீ.வியில் சஸ்பென்ஸ் ரகளை செய்து கொண்டிருக்கும் திகில் இயக்குநர் நாகாவைச் சந்தித்தோம். அவரது இரகசியமில்லாத பேட்டியிலிருந்து:



'சிதம்பர ரகசியம்' தீம் எப்படிக் கிடைச்சது?

எனக்கு எங்க வீட்டில, முன்னாடி ஓலைச்சுவடி பார்த்திருக்காங்க. அதனால நான் அதைப் பத்தி கொஞ்சம் சீரியஸா யோசிச்சேன். எல்லோருக்கும் ஓலை இருக்குன்னு சொல்றாங்க. அப்படின்னா, இப்பவே இந்தியாவில மட்டுமே நூறு கோடி பேருக்கு மேல, வெளிநாட்டில எத்தனை? இன்னும் எத்தனை கோடி மக்கள் பிறப்பாங்க, எல்லோருக்கும் ஓலை இருக்குமான்னு யோசிக்க ஆரம்பிச்சேன்.



அப்படி உண்மையா இருக்கும்ன்னா, அதை எழுத எவ்வளவு காலம் எடுத்திருக்கும், எத்தனை பேரு, எந்தக் காலத்துல எழுதியிருப்பாங்கன்னு ஆராய்ச்சி பண்ணியதன் விளைவுதான் இந்த சீரியல்.

எந்தளவுக்கு 'சிதம்பர ரகசியத்தை'க் கண்டுபிடிச்சிருக்கீங்க?

உண்மையான 'சிதம்பர ரகசியம்'னு எதையும் நான் தெரிஞ்சுக்கல. ஆனா பலப்பல புதுப்புது விஷயங்கள், சிதம்பரத்தைப் பத்தி தெரிஞ்சுக்கிட்டேன். போன வாரம்கூட ஒரு விஷயம் கிடைச்சது. அதாவது, ராஜராஜ சோழனோட அண்ணனை கொலை பண்ணிடறாங்க. கொலை செய்தவன் சேர நாட்டு எல்லையிலுள்ள ஒரு ஊர்ல போர்ப்பயிற்சி பெற்றவன்னு கேள்விப்பட்டு, அவனைக் கண்டுபிடிச்சு பழி வாங்கினாராம் ராஜ ராஜன். ஆனா ராஜராஜ சோழன்தான் இந்தக் கோயிலுக்கு அதிக அளவு மானியம் கொடுத்தவராம். இப்படிப் புது விஷயங்கள் நிறையக் கிடைக்குது.

சிதம்பரம் கோவில் பற்றி நீங்க ஆச்சரியப்படுற விஷயம்?

அந்தக் கோவிலே ஆச்சரியம் தான். உற்சவர், மூலவர் எல்லாம் ஒண்ணுதான். உள்பிராகாரமே வெட்ட வெளியா இருக்கும். ஆகம விதிகள்படி அமைஞ்சது இல்ல அது. பூஜைகள்கூட தமிழ் முறைப்படி கிடையாதே!

உங்க அடுத்த சீரியல் - தீம் - கிடைச்சுதா?

அடுத்தது சீரியஸா இல்லாம, ரமணி Vs ரமணி மாதிரி காமெடியா இருக்கும்.

சிதம்பர ரகசியத்துல கிடைச்ச வித்தியாசமான அனுபவம்?

ஒரு அடி உயரம், ஐந்து, ஆறு அடி அகலத்துல கூட சுவடிகள் பார்த்தேன். அது ஓலை மாதிரி இல்லாம, மரப்பட்டை மாதிரி இருந்துச்சு. எழுத்தே இல்லாம சில ஓலைகள் இருந்துச்சு. ஆனா அதைப் படிக்கிறப்போ எழுத்து தெரியும்னு சொல்றாங்க. 'உங்களுக்கு ஓலை தயார் பண்ணித் தரணுமா?'ன்னு கூட சிலர் கேட்கிறாங்க. அதே மாதிரி 'சிதம்பர ரகசியம்' இருக்கிற இடத்துக்குப் போனா, நமக்கான ஓலை, தானா வந்து விழுமாம். இதை நிறையப் பேர் பொய்யின்னு சொல்றாங்க. சிலர் நம்புறாங்க.

இந்த சீரியலோட டி.ஆர்.பி ரேட்டிங் எப்படி இருக்கு?

அது கொலையைப் பொறுத்தது. இந்த வாரம் நான் ஏதாவது மர்டர் பண்ணுனா, அடுத்த வாரம் ரேட்டிங் ஏறும். அந்த வாரத்துல மர்டரே இல்லாட்டி, ரேட் இறங்கிடும்.

மக்களோட வரவேற்பு எப்படி இருக்கு?

நிறைய மெயில் வருது. விதவிதமான சந்தேகங்கள் கேட்கறாங்க. அதுல நிறையப் பேர் 'நல்லாப் பாக்குற நாடி ஜோசியரோட அட்ரஸ் கொடுங்கள்'னு கேட்கிறாங்க. பேசாம நாடி ஜோசியம் ஆலோசனை ஆரம்பிச்சுடலாம் போல...!

- ஷிவ்

மென்பொருளும் வன்கொடுமையும்!



சென்னையின் முக்கியமான மனநல மருத்துவர்கள் சேர்ந்து ஒரு விஷயத்தை உறுதிபடச் சொல்லியிருக்கிறார்கள்.

ஸாஃப்ட்வேர் உற்பத்தித் துறையில் பணியாற்றுவோருக்கு மன இறுக்கம் காரணமாகப் பலவித மனநலக் கேடுகள் விளைகின்றன. இப்படியே தொடர்ந்தால், இத் துறையில் தங்களை இரவு பகலாகக் கரைத்துக் கொள்ளும் இளைய தலைமுறை அடியோடு வீணாகிப் போக வாய்ப்பிருக்கிறது.

மென்பொருள் எழுதுவதென்பது நிறைய நேரத்தைத் தொடர்ச்சியாகக் கோரும் பணி. தர்க்க ரீதியாக அறிவை ஒரு புள்ளியில் குவித்து, கேள்விகளெழுப்பியவாறே பதில் தேடிக்கொண்டே போக வேண்டும். பெரும்பாலும் ஏற்றுமதிக்கென மென்பொருள் தயாராவதால், உரிய நேரத்துக்குள், உரிய வகையில் திருப்திகரமாக அதைச் செய்து தரும் கட்டாயம் இருக்கிறது.

ஆக, மனிதன் படைத்துவிட்ட கம்ப்யூட்டரை இயக்குவதற்கு, அதே மனிதன், கம்ப்யூட்டரைக் காட்டிலும் அதிகமாக உழைத்துக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. கம்ப்யூட்டர் அடையாத சேதங்களை அவன் மனமும் மூளையும் அடைகின்றன.

இன்போஸிஸ் போன்ற ஒரு சில நிறுவனங்களில் இந்தப் பிரச்னையை எதிர்கொள்ள, ஊழியர்களுக்குக் கட்டாய ஓய்வு, கேளிக்கை அல்லது விளையாட்டு நேரத்தை ஒதுக்குகிறது நிர்வாகம்.

ஆனால், பெரும்பான்மை மென்பொருள் எழுத்தாளர்கள் மூளைக் களைப்பினாலும், மன இறுக்கத்தினாலும் பாதிக்கப்படும் அபாயத்தைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுள் பலர், சைபர் உலகின் மாயா ஜாலங்களில் மூழ்கி, யதார்த்த வாழ்வின் மேடு பள்ளங்களைச் சந்திக்க லாயக்கற்றும் போகிறார்களாம். விட்டுக் கொடுத்தல், மனித நேயம், அன்பின் வலிமை, வலி எதுவொன்றும் புரியாததால், மனித உறவுகளும், குடும்ப உறவுகளும் முறிந்து போய் இவர்கள் தனிமைக்குத் தள்ளப்பட்டு, நொந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றும் மருத்துவ உலகம் கவலை தெரிவித்திருக்கிறது.

மென்பொருள் உற்பத்தி நமது பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதால், தொழில் - வர்த்தக உலகம் சுதாரித்துக் கொண்டு இப் பிரச்னையைத் தீர்க்கும் என நம்பலாம்.


ஆனால் அறிவும் மனமும் முற்றிலுமாக பாதிக்கப்பட்ட ஏழை மன நோயாளிகளின் கதி என்ன...? சமீபத்திய செய்தி ஒன்று சிந்தையை வதைத்தது.

பீஹார் - ஜார்கண்ட் பிரிவினையால், பீஹாரிலிருந்த ஒரு மனநோய் மருத்துவமனை, ஜார்கண்ட் எல்லைக்குள் வந்துவிட்டது. அதிலுள்ள 231 பீஹாரி நோயாளிகளைத் தன்னால் பராமரிக்க முடியாது என்றும், பீஹார் அரசு அவர்களுக்கு மாதந்தோறும் தலா ஐந்நூறு ரூபாய் தர வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது ஜார்கண்ட் அரசு!

இந்த நிபந்தனையின் கொடூரத்தைச் சொல்வதா, அல்லது அதை இன்னும் நிறைவேற்றாமலே இருக்கும் பீஹார் அரசின் குரூரத்தைச் சொல்வதா...?

"ஜார்கண்டுக்கு நாங்கள் ஏன் பணம் கொடுக்க வேண்டும்...? பீஹாரிலேயே ஒரு மனநோய் மருத்துவமனை அமைக்கிறோம்..." என்று பீஹார் தரப்பில் பணி நடந்து வருகிறது.

ஈகோவைக் காட்டிலும் கொடிய மன நோய் ஏது!



டெஹல்கா பந்தாடல்!

டெஹல்கா விவகார விசாரணை திடீரென்று சி.பி.ஐ.க்கு மாற்றப்படுகிறது. இதுநாள் வரை அவ்விசாரணையை மேற்கொண்டு வந்த தனிநபர் கமிஷன் நீதிபதி புகானுக்குக் கூட, மாற்றம் குறித்து தெரிவிக்கப்படவில்லை. செய்தி வெளியான பிறகே அதிகாரபூர்வமாக அவருக்குத் தெரிவிக்கப்படுகிறது! அத்தனை அதிரடி அவசரம்!

மத்திய அரசு இவ்வாறு செயல்பட வேண்டிய அவசியம் என்ன?

டெஹல்கா விவகாரம் நடந்து முடிந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. இன்னமும் அது குறித்த ஆய்வு முடிந்து, இறுதி அறிக்கை வெளிவரவில்லை. இத்தனைக்கும், விவகாரம் ஏதோ சாமானிய லஞ்ச ஊழல் சமாசாரம் அல்ல...

டெஹல்கா என்ற இணையதள பத்திரிகை, 'அன்றைய மத்திய அரசு, ராணுவ தளவாடங்கள் வாங்குதலில் பல முறைகேடுகளை அனுமதித்துத் துணை போகிறது ; ராணுவ அதிகாரிகளும் இதற்கு விதிவிலக்கல்ல' என்பதை நிரூபிக்க முயன்றது. ஒரு கற்பனை நிறுவனம், அன்றைய பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடமும், தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்கள் சிலரிடமும் பேரம் பேசுவது போலும், கமிஷன் தர முன்வருவது போலும் 'செட் அப்' செய்து, அவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்காக, அந்த உரையாடல்களை ரகசிய காமிராவால் வீடியோ பதிவும் செய்தது.

நாட்டின் பாதுகாப்பையே பணயம் வைக்க முற்படுகிற ஒரு விவகாரத்தை விசாரிக்க, முதலில் ஒரு கமிஷன் போடப்பட்டு, அது




கல்கி



2004 அக்டோபர் 17
தாரண ஐப்பசி 1
மலர் : 63
இதழ் : 12

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



அறிக்கையைச் சமர்ப்பிக்கவிருக்கிற இறுதிக்கட்டத்தில் கலைக்கப்பட்டது. அப்புறம் புகான் கமிஷன். இப்போது அதுவும் கலைக்கப்பட்டு சி.பி.ஐ. விசாரணை! காரணம், புகான் கமிஷன், லஞ்சம் பெற்றவர்களை விட்டுவிட்டு, பத்திரிகைகள் கடைப்பிடிக்க வேண்டிய தார்மிக நெறிமுறைகள் பக்கம் கவனத்தைத் திருப்பியதுதான் என்று கூறப்படுகிறது.

முந்தைய என்.டி.ஏ. அரசு நியமித்த கமிஷனை, இன்றைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசு நம்பவில்லை! சி.பி.ஐ.தான் நடுநிலை விசாரணை நடத்த முடியும் என்று கருதுகிறது!


ஆகக்கூடி, விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது, முந்தைய ஆட்சியின் அரசியல் நோக்கினால் என்பது இன்றைய அரசின் அனுமானம்; இன்று சி.பி.ஐ.க்கு வழக்கு மாற்றப்படுவது, இன்றைய அரசின் அரசியல் நோக்கத்தினால்! 'சி.பி.ஐ.யின் செயல்பாட்டில் தலையிடாமல் இன்றைய மத்திய அரசு விலகி இருக்குமா?' என்கிற கேள்வியும் கூடவே எழுகிறது.

அரசியல் கட்சிகள் இவ்வாறு அனைத்து விஷயங்களையும், தங்கள் தங்கள் அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்த ஆரம்பிக்கும்போது என்ன ஆகிறது...?

எதிர் கட்சிக்குச் சிறிது காலம் சங்கடம் ஏற்படுத்தப்படுகிறது என்பது வேண்டுமானால் உண்மை. ஆனால், பிரச்னையின் தீவிரம் குறைந்துபோய், எல்லாமே அரசியல் நோக்கில் அணுகப்படுகிறது; எதிராளியை வீழ்த்தும் விளையாட்டாகிப் போகிறது.

ஆயுத பேரங்களில் லஞ்சம் விளையாடுவதால், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடாது என்பதற்குப் பதிலாக, பெர்னாண்டஸ் அண்ட் கோவை எப்படியாவது மாட்டி வைக்க வேண்டும் என்கிற தீவிரமே அதிகமாகிறது!

மற்றொரு பெரிய நஷ்டமும் இதனால் உண்டு. பொன்னான நேர விரயம்; ஏராளமான பொருள் விரயம். இத்தனைக் காலமாக இயங்கிய இரண்டு கமிஷன்களுக்கும் ஆன செலவு என்ன...? மக்களின் வரிப்பணம் எத்தனை தூரம் இதில் வீணாகியிருக்கிறது..? கமிஷன் இயங்கிய காலத்தைப் பணமாக மதிப்பிட்டால், இன்னும் எத்தனை மடங்காக அந்த விரயம்



அதிகரிக்கும்...?

இத்தனை நேரமும் பணமும் விரயமான பிறகும், விவகாரம், ஆரம்பித்த இடத்திலிருந்து அரை அங்குலம்கூட நகராமல் கிடக்கிறது!

இனி சி.பி.ஐ. விசாரித்து, வழக்கு ஜோடித்து, அதன்பிறகு நீதிமன்றம் அதை அனுமதித்து, விசாரித்து அப்புறம் தீர்ப்பு வழங்குவது என்பது, கானல்நீர் போல்தான் தோன்றுகிறது. (கற்பனை நிறுவனத்துடன் பேரம் பேசப்பட்டது என்பதால், வழக்கு தொடர்வதற்கான வாய்ப்பே இல்லை என்றும் கூறப்படுகிறது.)

இவ்வாறு நீதி பரிபாலனத்தில் அரசியல் புகுந்து கொள்ளும்போது, மக்களின் வரிப்பணத்தோடு, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற நேரமும் விரயமாகிறது. மக்களின் ஏராளமான வழக்குகள் காத்திருக்க, 'உயரிடத்து ஊழல்'களை விசாரிக்கவே நீதித்துறைக்கும், காவல்துறைக்கும் நேரம் சரியாய் இருக்கிறது.

'ஜெயலட்சுமி வழக்கில் சி.பி.ஐ. விசாரணை கூடாது' என்று உச்ச நீதிமன்றம்வரை சென்று முறையிடுகிறது தமிழக அரசு.

'காவிரி ஆணையம் புதிதாக நிறுவப்பட வேண்டும்' என்று உச்சநீதிமன்றத்திடம் முறையிடுகிறது கர்நாடக அரசு.

'தமது பேரிலுள்ள சொத்துக்குவிப்பு வழக்கு கர்னாடகாவுக்கு மாற்றப்படக்கூடாது' என்று முறையிட்டு அதனைத் தாமதப்படுத்த முற்படுகிறார் ஜெயலலிதா.

இப்படியே அரசியல்வாதிகளின் இஷ்டத்துக்கும் சௌகரியத்துக்கும் நீதியின் செயல்பாடு தாமதப்படுத்தப்படுகிறது ; திசை திருப்பப்படுகிறது. பொது வாழ்வில் தவறு செய்வோர் தண்டனை பெறுவதுமில்லை ; சராசரி மக்களுக்கோ வரிப்பண விரயம் தவிர, அவர்களுடைய வேறு பல வழக்குகள் தாமதமாகி, நீதி கிடைப்பதே அரிதாகிறது.

நீதித்துறையில் இதற்கெல்லாம் விடிவுகாலம் பிறக்கிறதோ இல்லையோ, ஒன்றுமட்டும் நிச்சயம்... இம்மாதிரி வழக்குகளைத் தாமதப்படுத்தவும், சட்டத்தை வளைக்கவும் முற்படும் அரசியல்வாதிகள், "அப்பன் குதிருக்குள் இல்லை" என்று அறிவித்து, தங்கள் தங்கள் குற்றங்களைத்தான் உறுதிப்படுத்துகிறார்கள். இதை மக்கள் புரிந்து கொண்டால் சரி! ●



தேங்காய், மாங்காய், பட்டாணி சுண்டல்!

சின்னநிலா சுப்ரமணி

கடற்கரையில் தன் நண்பன் முரளியோடு உட்கார்ந்திருந்தான் சுகுமார். முரளியின் கையில் கேமிரா.

"தேங்காய்... மாங்காய்... பட்டாணி... சுண்டல்" என்று குரல் கொடுத்துக் கொண்டு போன சிறுவனை அழைத்தான் சுகுமார்.

"தம்பி. உன் பேர் என்ன?"

"சரவணனுங்க."

"எதுவரைக்கும் படிச்சிருக்கே?"

"ஏழாங்கிளாஸ் சார்."

"ஒரு நாளைக்கு சுண்டல் எவ்வளவு ரூபாய்க்கு விற்கும்?"

"ஐம்பது, அறுபது ரூபாய்க்கு விற்கும் சார்."

"போலீஸ் தொந்திரவு இருக்குமா?"

ஆமாம் சார்... இவ்வளவு கேட்கறீங்களே, நீங்க பத்திரிகைக்காரங்களா? டீவிகாரங்களா?

"இரண்டுமில்லை. நான் படிச்சுட்டு வீட்டுல வேலையில்லாம இருக்கேன். அதான் சுண்டல் வியாபாரம் பண்ணலாம்னு பார்க்கிறேன்."



புக்பேங்க்

சுந்தரர் காட்டிய சிவன்
- தொகுப்பு க. சீனிவாசன்

'வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி' என்று இறைவன் உருவை திட்டவட்டமாகக் கூற இயலாத அடியார்களே அதிகம். இதில் பரமன் உருவை நெஞ்சில் பதியும்படி பாமாலை தொடுப்பது, சுந்தரருக்கு எளிதில் சாத்தியமானது. காரணம், நட்பு. காதலியிடம் தமக்காகத் தூது செல்லவும் பரமனை ஏவும் நட்பும், உரிமையும் காட்டும் பக்தியின் கோணமே வேறுதான். நட்பின் பார்வையில் ஈசனைக் காட்டும் ஆன்மிக நூல்.

அறுவகை வழிபாட்டு ஆய்வு நூலகம், சுந்தரி இல்லம், 6 (பிபி-2) பார்க் வியூ தெரு, தென்னூர், திருச்சி - 620 017. விலை ரூ.20

திராவிட்
- என் சொக்கன்

ஷோயப் அக்தர் இடி இடித்தாலும், ஷேன் வார்னே மின்னல் வெட்டினாலும், ஸ்ரீலங்கா ஸொய்சா மழை பொழிந்தாலும், ஆடாமல் அசையாமல் அவர்களுக்கு நெட் பிராக்டீஸ் கொடுக்கும் இந்திய கிரிக்கெட் பெருஞ்சுவர் ஒன்று உண்டென்றால், அது இவர்தான். விக்கெட்டின் முன்னாலும் பின்னாலும் ஆடவல்லான், டிராவிட்டின் கிரிக்கெட் வாழ்வைக் கூறும் தொகுப்பு. கற்றுக் கொள்பவர்களுக்கு ஓர் அகராதி.

கிழக்கு பதிப்பகம், 16, கற்பகாம்பாள் நகர், மயிலை, சென்னை - 4. விலை ரூ.50

கதைப் புதையல்
- திருவரங்கம் இசைப்பித்தன்

போகிற போக்கில் பார்க்கிற நிகழ்வுகள், வெறும் சம்பவங்களாய்த்தான் தெரியும். உள்ளே பொதிந்திருக்கும் கதைகள், கற்பனையும் ரசனையும் உள்ளவருக்கே புரியும். யதார்த்தங்களில் மூழ்கி கதைப் புதையலெடுத்த கற்பனைகளின் தொகுப்பு. 'கல்கி' உள்பட பல்வேறு இதழ்களில் வெளியான, ஆக்கம் அதிகமின்றி, ஓரளவு தாக்கம் ஏற்படுத்தும் சிறுகதைகள்.

பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14. விலை ரூ.25

சதாம் - மரணத்தின் நிழலில்
- பி.ஜே. ராஜய்யா

"இன்று மும்மாரி குண்டுமழை பொழிந்ததா? நம் தற்கொலைப்படைத் தம்பிகள் நலமா? இன்று எத்தனை தலை?" என்று கேட்கும் நிலைக்கு ஈராக்கை ஆளாக்கிய சதாமையும், அமெரிக்க - ஈராக் போருக்கான காரணங்களையும், அதிகாரம் ஓரிடத்தில் குவிந்து சர்வாதிகாரமாவது, அமைதிக்கு எத்தனை ஆபத்து என்பதையும் விவரிக்கும் அபாய நூல்.

நக்கீரன் பப்ளிகேஷன்ஸ், சென்னை - 14. விலை ரூ.50

- விஷ்வக்

கண்ணகி வந்த ஊர்-1

மதுரை எரிந்து கொண்டிருந்தது
ஏமாற்றப்பட்ட
ஏழையின் வயிறு போல....

மதுரை புகைந்து கொண்டிருந்தது
நண்பனால் கைவிடப்பட்ட சக
நண்பனின் இதயம் போல...

கண்ணகி! - தீயின் தோழி!
கற்பின் வேல்!

கண்ணகியின் சினம்
மதுரை மாநகர் முழுக்க
புகை மண்டலமாய்த் தெரிந்தது!

அழுது அழுது
அகன்ற கருவிழிகள்!
குங்குமம் கலைந்த
குரோதமான முகபாவம்!
அதறிப் பதறும்
ஆறடிக் கூந்தல் சிகை!
கர்ஜனையாய்க் கேட்ட
காட்டுச் சிரிப்போசை!

சிலம்புகள் தடம் பட்டு
பதிந்துபோன பாதங்கள்!

கண்ணகி என்ற எரிமலை
சுந்தர மதுரையை
சுட்டுப் பொசுக்கி விட்டு
புகார்நோக்கி நடந்ததாய்ப்
புலம்புகிறது!

அந்த நியாய தேவதை
நீண்டு நடந்த வழியெல்லாம்
வயல்வெளி கருகியதாய்
வசந்தங்கள் உதிர்ந்ததாய்
நாட்டுப்புறப் பாட்டுண்டு!

நடந்தாள் கண்ணகி நீலியாக
நடந்து கொண்டிருந்தாள் கண்ணகி
காளியாக...

கண்ணகி கடந்த வழியில்
ஓர் ஊர் இருந்தது.
சிறுவாச்சூர் என்கின்ற
சிற்றூர்.

பெரம்பலூரில் இருந்து
தெற்கே அடித்த தென்றல்
எட்டுக்கல் தொலைவில் நின்றால்
எதிர்வரும் ஊரே
சிறுவாச்சூர்.

புழுதி படியாத
பூங்காவனங்களும்
புங்க மரக்கிளைமேல்
புறாக் கூட்டங்களும்
ஊருக்கு உயிர் சேர்த்தன!

கொலுசோசை இல்லாத
படித்துறையும் வீண்!
குயிலோசை இல்லாத
மாங்கிளையும் வீண்!
சிறுவாச்சூரின்
குயில் தவ்வும் மாங்கிளைகளில்
குறுகுறுப்பாய் பூப்பறித்து
இஷ்ட தெய்வம் பிரார்த்தித்து
'ஒருத்தியாய்' தனித்திருந்தாள்
ஒருத்தி!
செல்லி என்னும்
செண்பக மல்லி.

இளம் வயது பூக்காடு
அவள் இதயத்திற்குள்ளோ
இறைவனின் வழிபாடு!

மௌன விரதங்களும்
ஞான சுரதங்களும்
செல்லியின் விழிமணிகள்!

பா. விஜய்



செல்லி அந்த ஊர்க் கோயிலில்
வசிப்பவள் - வாழ்பவள்!
கோயிலைச் சுற்றிலும்
கருவேல முள்காடு!

முட்காட்டுப் புதரினுள்ளே
பக்தியின் மாநாடு!

துளசி பறிப்பது
தும்பைப்பூ தொடுப்பது
ருத்ராட்சம் வகுப்பது
பாராயணம் உகுப்பது
செல்லியின் செயல்பாடுகள்!

செல்லி என்ற வெள்ளை அருவி
கோயில் மாடத்தில்
தீபமேற்றும் பக்தியழகில்
ஊரும் ஒளிர்ந்தது ஜோதியில்....!

எந்த நதியையும்
அசுத்தம் செய்ய
அழுக்குப் பிடித்தவர்கள் சிலர்
ஆயத்தமாவார்கள் தானே!

செல்லி என்ற புனிதப்பூ
பக்தி வனத்தில் இதழ் விரித்து
நறுமணம் வீச-ஒரு
நல்ல பாம்பு விழித்தது!

குயில் கட்டிய கூட்டுக்குள்
ஆந்தை புகுந்தது அதிகாரமாய்...
ஒரு நாள் ராப்பொழுது!
அல்லிவிழிக்கும் பௌர்ணமி!



நிலா பூமியின்
நேர்க்கோட்டில் வரும் நேரம்.
அந்த அந்தகாரக் காட்டினுள்ளே
கேட்டதொரு உடுக்கை ஒலி!

வௌவால்களின் சிறகிசைப்பு
வயல் தவளைகளின் பேச்சுவார்த்தை
வல்லூறல்களின் பஞ்சாயத்து
இரவை கிடுகிடுக்க வைக்க...

காட்டுக்குள் கேட்டது ஒலி!
காது குடையும் உடுக்கை ஒலி!

மார்பினில்
மண்டை ஓட்டு மாலை!
தோள்களில்
தொங்கிய ஜடாமுடி!
கைகளில்
சுக்கு மாந்தடி!

வாயில்
சூ மந்திரக்காளி!

காளிங்கன் என்ற மாந்திரீகன்!

கன்னிகளை வேட்டையாடும்
காமவேகன்!

அன்றிருந்து இன்றுவரை
எந்திர தந்திர மந்திரவாதியெல்லாம்
'கன்னி' சாமியார்களாகவே
காலத்தைத் தள்ளுகின்றனர்!

காளிங்கன் கையில்
பில்லி சூனிய சித்துக்கள்!
நட்சத்திர ஒளி பிசிறும் நள்ளிரவில்
ஊர்க் கோயிலுக்கு வந்தான்
காளிங்கன்.

செல்லி என்ற
செழுந்தாமரை
கனவெல்லாம் துதிபாடி
கண்கவிழ்ந்து துயில...

அவள் அழகின் வெப்பத்தில்
தாகமானான் காளிங்கன்!
அவள் இளமையின் உஷ்ணத்தில்
தகனமானான் காளிங்கன்!

செல்லி என்ற விரத நிலாவை
செல்லி என்ற பக்திப்பாலை
தீண்டிட முனைந்தது சர்ப்பம்!

பெண்மையின் சிறப்பே இதுதான்!
உறங்கும் நேரத்திலும் தன்
மழலையின் சிணுங்கல் கேட்டால்
உதறி எழுவாள் - தன்
மாராப்பு விலகிச் சென்றால்
பதறி எழுவாள்!

காளிங்கனின் கண்பார்வைகள்
தேள்கொடுக்காய் செல்லியின்
தேகமெங்கும் தடம்பதிக்க...

வெடித்தெழுந்தாள்! - மிகத்
துடித்தெழுந்தாள்!

மாடப்புறா!
மாந்திரீகக் கழுகு!
சூடாமணி விளக்கு!
சூறாவளிக் காற்று!

மந்திரமா?
மானமா?

(தொடரும்)



“சிறிய வியாபாரியாக இருந்த நான் பெரிய நிறுவனத்தின் முதலாளியாக உயர வழி காட்டியது ஸ்ரீராம் சிட்ஸ்!”

“என்னுடைய படிப்பிலேயும், தொழில் வளர்ச்சியிலேயும் ரொம்ப அக்கறை காட்டி வளர்த்தார் எங்க அப்பா. வியாபார வளர்ச்சிக்கு முதலீடுகளைத் திரட்டவும், தேவைகளைச் சமாளிக்கவும், ஸ்ரீராம் சிட்ஸ் எப்படி உதவும் என்பதை எடுத்துச் சொன்னார். நானும் ஸ்ரீராம் சிட்ஸ் உதவியுடன் வியாபாரத்தை விரிவு செய்து, ஒரு தொழில் நிறுவனத்தின் முதலாளியாக உயர்ந்து விட்டேன்.



மூன்று தலைமுறைகளின் பாசப் பிணைப்பு

என் பிள்ளைகளையும் வெளிநாட்டில் படிக்க வைத்து திருமணம் செய்து வைத்து விட்டேன். மூன்று தலைமுறைக் குடும்பங்களும் ஒரே வீட்டில் ஒரே குடும்பமா இருக்கோம். ரொம்ப சந்தோஷமா இருக்கு. முப்பது வருஷமா எங்க குடும்பத்திலே இன்னொரு மெம்பர் ஸ்ரீராம் சிட்ஸ்!”

ஸ்ரீராம் சிட்டுத் திட்டம்: 3000 ஆண்டுகளாகப் புதுமைப் பொலிவுடன் திகழும் நிகரற்ற சேமிப்புத் திட்டம். சேமிக்கவும், அதிலிருந்தே கடன் பெறவும் வகை செய்யும் இருவழித் திட்டம். ஏல உச்ச வரம்பு 40% ஆக உயர்ந்ததால், கசறுத் தொகை (Dividend) அதிகமாகி வருகிறது.





ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்: ♦ 30 ஆண்டுகளாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழி காட்டி ♦ ரூ.14,000 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா ♦ பலருக்கு வேலை வாய்ப்பு ♦ தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்.

விஜயதசமி 2004: வெற்றிப் பயணத்தின் துவக்க விழா. ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு இன்றே வாருங்கள். விஜயதசமி விழாவில் பங்கு பெறுங்கள். ஸ்ரீராம் சிட்ஸ் குடும்பத்தில் இணைந்து, வாழ்வின் வெற்றிப் பயணத்தைத் துவக்குங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ்

தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு,
அண்ணா சாலை, சென்னை 600 002. போன்: 5201 1833

WORDCRAFTS

முப்பது ஆண்டுகளாகத் தொடரும் நிகரற்ற சேவை



ஒரு பெண் தொழிலதிபர்... அவரிடம் முன்னாள் சிறைக் கைதிகளும் வேலை செய்கிறார்கள். ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரிகளும் வேலை செய்கிறார்கள். "அட"! என்று ஆச்சரியப்பட வைக்கும் செய்திக்குப் பின், சின்னதாய் ஒரு ஃப்ளாஷ்பேக்! அவரே சொல்கிறார்!

"நான் அப்போது கூரியர் சர்வீஸ் நிறுவனம் நடத்திக் கொண்டிருந்தேன். என்னிடம் ராஜன் என்ற இளைஞன் வேலை செய்துகொண்டு இருந்தான். வாட்ட சாட்டமாக, கறுகறுப்பாக இருப்பான். ஒருநாள் வடபழனி அருகே காரில் போய்கொண்டிருந்தபோது, திடீரென்று டிராஃபிக் ஜாம்! எட்டிப் பார்த்தால், ராஜன் சினிமா ரவுடி போல, நாலைந்து குண்டர்களைப் பந்தாடிக் கொண்டிருந்தான். அவனைப் பற்றி விசாரித்தபோது அதிர்ந்து போனேன். அவன், அப்பா ஒரு பிக்பாக்கெட் ஆசாமி! ராஜன் மீது தனிப்பட்ட குற்றப்பதிவு எதுவும் இல்லை என்றாலும், அடிதடிக்குப் பெயர் போனவன் என்றும் தெரிந்தது. மறுநாள் அவனைக் கூப்பிட்டு, அன்புடன் எச்சரித்து, அறிவுரைகள் சொல்லி அனுப்பினேன். அடுத்த சில நாட்கள் ஆளே வரவில்லை. விசாரித்ததில், கஞ்சா கடத்தல் கேஸில் அவனை 'உள்ளே' வைத்திருப்பதாகத் தெரிந்தது.

"அவனுடைய அம்மாவும் தங்கைகளும் என்னிடம் வந்து அழுது புலம்பவே, ஸ்டேஷனுக்குப் போய் பார்த்தேன். அப்போதுதான் விஷயம் என்ன என்றே தெரிந்தது. எங்கள் அலுவலகத்தில் பணி புரிந்தது போக, மிச்ச நேரத்தில், தனியாருக்கு வேலை செய்திருக்கிறான். அவர்கள், இவனை, கஞ்சா கடத்தப் பயன்படுத்தியிருக்கிறார்கள். மற்றபடி, ராஜனுக்கு, தன்னிடம் தரப்பட்டுள்ள பார்ஸலில் கஞ்சா இருக்கும் விஷயமே தெரியாது.

"படு சிரமப்பட்டு, அவனை ஜாமீனில் கொண்டு வந்தோம். அசாதாரண முயற்சிகள் செய்து, ராஜன் நிரபராதி என நிரூபிக்கப்பட்டது. வெளியே வந்த ராஜனை, மனம் திருந்தியவனாக, புது மனுஷனாகப் பார்த்தபோது, ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

"நாளையிலேயிருந்து வேலைக்கு வா" என்றபோது,

"அம்மா... அடி தடி, போலீஸ்னு போறவங்களுக்கு வேலை கொடுக்கவே ஆயிரம் யோசனை பண்ற இந்த உலகத்துல, கிரிமினலான என்னை மறுபடி வேலைக்குச் சேர்த்துக்கிட்டீங்க! நீங்க மட்டும் கூப்பிட்டு வேலை தரலேன்னா, நான் மறுபடி பிக்பாக்கெட், அடிதடின்னு போயிருப்பேன். என்னை, எனக்கே நேர்மையான மனுஷனா காட்ட ஒரு சந்தர்ப்பம் கொடுத்துட்டீங்க" என்று கதறியே விட்டான்.

"நானூறு ரூபாய் சம்பளத்துக்குச் சேர்ந்த ராஜன், இன்று பத்தாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறான். கல்யாணமாகி, இரண்டு பெண் குழந்தைகளுடன் கௌரவமாக வாழ்கிறான். ராஜனைப் போல எத்தனையோ பேர்! ஒரு நிமிஷ உணர்ச்சிக் கொந்தளிப்பில், குற்றங்கள் செய்து விடுகிறார்கள். அவர்கள் வெளியே வரும்போது, சமுதாயம் கடுமையாக அவர்களை நிராகரிக்கிறது. அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கிடைப்பதில்லை. பெண்களுக்குத் திருமணமாவதில்லை. வேறு வழியில்லாமல், மறுபடி குற்றங்களில் ஈடுபடுகிறார்கள். சமுதாயம் சீரழிகிறது... 'நம்முடைய நிறுவனத்தில் இது போன்றவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்தால் என்ன' என்று தோன்றியது அதுதான்

ஆரம்பம்.

"எங்களுடைய 'ஸ்பெக்ட்ரா சர்வீஸஸ்' என்ற மேன் பவரிங் நிறுவனத்தில், நிறைய முன்னாள் சிறைக் கைதிகள் வேலை செய்கிறார்கள். தோட்டவேலை, வீட்டு வேலை, டிரைவர், வீடு பராமரிப்பு போன்ற பல தரப்பட்ட பணிகளில், ஏற்ற வேலை தந்தால், மிகச் சிறப்பாக வேலை செய்வார்கள் என்று தோன்றியது. இந்த யோசனையை நான் சொன்னதும் மிகவும் மகிழ்ந்து, வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து, மூத்த காவல்துறை அதிகாரிகள் உதவினார்கள். குறிப்பாக இன்றைய கமிஷனர் நடராஜ், உதவி கமிஷனர் சைலேந்திர பாபு, டெபுடி கமிஷனர் முருகன், சப் இன்ஸ்பெக்டர் தளவாய் சுந்தரம் போன்



காவலர்!

றவர்களின் ஆதரவுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்."

தனித்தன்மையுடன் ஈடுபட்டுள்ளனர். இதுவரை எந்தவிதப் புகாரும் வந்தது இல்லை" என்றார் பெருமிதத்துடன்...

"ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரிகளையும் வேலைக்குச் சேர்த்துக் கொள்கிறீர்களே!"

"காவல் துறையில் ஹெட் கான்ஸ்டபிள், சப் இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் பணிக் காலத்தில் அதிகார பலத்துடன் வாழ்ந்திருப்பார்கள். ஆனால் ஓய்வு பெற்றதும், ஒருவிதப் புறக்கணிப்பு மனப்பான்மையில் புழுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய தகுதிக்கும் திறமைக்கும்

"போலீஸ்காரர்களுக்கு என்ன மாதிரியான வேலை?"

செல்ஃபோன் பில் கட்டாமல் டிமிக்கி தரும் ஆட்களிடம் பதமாகப் பேசி, பழைய பாக்கியை வசூல் செய்வதுதான். கிட்டத்தட்ட பன்னிரண்டு ஆயிரம் ரூபாய் சம்பளம். ஓய்வு காலத்தை, கௌரவமாகவும் பயனுள்ளதாகவும் கழிக்க, இதைவிடச் சிறந்த வழி உண்டா என்ன?" என்கிறார்.

'ஸ்பெக்ட்ரா சர்வீஸஸ்' அலுவலகத்

சினி மினி!

கமல் - சிங்கீதம் சீனிவாசராவ் - கிரேஸி மோகன் கூட்டணி இணையத் தயாராகி விட்டது, டைட்டில் - மும்பை எக்ஸ்பிரஸ்!




'சுள்ளான்' கொடுத்த சூட்டில் ஆக்ஷன் படக்கதைகளை அறவே தவிர்த்து வருகிறார் தனுஷ்.



செப்டம்பரில் ரிலீஸாகவிருந்த 'மன்மதன்' தீபாவளிக்குத் தயாராகிறது.





'சென்னையில் ஒரு மழைக்காலம்' நின்று போனாலும் விரைவில் சூர்யா - கௌதம் கூட்டணி கைகோக்கவிருக்கிறது.

- கன்


தின் வரவேற்பறையில் இரண்டு தகவல் பலகைகள் உள்ளன. ஒன்றில் '420' என்றும் இன்னொன்றில் 'அழகிய தீயே' என்றும் காணப்பட்டது.

"இதுவா? வாடிக்கையாளர்களிடம் பணத்தை வசூல் செய்துவிட்டு, அலுவலகத்தில் ஒப்படைக்காமல், கம்பி நீட்டியவர்களின் பெயர்ப் பட்டியல் விவரம் '420' பலகையில் எழுதப்படும். கூச்சம் தாங்காமல் தாங்களாகவே வந்து பைசல் செய்து விடுவார்கள். இன்னொன்று, அந்த மாதம் நாங்கள் இலவசமாகத் திரையிட்டுக் காட்டும் சினிமா பற்றிய விவரப் பலகை! நாள் முழுக்க வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு ஒரு ரிலாக்ஸேஷன் வேணாமா! அதுதான் குடும்பத்துடன் அழைத்து, பப்ஸ், பாப்கார்ன் வாங்கிக் கொடுத்து, சினிமா பார்க்க வைக்கிறோம். இதில் இன்னொரு நன்மையும் உண்டு. என்னிடம் பணி புரிபவர்களிடம் ஏதாவது குற்றம், குறை இருந்தால், பெற்றோரோ, மனைவியோ என்னிடம் தெரிவிக்க, இது நல்ல சந்தர்ப்பமாக இருக்கும்" என்றார்.

ஏகப்பட்ட சொத்து இருந்து, நிறைய நேரமும் இருந்தால், பார்ட்டிக்குப் போகலாமா, ஷாப்பிங் போகலாமா என்று யோசிக்கும் மேல்தட்டுப் பெண்களிடையே சாதாரண மக்களுக்காகவும் யோசிக்கும் வித்தியாசமான இந்தத் தொழிலதிபர் யார் என்று தெரிகிறதா...?

பாரதியாரின் பாடல்களை முழு நீள நாட்டிய நிகழ்ச்சிகளாக அளித்து, பிரபலப்படுத்தி வரும் புகழ் பெற்ற பரத நாட்டியக் கலைஞர் ஷோபனா ரமேஷ்தான்!

- ஐஸ்



கருத்து : ரேஞ்சர் சன்

வள்ளல்

அல்லிநகரம் தாமோதரன்

அந்த அண்டா வயித்துக் கிழவர் செத்துப் போய் விட்டதாகச் சற்று முன் சொல்லிவிட்டுப் போயிருந்த ஹோட்டல் சப்ளையர் ஒருவனின் வார்த்தைகள், 'வள்ளல்' வேதாச்சலத்துக்குள் குட்டி யுத்தமே நிகழ்த்திக் கொண்டிருந்தது. 'இது நிசமா... இல்லேன்னா, வெறுங்கனவா?' என்ற நெக்குருகல். நெஞ்சுக்குள் கணப்பொழுதில் நிகழ்கிற வேதனைக் கனேபரம். 'அடப்பாதரவே' என்ற அனுதாப விசும்பல். "என்னப்பா.... நெசமாத்தேஞ் சொல்றீயா?" என்று, மீண்டும் ஒரு முறை அந்தச் சப்ளையரைப் பார்த்துக் கேட்டார்.

"ஏந் தலைச் சத்தியமா!" என்றான் அந்த சப்ளையர் - தலைக்கு மேல் கை வைத்தபடி.

"ஏதாச்சும் விசேஷ வீட்ல போயி மூக்குப் புடிக்கத் திங்கையில, சோறு தொண்டையில விக்கிச் செத்துப் போனாலும் போயிருக்கும் பெரிசு" - நக்கலாய்க் கூறி தெற்றுப் பல்லிளித்தான் இன்னொரு சப்ளையன்.

ஆனாலும் வேதாச்சலத்துக்கு மட்டும் கிழவர் பற்றிய ஒருவித வேதனை மனசுக்குள் ரம்பம் போட்டுக் கொண்டேயிருந்தது. அனுதாபப் பீறிடலுடன் அங்கிட்டும் இங்கிட்டுமாக நடந்தபடியே இருந்தார்.

அந்தக் கிழவர் தினமும் வேதாச்சலத்தின் 'ஹோட்டல் வள்ளலி'ல்தான் சாப்பிட வருவார். அவரைப் பார்க்கிற ஒவ்வொரு கணமும், நெஞ்சுக்குள் ஆற்றாமைச் சூறாவளி சுழன்றடிக்கும். இணக்கிமின்றிக் கசக்கும் மனச் சுணக்கம். 'நீ இனிமே இந்த ஹோட்டல்ல சாப்பிட வர வேண்டாம்யா.' என்று திக்குச்சித் தகிப்பில் பிளிறத் துடிக்கும் நாக்கு. தொண்டை வரையில் வந்துவிடும் வார்த்தைகளை, ஒரு வித அனுதாபம் நங்கூரமிட்டு நிறுத்தி விடுவதே தினமும் வாடிக்கையாகிவிட்டிருந்தது.

நகரின் ஒதுக்குப் புறத்தில் முக்கியச் சாலையில் இருந்தது வேதாச்சலத்தின் ஹோட்டல். தினமும் மதியம் ஒரு வேளை மட்டுமே சாப்பிட வருவார் அந்தக் கிழவர். அவரைப் பார்த்ததுமே "வர்றானப்பா அண்டா வயத்துக்காரன்" என்று எரிச்சல் படுவார் வேதாச்சலம்.

"சப்ளையரே! பெரிசுக்கு எல கொண்டாந்து போடுப்பா. இன்னுஞ்சித்த நேரத்துல வாடிக்கையாச் சாப்டற ஆளுங்க நெறைய்ய வந்துருவாங்க. அதுக்குள்ளாரச் சாப்ட்டுட்டுப் போவட்டும். தாடியும் அழுக்குச் சட்டை, வேஷ்டியுமா இந்தாளு சாப்டுறதப் பாத்தாலே, டீசெண்டான யாரும் சாப்பிட ஒவ்வாமெ திரும்பிப் போய்ருவாங்க." என, பாறை ரக மனசு நீராய் உருகி உத்தரவு போடுவார்.

சப்ளையர்கள், அந்தக் கிழவர் சாப்பிடுவதற்காக மையப்பகுதியிலுள்ள உணவருந்தும் மேசையின் மீது தப்பித் தவறி இலையைப் போட நேருகையில்,

"ஏய்... இந்தா பாருப்பா! இவரு பெரீய்ய தொரையாக்கும்: மத்தியில ஒக்கார வெச்சு, மெத்த மரியாத குடுக்குறதுக்கு? ஒரு ஓரமா ஒக்காரச் சொல்லி சோத்தப் போட்டுத் தொல!" என்று கனத்த குரலில் கொந்தளிப்பார் வேதாச்சலம்.

சப்ளையரும், "ந்தா... பெரிசு... எழுந்திரிச்சு ஓரமாய் போயி ஒக்காரு. ஒன்னால எங்களுக்கும் வசவு" என்று இளக்காரமாய் எகிறி முடுக்க,

அவரும் ஒரு மெல்லிய இருமலுடன் எழுந்து, தளர் நடையுடன் போய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொள்வார். "எனக்கென்னப்பா... காடு வா, வாங்குது; வீடு போ, போங்குது. இனி என்ன கவுரதை? எங்கேன்னாலும் ஒக்காந்து வயித்த ரொப்பிட்டுப் போக வேண்டியதுதே" என்றும் கூறுவார்.



கடந்த ஒரு மாத காலமாகத்தான் கிழவர் 'வள்ளல்' வேதாச்சலத்தின் ஹோட்டலில் சாப்பிட வருகிறார். ஆறடிக்குக் குறையாத உயரம். படிய வாரிய நரைத்த தலை, தாடி. பகுதிக்கும் மேல் பற்கள் காலாவதியாகிவிட, அரைப் பொக்கைவாய். அழுக்குப் படிந்த கதர் வேட்டி, சட்டை, முதுமைச் சுருக்கங்கள் விழுந்த முகத்தில், தடிமனான சோடாபுட்டிக் கண்ணாடி. கையில் ஊன்று கோல் என, பார்ப்பதற்கே அருவெறுப்பான கோலத்திலிருப்பார். என்றேனும் சலவை செய்த உடையை அணிந்திருப்பதைப் பார்க்க முடியும். அப்படி சலவை செய்யப்பட்ட உடையணிந்து வந்திருந்த ஒரு நாளில், ''என்னா பெரிசு... நேத்து ஆத்துல துணி தொவைச்சிட்டிருந்தாப்ல இருந்துச்சு." என்று சப்ளையர் ஆதிமூலம் அவரிடம் வினவியதிலிருந்து, அவருடைய உடைகளை அவரே சலவை செய்து கொள்கிற சங்கதி புலப்பட்டிருந்தது வேதாச்சலத்துக்கு.

ஒரு நாள் மதியம் சாப்பிட்டுவிட்டு, பத்து ரூபாய் மட்டுமே தந்துவிட்டு, "பாக்கி பத்து ரூவா நாளைக்கித் தர்றேன். இன்னிக்கி ஏங்கிட்ட அவ்ளோதேன் இருக்குது'' என்று கூறி சிநேகப் புன்னகையுடன் கிழவர் நகர்ந்து போயிருக்க, மருண்டு விழித்தார் வேதாச்சலம். "இரண்டாளுக்குச் சோத்து மூக்குப் புடிக்கத் தின்றாப்ல. அதுலேயும் பாதி கடனா? சாப்பிட வர்றதே மதியம் ஒரு நேரந்தேன். அதக் குடுக்கக் கூடவா வக்கத்துப் போச்சு? நா பெரிய்ய இளிச்ச வாயன்னு, ஏ நெத்தியில பெரிசா எழுதி ஒட்டியிருக்கு போல. சோத்துக்குக் கதியில்லாமெ அலையுற எவென்னாலுஞ் சரி, என் ஹோட்டலுக்குத்தே வர்றான். காசு குடுக்காமெ கடன் சொல்லிக் கம்பிய நீட்டிடுப் போயிடறானுங்க. மொதல்ல ஹோட்டல் 'வள்ளல்'ங்கிற பேர மாத்தி, ஹோட்டல் 'கறார்'ன்னு வெக்கணும்ப்பா." என்று சற்றுக் காரமாக - அதே சமயம் நையாண்டி இழையோடக் கூறினார் வேதாச்சலம்.

''நீங்க போன பிறவியில பாரி

வள்ளலாட்டம் இருந்திருப்பீங்க போல. அதான் அந்தத் தாராள மனசு இந்தப் பிறவிலேயும் ஒங்களோட ஒட்டிப் பொறந்து, ஊர்க்காரங்க ஒங்கள 'வள்ளல்'ன்னு பட்டப் பேரு வெச்சுக் கூப்பிட, அதையே ஹோட்டலுக்கும் வெச்சிட்டீங்களே'' சப்ளையர்களில் ஒருவன். 'க்ளுக்' எனச் சிரித்தபடி கூறினான்.

மறுநாள் அந்தக் கிழவர் மதியம் சாப்பிட வந்தபோது, முதல் நாள் பாக்கியான பத்து ரூபாயை முன் கூட்டியே கொடுத்துவிட்டு, "எவ்ளோ வயசானாலுஞ் சரி... யாருகிட்டேயும், எதையும் எலவசமா எதிர் பாக்கக் கூடாதுங்க'' என்றவாறே சாப்பிடப் போனார்.

அது ஒரு 'அளவு சாப்பாடு' ஹோட்டல்தான் என்றாலும், வாலிப முறுக்குள்ள இளைஞர்கள் சாப்பிடுவதைக் காட்டிலும் கூடுதலாக வாங்கிச் சாப்பிடுவார் கிழவர். "கொஞ்சம் சாம்பார் குடுப்பா... கொஞ்சம் ரசம் விடு. அப்பளம் இல்லீயா...'' என ஒவ்வொன்றையும் ஆவலுந்தாவலுமாகக் கேட்டு வாங்கிச் சாப்பிடுவார்.

வேதாச்சலம் மட்டுமின்றி, ஹோட்டலில் வேலை செய்கிறவர்களும்கூட "இந்தக் கெழவன் வயித்துக்குள்ளார இருக்குறது கொடலா, இல்லீன்னா, அண்டாவா? இவரு வயசுக்கு இப்படி வளைச்சு முழுங்கறதுக்கும் கொஞ்சம்கூடச் சம்பந்தமில்லியே.'' குத்தலும் குதர்க்கமுமாகப் பேசி கிண்டலடிப்பார்கள்.

ஒரு நாள் இளைஞன் ஒருவன் வீட்டில் வந்து சாப்பிடுமாறு, அவமானப் பிராண்டலுடனான தடித்த வார்த்தைகளுடன் ஹோட்டலுக்கே வந்து கிழவரை அழைக்க, "எனக்கு ஒஞ் சோறு வேணா. ஒஞ் சோத்தச் சாப்டா ஏ நெஞ்சு வேகாது.'' அவர் மறுத்து பிடிவாதம் பண்ண, அவன் வேறு வழியின்றி திரும்பிப் போயிருந்தான்.

அது கண்டு, "ஹோட்டல்ல சாப்பிட்டு ருசி கண்ட பெரிசு நாக்கு, வீட்ல சாப்பாடம் புடிக்குது போலிருக்கு" என்றார்கள் சப்ளையர்கள்.

கடந்த நாலைந்து நாட்களாக கிழவர் வேதாச்சலத்தின் ஹோட்டலுக்குச் சாப்பிட வரவில்லை. விஷயம் புலப்படாது, ஆளாளுக்கு சகட்டு மேனிக்கு வெவ்வேறு அனுமானங்கள் கூறினார்கள். "ஏனப்பா... சப்ளையருங்களா, அந்தப் பெரிசுக்கு சோத்தச் சீத்தக் கம்மியாப் போட்டுத் தொலைச்சிட்டீங்களா? ஆளையே காணோம்" என அனுதாபத்துடன் கேட்டார் வேதாச்சலம்.

"அட, நீங்க ஒண்ணு! அவரு சாப்பிட வரலீன்னா நமக்கென்ன நஷ்டமா? இங்க சோறு போடறதவிட வேற ஏதாவது ஹோட்டல்ல கூடுதலாப் போட்ருப்பாங்க. கெழவர் அங்க தாவிட்டார் போல. ஒரு

நட்சத்திரப் பொடி!





தன் கணவர் ஹீரோ என்றால், உடனடியாக கால்ஷீட் தரத் தயாராயிருக்கிறார் திருமதி சிம்ரன் தீபக்.

சோனியா அகர்வால், ஜோதிகா, இருவருக்கும் பத்திரிகையாளர்கள் என்றாலே அலர்ஜி.

ஒபத்ரவம் ஒழிஞ்சதேன்னு நிம்மதியா இருங்கண்ணே" என்றான் ஒரு சப்ளையர்.

காலையிலிருந்தே, 'அண்டா வயிறு, கிழவர் பற்றி மாறி, மாறி, ஹோட்டலில் அனுதாப அரட்டைக் கச்சேரி களை கட்டியிருந்தது. "இவ்ளோ வயசுக்குப் பின்னாலும் இருந்து அந்தாளு என்னத்தச் சாதிக்கப் போறான்; நம்பள மாதிரி ஆளுங்கள சங்கடப்படுத்துறதவிட, போய்ச் சேர்றது ஒசத்திதேன்" என்று சமாதானப்பட்டிருந்தார் வேதாச்சலம்.

சிறிது நேரத்தில், பிணங்களை ஏற்றிப் போகிற 'மயான ரதம்' ஒன்று பத்துப் பதி னைந்து பேர் புடை சூழ வந்து கொண் டிருப்பது தெரிய, கல்லாவில் உட்கார்ந்த படி எட்டிப் பார்த்து சலனப்பட்டவாறு, 'யப்பா... அண்டா வயிறு பெரிசு, பொணம் வருது பாருங்களேன்" என்று சப்ளையர்களை நோக்கிக் குரல் கொடுத் தார். பின், கீழே இறங்கி வந்து நின்று, இறுதி யாத்திரையில் போய்க் கொண் டிருந்த கதர்ச் சட்டைக்காரர் ஒருத்தரைக் கூப்பிட்டு "ஏங்க, அவரு நல்லாத்தானே சாப்ட்டு நோய் நொடியில்லாமெ இருந்தாரு... எப்பிடி திடீர்னு இப்படிப் பொசுக்குன்னு போயிட்டாரு?" என்று வினவினார்.

"அட, நீங்க வேற! என்னிக்கு நல்லாச் சாப்ட்டாரு? அவரு ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகிங்க. காஞ்சிபுரத்தி லேர்ந்து ஒரு மாசத்துக்கு முன்னாலதே இந்த ஊருக்கு வந்து அவரோட மகன் கிட்டத் தங்கியிருந்தாரு. அவரோட மகன் முறை கேடா சம்பாதிக்கிற பணத்தில சாப்பிடப் பிடிக்காம தனக்கு வர்ற தியாகி பென்ஷன் பணத்துல பாதிய எப்பவும் போல அநாதைக் குழந்தைங்க ஆசிரமத்துக்கு அனுப்பி வெச்சிட்டு, மீதப் பணத்துல மூணு வேளையும் சாப்பிடப் போதாமெ நாலஞ்சு வருஷமாவே மதியம் ஒரு வேளை மட்டுமே சாப்ட்டு உயிர் வாழ்ந்திட்டிருந்தாரு. திடீர்னு வந்த காய்ச் சல், அவர ஒரேயடியா முழுங்கிருச்சு. அனாதை ஆசிரமத்துக்கு மாசாமாசம் வள்ளல் மாதிரி தர்மம் பண்ணாமல், மூணு வேளையும் சாப்பிட்டிருந்தார்னா இலேசுல நோய் நொடி அண்டாத அந்த மனுஷன் இன்னும் அஞ்சாறு வருசமாச் சும் வாழ்ந்திருப்பாரு" என்று அந்த ஆள் வாஞ்சையுடன் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

தேளின் கொடுக்கு, இதயத்தில் பாய்ந்த சுருக். "யப்பா... சப்ளையர்களா" என்று கூக்குரலிட்ட வேதாச்சலம், கிழவர் பற்றி பெருமையாகக் கூறுவதற்காக சப்ளைய ரைக் கண்களால் துழாவ,

''ஹோட்டல் வள்ளல்' என்ற போர்டை வெறிக்கப் பார்த்துக் கொண் டிருந்த சப்ளையர்களில் ஒருவன்,

"நெசமாவே ஹோட்டல் வள்ளல்ங்கிற போர்ட மாத்திடணும் முதலாளி'' என்றான். ●

தோளுக்கு மேல் வளர்ந்தும் சிபி யைத் தோளில் சுமக்கும் சத்யராஜ் தமது மகன் நடிக்கும் படங்களில் தானும் நடிக்கத் தொடங்கியிருக்கிறார்.





அட்டகாசம், மிரட்டல், பாலா வுடனான படம்... என அஜித் பிஸியாக இருப்பதால் 'மகா' கிட்டத்தட்ட ட்ராப் தான் என்கிறார்கள்.

- கண்



தமிழ்நாட்டுக்கு நவராத்திரி, கொல்கத்தாவுக்கு துர்கா பூஜை, கர்நாடகத்துக்கு தசரா மாதிரி... தெலிங்கானாவுக்குப் பதுக்கம்மா பண்டிகை!

வாரங்கல் பகுதியில் உள்ள ஆந்திர மக்கள், விஜயதசமி அன்று அருகிலுள்ள நீர்நிலைக்குச் சென்று 'பதுக்கம்மா' என்ற வாழ்வு தேவதையை வழிபட்டு மகிழ்கிறார்கள்.

யாக குண்டத்தில் விழுந்து உயிர் விடும் தாட்சாயணி, உயிர் பெற்று உமா பார்வதியாகப் பிறக்கும் நாளாக இதைக் கொண்டாடுகிறார்கள்.

மஞ்சள் தூளில் பதுக்கம்மா உருவம் செய்து, அலங்கரித்து, அதை மூங்கில் சப்பரத்தில் வைத்து, வண்ண மலர்களால் அலங்கரித்து, தலை மேல் தூக்கிக் கொண்டு பக்தியுடன் பெண்கள் நடக்க, வாரங்கலில் உள்ள பத்ரகாளி ஏரி நீர் தூளிப்படுகிறது!

பாடி, ஆடி, பூஜை செய்து, விளக்குகளுடன் வண்ணச் சப்பரங்களை நீரில் மிதக்க விட்டு, கட்டுச் சோறு அருந்திவிட்டுத் திரும்பும்போது, இலேசாக மழை தூறுவது ஆண்டுதோறும் நடக்கும் அற்புதம்!

- ஆர்.எல்



பதுக்கம்மா!



சாக்லெட் காதலர்!

அரை டிராயர் அணிந்த பருவத்திலிருந்தே எனக்கு அவரைத் தெரியும். கொளுத்திப் போட்ட சங்கு சக்கரம் போல சுற்றிக் கொண்டேயிருப்பார். குறும்புகளுக்குக் குறைவே இருக்காது. அவருக்கு ட்யூஷன் சொல்லித் தர, குட்டையான வாத்தியார் வருவார். வாத்தியாரின் தலையைக் கண்டதும், இவர் மாடிப்படி, தோட்டம், பரண் என்று ஓடி ஓடி ஒளிவார். வாத்தியாரும் இலேசுப் பட்டவரில்லை. துரத்தித் துரத்தி, எப்படியோ குண்டுகட்டாகத் தூக்கிக் கொண்டு வருவார்... தினமும் லபோதிபோ கூத்துதான்!

சில சமயம், கீழ்த்தளத்தில் சமையல்காரர், வேலைக்காரர், டிரைவர், வாட்ச்மேன் போன்றவர்கள் கும்பலாகக் கூடி, பீடியும் கையுமாக அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். இது அவருக்குப் பொறுக்கவே பொறுக்காது. நைஸாக, நான்காவது மாடிக்குப் போய், ஒரு பெரிய வாளி நிறைய தண்ணீரை அவர்கள் மீது ஊற்றி விட்டு ஓடி விடுவார்.

அது என்ன மந்திர மாயமோ தெரியலை, அவர் விளையாடும்போதெல்லாம், பந்து நேராக எங்கள் காம்பவுண்டில்தான் வந்து விழும். பந்தைப் பொறுக்கி, அவர் பக்கமாக வீசுவது என் வேலைதான்! ஒரு தாங்க்ஸ்கூட வராது!

நான் எங்கள் வீட்டுக் கூடத்தில் டான்ஸ் ப்ராக்டீஸ் செய்வேன். அப்போது அவர் என் கண்ணில் படும்படி, பாடம் படித்துக் கொண்டிருப்பார். அவர் வீட்டுக்கு வெளியே கிரிக்கெட் பிராக்டீஸ் செய்து கொண்டிருப்பார். நான் அவரது கண்ணில் படும்படி, தோட்டத்தில் வந்து நிற்பேன். சில விநாடிகள் பார்வைகள் மோதிக் கொள்ளுமே தவிர, பெரிதாக ரொமான்ஸ் எதுவுமில்லை.

நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது, எங்கள் இருவருக்கும் பொதுவான தோழன் இருந்தான். அவன் பெயர் அபிஜித். எங்களிடையே சின்னதாய் ஒரு காதல் கசமுசா அரும்பி இருப்பதை எப்படியோ கண்டுபிடித்துவிட்டான். தூது

பீரங்கி! அவனுடைய யோசனையின் பேரில், இருவரும் முதல்முறையாக தனியாகச் சந்தித்தோம். மாநில அளவில் கிரிக்கெட் விளையாட அவர் தேர்வாகியிருந்த சமயம், விமான நிலையத்தில் சந்திக்க ஏற்பாடு செய்துவிட்டான் அபிஜித். கூடை கூடையாகப் பேச வேண்டும் என நினைத்துக் கொண்டு போனேன். "என்ன சாப்பிட்டீங்க? டீ ஷர்ட் நல்லா இருக்கு" என ஒரு சில வார்த்தைகள் மட்டுமே பேச வந்தது... அந்தப் பக்கம் இன்னும் மோசம்! மறுநாள் பள்ளியில் புவியியல் பரீட்சை! பாடப் புத்தகத்தைப் பிரிச்சாலே, அவர் முகம்தான் தெரிந்தது. என்ன எழுதினேனோ! ஜஸ்ட் பாஸ் மார்க்!

எங்கள் வீட்டில் என்னை எங்கேயும் தனியாக அனுப்ப மாட்டார்கள். அதனால் அடிக்கடி வெளியே சந்திக்க முடியவில்லை. ஒருமுறை, நான் படித்த 'லாரெட்டா ஹவுஸ்' பள்ளிக்கு, நான் பத்து நிமிஷம் முன்பாகவே போய் நிற்க, அவர் பின்னாலே வந்து, என் அப்பாவின் தலை மறைந்த பிறகு, ஓடோடி வந்து ஒரு சாக்லேட் டப்பாவைப் பரிசளித்துவிட்டு ஓடிவிட்டார். யார் கண்ணிலும் படாமல் அந்த சாக்லேட் டப்பாவை மறைக்க நான் பட்டபாடு...!

அப்புறம்... எங்கள் காதல் விஷயம் எப்படியோ வெளியே கசிந்தது. சில பல பிரச்னைகளுக்குப் பிறகு, நல்லபடியாக திருமணத்தில் முடிந்தது. இப்போது நான் பரபரப்பான குடும்பத் தலைவி ஆகிவிட்டேன்!

காலையில் எழுந்து, குளித்து, புடைவை உடுத்தி 'மா மங்கள் சாந்தி' என்ற குல தெய்வப் பூஜை செய்கிறேன். அப்புறம் சமையல். நான் நடத்தி வரும் 'தீக்ஷா மஞ்சரி' என்ற நடன வகுப்புக்குப் போவேன். என்னுடைய நடன நிகழ்ச்சிகளுக்கு அவர் வரமாட்டார். நானும் அழைக்க மாட்டேன். வந்தால் அவரைச் சுற்றி ரசிகர் கூட்டம் மொய்க்கும். அவர் பரிதவித்துப் போவார்.

நான் அவருடைய பரம ரசிகை. அதற்காக அவர் ஆடும் எல்லா மேட்சையும் பந்துக்குப் பந்து பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். குட்டிப்பெண் சானாவை வைத்துக் கொண்டு அதெல்லாம் சாத்தியமும் அல்ல!

எங்கள் மகளுக்கு நான்கு வயதாகிறது. இனிய குரல் இருப்பதால் பாடகி ஆக்க வேண்டும் என்பது அவரது ஆசை. டென்னிஸ் வீராங்கனையாக்க வேண்டும் என்பது என் ஆசை! எது எப்படியோ, அழகான மனுஷியாக அவள் வளர வேண்டும் என்பது எங்கள் இருவருடைய ஆசை!

சரி, மறுபடியும் கணவருடைய புராணத்துக்கே வருகிறேன். நாங்கள் காதலித்தபோது, சின்ன விஷயத்துக்கெல்லாம் நான் சண்டை போடுவேன். அவர் சாக்லேட் கொடுத்து சமாதானம் செய்வார். இப்போது நான்தான் விட்டுக் கொடுத்துப் போக வேண்டியிருக்கிறது. அவர் சாக்லெட்டை என் பெண்ணுக்குத் தந்து விடுகிறார்.

அப்புறம்... எங்கள் குடும்பத்தையே உலுக்கிப் போட்ட அந்த காதல் கிசுகிசு... மீடியாக்காரர்கள் என்னதான் ஊதி ஊதிப் பெரிசு படுத்தினாலும், நான் உடைந்து போகவே இல்லை. இன்னும், பசை போட்டதுபோல் ஒட்டிக் கொள்ளத்தான் தோன்றியது.

(காதல், கல்யாணம், தொடங்கி, கிசு கிசு வரை மனம் திறந்து 'கடகட' என கொட்டியிருப்பவரின் சாக்லேட் கணவர் யார் எனத் தெரிகிறதா?)

- அனு



• கணவருடன் டோனா கங்கூலி

தங்கமேடு இரகசியம்!

கெய்ரோவிலுள்ள அருங்காட்சியகங்களில் மூன்று முக்கியமானவை: 'இஜிப்ஷியன் ஆன்டிக்விடீஸ்', 'காப்டிக், இஸ்லாமிக் ஆர்ட்' (Egyptian Antiquities, Captic, Islamic Art) இவற்றுள் பழைமையான பொருள்களைக் கொண்ட இஜிப்ஷியன் ஆண்டிக்விடீஸ் தான் டூரிஸ்ட்களின் பட்டியலில் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது.

மியூஸியம் ஆஃப் இஜிப்ஷியன் ஆன்டிக்விடீஸ் - 1858-ஆம் ஆண்டு, புதைபொருள் ஆராய்ச்சியாளரான அகஸ்தே மாரியட் (Auguste Mariette) என்பவரால் துவக்கப்பட்டு, இன்று பிரம்மாண்டமாய் வளர்ந்திருக்கிறது. இதில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் 1,36,000 பொருள்களை நிமிஷத்துக்கு ஒன்று வீதம் பார்த்தாலும்கூட, அனைத்தையும் கண்டு களிக்கச் சுமார் ஒன்பது மாதங்கள் தேவைப்படும்! இது தவிர இன்னும் பிரிக்கப்படாமல் பெட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. "இவற்றில் பல கனமான பொருள்கள் அடித்தளத்து மண்ணில் புதைந்து விட்டதால், அவற்றைத் தோண்டியெடுத்தால்தான் காட்சிக்கு வைக்க முடியும் என்ற நிலை உள்ளது!" என்றார் பாப்.

அருங்காட்சியகத்தின் நுழைவாயிலின் முன் இரண்டாகப் பிரிக்கப்பட்ட ஒரு சின்ன குளம் இருக்கிறது. இதில் ஒன்றின் மேல் எகிப்தின் தேசியப் பூவான தாமரைகளும் (பார்க்க நீல அல்லி மாதிரி இருப்பதை இவர்கள் தாமரை என்கிறார்கள்!), மற்றதில் கீழ்எகிப்தின் தேசியப் பூவான பபைரஸும் வளர்க்கப்படுகின்றன. பாப் உடன் இருந்ததால், கையேட்டைக் கையில் பிடித்துக்கொண்டு 'இது எங்கே, அது எங்கே?' என்று அலையாமல், மூன்று மணித்துளிகளில் மியூஸியத்தின் மிக முக்கியமான கலைப் பொருள்கள் எதையும் விட்டுவிடாமல் எங்களால் சுற்றிவந்து பார்க்க முடிந்தது.



• நெஃபர்டிடி



• ரஹோதெப்

• இளவரசி நெஃபர்ட்

இந்தத் தளத்தில் நுழைந்த உடனேயே 'முதல் கல்வெட்'டையும், 4,600 ஆண்டுகளுக்கு முன் முதல் படிக்கட்டுப் பிரமிட்டைக் கட்டிய ஜோஸர் மன்னரின் சிலையையும் காண முடிகிறது. சுண்ணாம்புக்

பிரமிட் தேசம் - 6



* டுடங் அமுனின்
பத்து கிலோ தங்க முகமூடி

கல்லில் செய்யப்பட்ட இச்சிலை, சக்காரா பிரமிடினுள்ளிருந்து மீட்கப்பட்டது. தொடர்ந்து பல அறைகளில் பழைய, மத்திய, புதிய அரச பரம்பரைகளைச் சார்ந்த பொருள்களையும், கொள்ளையர்கள் சூறையாடியது போக, எஞ்சியுள்ள கனமான வேலைப்பாடுகளுடன் கூடிய பல வகை புதைப்பெட்டிகளையும் (Sacrophagus) மட்டுமே அதிக அளவில் பார்க்க முடிகிறது. பழைய அரச பரம்பரையைச் சேர்ந்த மாம்லுக், நெப்போலியன் படை வீரரால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஸ்ஃபிங்ஸின் பதினைந்து அடி நீள கல் தாடியின் சில பகுதிகள், முஷ்டியில் புடைத்திருக்கும் ரத்த நாளங்கள் துல்லியமாய்த் தெரிய, கருங் கல்லில் செய்யப்பட்ட கெப்ரான் அரசரின் உருவச்சிலை, நிஜம்தானோ என்று எண்ணக் கூடிய கண்களைக் கொண்ட மரத்தாலான கா அபர் சிலை (Ka Aper), எழுதுவதற்குத் தயாராகப் பபைரஸ் தாளைப் பிரித்து வைத்துக் கொண்டிருக்கும் 'எழுத்தர்' சிலை - இப்படி ஏராளமான அரிய பொருள்கள்! எங்கு திரும்பினும் ஆஜானுபாகுவான மன்னர்களின் சிலை, அவர்கள் பயன்படுத்திய பொருள்கள், பின்பற்றிய வழிபாட்டு முறை விளக்கங்கள் - என்று நாலாயிரம் வருஷத்துக்கு முந்தைய சரித்திரம் கண்முன் விரிகிறது.

அமர்னா காலரியில் (Amarna Gallery) ஃபெரோ அக்ஹெனெடனின் (Akhenaton) நான்கு பிரம்மாண்ட உருவச்சிலைகள் உள்ளன. இவரது மனைவி நெஃப்ர்டிடி (Nefertiti)யின் அழகு உலகப் பிரசித்தி பெற்றது. (எகிப்துக்குச் செல்லும் பலர் அங்கு பெரிய அளவில் விற்கப்படும் 'பெண்தலை' ஒன்றை டேபிள் வெயிட்டாக வாங்கி வந்து, 'இது கிளியோபாட்ராவின் தலை' என்று கூறக் கேட்டிருக்கிறேன். தவறு. இது நீண்ட கழுத்தை உடைய நெஃப்ர்டிடியின் பொம்மை. எகிப்தியர்கள் கிளியோபாட்ராவைப் பெரும் அழகியாகக் கொண்டாடுவதில்லை!) மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் கோலோச்சிய இத்தம்பதியைப் பற்றி சுவாரஸ்யமான தகவல் ஒன்றை பாப் கூறினார். அவர்களுக்கு முன் ஆண்ட அரச பரம்பரையினரின் தெய்வமாகிய அமுன் (Amun)ஐ ஒதுக்கிவிட்டு, அடென் (Aten) என்ற கடவுள் வழிபாட்டைத் துவக்கி, தங்கள் எண்ணத்திற்கு இடையூறு வரக்கூடாது என்ற நினைப்பில், மத்திய எகிப்தில் அமர்னா என்ற புது தலை நகரத்தை உருவாக்கி, இவர்கள் ஆட்சி செய்தார்களாம்!

முதல் தளத்தில் பிரதான இடத்தை ஆக்ரமிப்பது, கொள்ளையர்கள் கையில் சிக்காமல் கார்டர் (Carter) என்ற ஆங்கிலேய ஆராய்வாளரால் 1922-ம் ஆண்டு 'அரசர்கள் பள்ளத்தாக்கில்' கண்டு பிடிக்கப்பட்ட, ஃபெரோ டுடங் அமுனின் (Tutankhamun) சமாதியிலிருந்து எடுக்கப்பட்ட



சிவசங்கரி

ஆயிரத்து எழுநூறு பொருள்கள். இந்த சமாதியைக் கண்டுபிடித்தவுடன் முதலில் கார்டர் சொன்ன வார்த்தைகள்: 'நான் ஒரு தங்க மேடு மேல் உட்கார்ந்திருக்கிறேன்!' 'குழந்தை அரசர்' என்று குறிப்பிடப்படும் டுடங்அமுன் ஒன்பது வயதில் பட்டத்துக்கு வந்து, பதினெட்டு வயதில் இறந்து போனாராம்! ஒன்பது ஆண்டுகள் ஆண்ட மன்னருக்கே இப்படியொரு சமாதித் தயாரிப்பு என்றால், ஐம்பது, அறுபது ஆண்டுகள் பதவியிலிருந்த ஃபெரோக்களான ராம்ஸெஸ், ஸெடி என்பவர்களின் சமாதிகளில் எத்தகைய புதையல்கள் இருந்திருக்கும் என்பதைக் கற்பனை பண்ணக்கூட முடியவில்லை!

இறந்துபோன அரசருடன் புதைக்கப்பட்டு, இன்று காட்சிப் பொருளாக உள்ளவை சில: படுக்க மூன்று தங்கக் கட்டில்கள்; உட்கார தங்கச் சிம்மாசனங்கள், நகைகள், உடைகள் அடங்கின தந்த, எபோனி மர அலமாரிகள் (chests); உட்கார்ந்து மலம் கழிக்க ஏதுவான இருக்கை (இது இந்நாளில் உபயோகப்படுத்தப்படும் வெஸ்டர்ன் கிளாஸட் சீட் போலவே இருப்பது ஆச்சர்யமான ஒற்றுமை!); வேட்டையாட ஆயுதங்கள்; போர் அடித்தால் விளையாட சதுரங்கம்; குடிக்க, உண்ண வகை வகையாய் பானங்கள், பதார்த்தங்கள்; பாத்திரங்கள்; காலணிகள் - என்று ஏழெட்டுக் கூடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் பொருள்களைச் சமாதிக்கு எப்படி எடுத்துச் சென்றார்கள், அதனுள் எப்படி அடுக்கி, எதனால் மூடினார்கள் என்று நானாவிதக் கேள்விகள் நமக்கு எழுவதைத் தடுக்க முடியவில்லை! சடலத்தை வைத்து மூட, தங்கத்தால் ஆன சவப்பெட்டி, அதை வைத்து மூடி இன்னொரு தங்கப்பெட்டி, அவற்றை வைத்து மூட இன்று நாம் காணும் கண்டெயினர் சைஸில் ஓர் அறை - என்று ஒன்றுக்குள் ஒன்று வைக்கும் காரைக்குடி டப்பா போல, டுடங் அமுனின் சவப்பெட்டி/ அறைகள் இருக்கின்றன. என்ன, காரைக்குடி டப்பா தகரத்தால் ஆனது. இவை சொக்கத் தங்கத்தால்... அதுதான் வித்தியாசம்!

இந்த அறைகளினுள் குடங்கள், ஜாடிகள் ஆண், பெண் உருவங்கள் என, பலவும் சிலைகளாகச் செதுக்கப்பட்டுள்ளன. நிலைப்படியில் ஹீரோக்ளைஃபிக் படமொழியில் எழுதி வைத்திருக்கும் மந்திரங்களை, அரசரின் 'கா' உச்சரித்தால், அந்த பொம்மை உருவங்களுக்கு உயிர் வந்துவிடுமாம்! ஜாடிகளில் தேனும் பாலும் நிரம்பி விடுமாம். இன்னும் அங்கு இருப்பதற்கெல்லாம் உயிர் வந்து, அரசர் வேண்டியதை உண்டு கொள்ளலாம்; பணியாட்கள் அவரது அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வார்களாம்! கடைசி அறையில் ஒப்பற்ற ரத்தினங்கள் பதிக்கப்பட்ட தங்க இறுதிச் சடங்கு முகமூடி ஒன்று உள்ளது. இதன் எடை என்னவென்று நினைக்கிறீர்கள்? வெறும் பத்து கிலோதான்! மம்மியை இறுதியாய் வைப்பதற்குச் செய்யப்பட்ட தங்க சவப்பெட்டியின் எடை நூற்றியைந்து கிலோ!

டுடங்அமனின் சமாதிப் புதையல்கள் தந்த நம்பமாட்டாத விவரங்கள் மூச்சை அடைப்பதாக இருக்க, அங்கிருந்து நகர்ந்து, மம்மிகள் இருக்கும் அறைக்கு ஆளுக்கு நாற்பது பவுண்டு கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொண்டு நுழைந்தோம்.

சென்ற நூற்றாண்டில் மம்மிகள் குறித்து எகிப்தியரிடையே கருத்து வேறுபாடு எழுந்ததில், ஜனாதிபதி சதாத்




"குருவே! பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை இம் மூன்றையும் துறக்க என்ன செய்ய வேண்டும்?"

"அது தெரிந்திருந்தால் .வீணாக இந்த ஆசிரமத்தைத் துவக்கியிருக்க மாட்டேனே சிஷ்யா."

- வீ. விஷ்ணுகுமார்

1981ல் மம்மிகளின் அறைக்கு யாரும் போகக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். ஆனால், இந்த உத்தரவை சில ஆண்டுகளில் ரத்து செய்துவிட்டதில், இன்று டூரிஸ்டுகள் அவ்வறைகளுக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். அரச குடும்பத்தைச் சார்ந்த பதினொரு நபர்களின் மம்மிகள் இங்கு உள்ளன. இவற்றில் முதலாம் ஸெடி, இரண்டாவது ராம்ஸெஸ், அவரது மகன், இரண்டாவது நாலாவது டுட்மோஸிஸ், ராணி ஹீனுடாவி (Queen Henuthawi) ஆகியோரின் மம்மிகள் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. ஒரிஜினல் நகம், முடி, திறந்திருக்கும் செயற்கைக் கண், இத்யாதிகளுடன் கறுத்து, சுருங்கி இருந்த சடலங்களைக் காண்கையில், மெடிகல் காலேஜ் கண்காட்சியில் பிணங்களைப் பார்க்கிற மாதிரிதான் இருந்தனவே ஒழிய, மூவாயிரம் வருஷங்களுக்கு முன் பதப்படுத்தப்பட்ட ஃபெரோக்களைக் காண்கிறோம் என்கிற த்ரில் எங்களில் யாருக்குமே தோன்றவில்லை!

மியூஸியத்தைத் தொடர்ந்து எகிப்து சார்ந்த அனைத்துக் கலைப்பொருட்களையும் மலிவாக விற்கும், நூற்றுக் கணக்கான கடைகள் கொண்ட கான்-எல்-கலிலி (Khan - el- Khalili) மார்க்கெட்டுக்கு அழைத்துச் செல்லப் பட்டோம். "இங்கு கண்டிப்பாய் பேரம் பேசித்தான் பொருள்களை வாங்க வேண்டும். கடைசியில் கடைக்காரர் என்ன விலையை உறுதியாய்ச் சொல்கிறாரோ, அதற்குப் பாதி விலை கேளுங்கள்; அதுதான் சரியான விலையாக இருக்கும்" என்று பாப் சொல்லிக் கொடுத்த விதத்தில் ஷாப்பிங் செய்தது ஒரு சுவாரஸ்யமான அனுபவம்! மாலை ஏழரை மணிக்கு நைல் நதியில் படகில் உலா வந்த வண்ணம், உலகப் புகழ் பெற்ற 'பெல்லி' நடனத்தைக் கண்டவாறு இரவு விருந்தை உண்டோம். ஆடிய பெண்ணிடமும் 'பெல்லி' - தொப்பை - இருந்த அளவுக்கு, ஆட்டம் இல்லை! டூரிஸ்டுகளுக்கு இது போதும் என்று எண்ணிவிடுகிறார்களோ! (தொடரும்)



அம்மா வைச்ச அல்டா!

"நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு நான் மேக்கப் போட்டுக்கிறப்ப, எப்பவும் ஜெயாம்மாதான் எனக்கு அல்டா (சிவப்புச் சாந்து) வைச்சு விடுவாங்க. சில மாசங்களுக்கு முன்னாலே, நான் ஒரு நடன நிகழ்ச்சிக்குக் கிளம்பிக்கிட்டிருந்தேன். அது என்னோட குரு, கேலுசரண் மகாபாத்ராவுடன் சேர்ந்து ஆடிய நிகழ்ச்சி... அப்ப அம்மாவுக்கு ரொம்பவே முடியலை. இருந்தாலும் என்னோட வலது கையைப் பிடிச்சு, நடு வட்ட டிஸைனை மட்டும் வரைஞ்சு விட்டாங்க. அந்த நிகழ்ச்சி என் நினைவை விட்டு விலகவே விலகாது. ஏன்னா, அன்புடன் வழியனுப்பிய அம்மாவும், ஆசி தந்து மகிழ்ந்த குரு மகாபாத்ராவும் இப்ப உயிரோட இல்ல" என்று ஜெயா சக்ரவர்த்தியின் நினைவுகளில் நெகிழ்கிறார் ஹேமமாலினி.

- மினி


ஆறுதல் சொல்லிகள்

கண்கள் உறங்கும்போது
உற்பத்தியாகும் அந்தத் தற்காலிக
உலகத்தில் எத்தனையோ
நிகழ்வுகள்!

வரதட்சிணை இல்லாமல்
தங்கையின் திருமணம்
நடந்துவிடுகிறது!

வஞ்சம் இல்லாமல்
அரசு வேலைக்கு சென்று
கை நிறையப் பணம்
புரள்கிறது!

ஆண்டவன்கூட அருகே
வந்து அருள் கூறுகிறான்!



ஆர்.ஜெயசீலன்

இன்றைய ஜனநாயகம்
நமது அரசியல் 'தலை'கள்
சிலருக்கு
நெகிழ்ந்து கொடுக்கும்
நீர்மெத்தைகள்

தேர்தல் வாக்குறுதிகள்...
நாடக மேடை
ராஜாவுக்கு
சூட்டி மகிழும்
மணி மகுடங்கள்...


தேர்தல் விதிமுறைகள்
நடைபாதை விரிப்புகள்...
வாசலில் வரைந்த
வண்ணக் கோலங்கள்...

பொது மக்கள்தான்
பரிதாபங்கள்...
பயன்படுத்தி எறியும்
நவீன
பிளாஸ்டிக் பொருள்கள்...!



ஜனநாயகம்

கோ.வெள்ளைச்சாமி



இறந்து போன ஆத்தாவும்
தாத்தாவும் வந்து
அம்புலிமாமா கதை
சொல்கிறார்கள்!

விழித்திருக்கையில்
உலாவும் உணர்வுகளுக்கு
உயிர் கொடுத்து
உருவம்
கொடுக்கும்
கனவுகள், உண்மையில்
நல்ல ஆறுதல் சொல்லிகள்!

தந்தையின் மந்திரம்

ம.திருவள்ளுவர்

அம்மா சொன்னதால் மட்டுமல்ல—
அப்பாவை அப்பாவாய்
உணர்ந்திருக்கிறேன் அப்பாவால்

வாழ்வையே பள்ளிப் பாடமாய்
அள்ளித் தந்த வள்ளல் - தன்
பிறவியின் பரிணாமத்தையும்
மேற்படி நோக்கும் பரிமாணத்தையும்
உள்ளடக்கி
எனக்குள் விழுந்த கனி அவர்

இருந்தோர், இருந்துமில்லாதோர்
இல்லாமற் போனோர் - எனும்
தொடரினிடை தோன்றி
இல்லாமற் போனபின்னும்
இருப்பவராய் ஆகி நிற்கும்
அதிசயமானவர் அவர்

காயந்தரும் சொல்லொலி இன்றி
மாயமாகும்
சாயப் பூச்சுமின்றித் - தன்



அதிராச் சுவடுகளால்
புரியாப் புதிர் பலவும் விடுபட நடந்த
அவரை மொழி பெயர்த்தேன்—

''வேர்களே - வாழ்ந்து காட்டுங்கள்
தப்பாது உங்கள்
விழுதுகளும் வாழக் காண்பீர்கள்''



* இந்திரா பார்த்தசாரதி

'குறு'ந்தொகை



* ஜெயமோகன்



* சாருநிவேதிதா



* கனிமொழி

● "மேல்நாட்டு இலக்கியக் கோட்பாடுகள் எல்லாவற்றுக்கும் தமிழில் பெயர்கள் கண்டுபிடித்து விட்டார்கள் என்பதை தவிர, வேறு புதிய சாதனை இருப்பதாக தெரியவில்லை" என்று அறிவித்திருக்கிறார் இந்திரா பார்த்தசாரதி.

● சுய புராணங்களையும், சாதனைகளையும் பட்டியலிட்டு 'இலக்கியம்' படைக்கும் நமது அரசியல் தலைவர்களைப் போலில்லாமல், மெய்யான இலக்கியம் படைத்து வருகிறார்கள் லத்தின் அமெரிக்க அரசியல்வாதிகள். நிகாரகுவாவின் முன்னாள் துணை ஜனாதிபதி எழுதி வெளிவந்திருக்கும் ஒரு நாவலை, வெகுவாகப் பாராட்டியிருக்கிறார் சல்மான் ருஷ்டி.

● ஆங்கிலத்திலும் மராத்தியிலும் தொடர்ந்து எழுதி, உலக கவனத்தை ஈர்த்த அருண் கோலாத்கரின் மரணம், இலக்கிய உலகில் ஈடு இணையில்லாத இழப்பை ஏற்படுத்தியுள்ளது. கவிதைச் சிற்பங்கள் வடிப்பதில் அவர் வல்லவராக இருந்து வந்தார்.

● "கோணங்கியின் கவிதைகள் புரியவில்லையா? அப்படியெல்லாம் கிடையாது. அவரது கவிதைகளில் புரியாதது என்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை." சொல்லியிருப்பவர் கனிமொழி. தமது அடுத்த கவிதைத் தொகுப்பில் தற்பொழுது இவர் ஈடுபட்டு வருகிறார்.

● "வெங்கட் சாமிநாதனுக்கு வழங்கப்பட்ட இயல் விருது மூலம் அந்த விருதுக்கே களங்கம் ஏற்பட்டு விட்டது" என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார் எம்.ஏ. நுஃமான்.

● "நாங்கள் யாருக்கும் பல்லக்குத் தூக்கியதும் இல்லை. யாரையும் குழியில் தள்ளியதும் இல்லை" என்று தமது உயிர்மை விழாவில் சொல்லியிருக்கிறார் மனுஷ்யபுத்திரன்.

● "தமிழ் வாசகர்களை விட, தமிழ் எழுத்தாளர்கள் பிற்போக்கானவர்கள்" என்று ஒரு மலையாள இதழுக்கு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார் சாரு நிவேதிதா.

● ஜெயமோகனின் துணைவியார் அருண்மொழி நங்கை, இசை தொடர்பான ஒரு பேராசிரியரின் கட்டுரையை அப்படியே அடி பிறழாமல் திருடி எழுதியதை அம்பலப்படுத்தியது கவிதா சரண். இதற்கு இத்தனை காலம் மறுப்பு தெரிவிக்காமல், இப்பொழுதுதான் ஒரு சப்பைக் கட்டு பதிலை அளித்திருக்கிறார் ஜெயமோகன். முதலில் தமக்கு இது பற்றி ஒன்றும் தெரியாது என்று சொன்ன அவர், அவருக்குத் தெரியாமல் நேர்ந்துவிட்ட 'பிழைக்கு' மன்னிப்பும் கேட்டுள்ளார்.

- **வண்ணத்துப்பூச்சி**

ஜங்கோபதேசம்!

கிருஷ்ணர் தம்முடைய ஸாரதி ஸ்வரூபத்தில் அமர்ந்து, சோக உருவான அர்ஜுனனுக்கு ஜங்க் ஈமெயில்களை எப்படிக் கையாள வேண்டும் என 'ஜங்கோபதேசம்' செய்கிறார். பக்த கோடிகள் கேட்டுத் தெரிந்து மோட்சம் பெறவும்!

கண்ணன்: அர்ஜுனா, உன் பெரியவர்களிடமிருந்து உனக்கு வரும் மின்னஞ்சல்களைக் கண்டு அஞ்சாதே. அதை மதிக்கக் கற்றுக் கொள். வருவதை எதிர்கொள்ளடா!

அர்ஜுனன்: வாசுதேவா, மதிப்பிற்குரிய பெரியவர்களுக்கு, 'வேறிடம்' புலம் பெயர்ந்தவர்களுக்கு, ஜங்க் மெயில் அனுப்ப என்னிடம் துணிவில்லை.

கண்: பார்த்தா, இச்சமயம் அவர்கள் உனக்கு நண்பர்களுமல்ல, விரோதிகளுமல்ல. வெறும் மெயிலை உபயோகிப்பவர்களே. ஆதலால் உன் 'நெட் தர்மத்தை' கடைப்பிடிக்கவும், மௌஸை உபயோகித்து, அதி வேகமாக டஜன் கணக்கில் ஜங்க் மெயில்களை பாணமாக அனுப்பவும். இதுதான் உன் கர்மம்; ஏன் தர்மமும்கூட!

அர்: பரந்தாமா, இதையெல்லாம் பார்க்கும்போது, சாஃப்ட்வேர் துறையைப் புறக்கணித்து ஓடத் துடிக்கிறது என் மனம்.

கண்: நீ மாயையில் அகப்பட்டுக் கொண்டு விட்டாய். இந்த லோகத்தில் நீ யாருக்கும் கடன்படவில்லை. நீ வருவதற்கு முன்னும் ஜங்க் மெயில்கள் இயங்கிக் கொண்டுதானிருந்தன. நீ போனபின்னும் அது அஸ்திரம் போல படையெடுத்துக் கொண்டுதானிருக்கும். இந்த மாயையிலிருந்து விடுபட்டு, உன் கடமையைச் செய். ஜங்க் மெயில்களை அனுப்பிக் கொண்டேயிரு.

அர்: ஆனால்... தேவகி நந்தனே...

கண்: வெற்றி தோல்வி உன் கையில் இல்லை. ஆதலால் அதை நினைத்து சங்கடப்படுவதை நிறுத்து. குரு துரோணர் உன் மீது அருளிய ஜங்க் அஸ்திர வித்தையைப் புறக்கணிக்காதே. அந்த அறிவைப் பயன் படுத்து.

அர்: கேசவா, ஜங்க் மெயிலுக்கும், சிஸ்டத்துக்கும் என்ன தொடர்பு?

கண்: ஜங்க்மெயில்



என்பது ஜங்க் மெயில். அதற்கும் ஹார்ட்வேர் என்பதற்கும் கிஞ்சித்தும் தொடர்பு இல்லை. ஆனாலும் இது சிஸ்டத்தை ஓவர்லோடாக்கி, அதனால் ஹார்ட்வேர் நிரம்பிவிடும் அபாயமுண்டு. இதை எல்லாம் நினைத்து நீ கலங்காதே. குந்தி புத்திரனே... எப்படி ஆன்மா, ஒரு சரீரத்தை விட்டு இன்னொன்றுக்குள் புகுந்து விடுகிறதோ, அதுபோல் ஜங்க் மெயிலும் ஒரு சிஸ்டத்திலிருந்து இன்னொரு சிஸ்டத்துக்குத் தாவிக் கொண்டேயிருக்கும்.

அர்: ஜங்க் மெயிலின் பரிபாஷை என்னவோ?

கண்: அக்னியால் எரிக்க முடியாது. காற்றால் கரைக்க முடியாது. இதை வெற்றி கொள்ளவோ, இதனிடம் தோற்பது என்பதோ இயலாது. ஜங்க் மெயில் அனுப்புபவனை, அந்த மகாதேவனால்கூட எதுவும் செய்ய முடியாது. நெற்றிக்கண் பூச்சியெல்லாம் பலிக்காது! மொத்தத்தில் ஜங்க் மெயில் என்பதற்கு முடிவென்பதே கிடையாது!

அர்: நாராயணா, ஜங்க் மெயிலைப் பற்றிய என் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தாய். யசோதா நந்தனே, என் கண்ணைத் திறந்துவிட்டாய். இல்லையேல், இந்த மாயையில் அகப்பட்டு, நானே எல்லா ஜங்க் மெயில்களையும் படித்திருப்பேன்... தப்பித்தேன்...

வருடங்கள் ஓடி விட்டன. பல தலைமுறைகள் வந்து போயின. பருவங்கள் மாறின... டெக்னாலஜியில் பயங்கர முன்னேற்றம். ஆனால் ஜங்க் மெயில் மாத்திரம் அப்படியே அழிவில்லாமல் படையெடுத்துக் கொண்டிருக்கின்றன.


ஆதலால் உங்கள் பங்குக்கு வரலாற்றில் இடம் பிடிக்க, 'ஃபார்வார்ட்' என்ற பட்டனைத் தட்டி, ஜங்க் மெயில்களை உங்கள் நண்பர், விரோதி, பாஸ், பின்லேடன், வீரப்பன்... என பாகுபாடில்லாமல் விரோதம் பாராட்டாமல் அனுப்பிக் கொண்டேயிருக்கவும்.

மூலம்: இணையதளம்

லதா சேகர்




புவனா ஆபீஸில் நுழைந்தபோது எல்லோருக்கும் இன்ப அதிர்ச்சி~
!
அடடே புவனா! இன்னைக்கு லஞ்ச் டைமுக்கு ஆபீஸ் வந்துட்டீங்க! உண்மையைச் சொல்லுங்க நீங்கதானா இது?
வஞ்சப் புகழ்ச்சியாக இருந்தாலும் புவனாவின் முகம் நாணத்தால் சிவந்தது!
இதென்ன கலாட்டா?
லஞ்ச் டைமில் ஜி.மேனேஜர், ஏஜெண்ட்டும் தேடிவந்து ராகவனைப் பாராட்டினார்~
வெல்டன் ராகவன்! ரொம்ப நாளா பெண்டிங்கில் இருந்த ராவ் அண்ட் கம்பெனி அக்கவுண்ட்ஸ் டீலிங்கை ரெண்டு மணி நேரத்திலே முடிச்சுட்டீங்களே! பிரமாதம்! நீட் ஒர்க்!
உடன் வேலை செய்யும் அத்தனை பேரும் ராகவனைப் பொறாமையோடு நோக்க, உச்சி குளிர்ந்தது ராகவனுக்கு!
கதை: சகா
படம்: ஜெ


பள்ளிக் கூடத்தில் 'குடும்பு'- ஜனகா டீச்சர் ராகுலைப் பாராட்டினாள்.
வெரிகுட் ராகுல்! நீட்டா ஹோம் ஒர்க் பண்ணிட்டு வந்திருக்கே! குட் பாய்! எல்லோரும் ராகுலைப் பார்த்துக் கத்துக்குங்க!
மற்ற மாணவர்கள் உற்சாகமாகக் கைதட்ட, பெருமையாக இருந்தது ராகுலுக்கு.
8 மணி- வீட்டில் போன் மணி அடித்தது~
..ராகவன் ஆபீஸ் அக்கவுண்ட்ஸ்..
..புவனா சமையல் வேலையில்...
..ராகுல் ஹோம் ஒர்க்கில்...
ராகவன் வந்து போனை எடுத்தான்...
ஹலோ..
சார் வணக்கம். ஜே. எஸ். எலெக்ட்ரானிக்ஸிலிருந்து பேசறோம். ரெண்டு நாள் முன்னாடி நீங்க ரிப்பேருக்காகக் கொண்டுவந்த டீவி பக்காவா ரெடியாயிடுச்சு. நீங்க வந்து எடுத்துக்கலாம்.
?
?
47



“சந்திரமுகிதான் இஷ்டமுகி!”



கல்லூரியிலிருந்து ஒரு பெருங்கூட்டமே 'பங்க்' அடித்துவிட்டு, புத்தாடை அணிந்திருக்கும் அந்த சொகுசு திரையரங்குக்குள் நுழைகிறது. அதன் நான்கு காம்ப்ளெக்ஸ்களிலும் தொங்கும் ஹவுஸ்ஃபுல் போர்டை அலட்சியப்படுத்திவிட்டு, குறும்பான எண்ணங்களோடு ஒன்று கூடுகிறார்கள். “மச்சான், அந்த கேக் பாக்ஸைப் பிரி” அவசரக் கட்டளை வந்தவுடன் பிரிக்கப்பட்டு ரம்மியமாய் வெளிப்படுகிறது ஆர்ட்டின் வடிவிலான பிறந்தநாள் கேக். “தேங்க்ஸ்டா மச்சான்” உற்சாகத் துள்ளலில் பார்த்டே பாய் கத்தியை கேக்கின்மீது இற... பட்ட்! அருகில் வீறிட்டு அழும் குட்டிப் பாப்பா மீது ஜிகினாப் பூ தூவுகிறது உடைந்த பலூன் கேக்!



நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய், இப்படி கொண்டாட்டமாய் ஒரு திரையரங்கம் இருக்கிறது என்றால் நம்புவீர்களா? பல வருடங்களாக நாலு பக்கச் சுவர்களுக்குள் அடங்கிக் கிடந்த அபிராமி வளாகம், மில்லினிய தாக்கத்தில் 'அபிராமி மால்'லாக நவநாகரிகமாக ஜொலிப்பதைக் காணும்

■ நல்லம்மை ராமநாதன்



• மொய்க்கும் இளமை!

பொழுது, இந்தியா ஏழை நாடு, வருடந்தோறும் உலக வங்கிக்கு பல்லாயிரம் கோடி வட்டியை கடனாகச் செலுத்துகிறது என்றெல்லாம் நம்பவே முடியவில்லை. பிட்ஸா ஹட்,



அஞ்சப்பர் ஃபுட் கோர்ட், ப்ரைம் ரோஸ்டர், ஹாட் ப்ரெட்ஸ், வீடியோ கேம்ஸ் கிரேஸி ப்னானட், ஐஸ்கிரீம் கடைகள், ஃபேன்ஸி ஜுவல்ஸ், ப்யூட்டி பார்லர்... என இத்தனையும் ஷாப்பிங் செய்து விட்டு, அப்படியே தியேட்டருக்குள்ளும் நுழைகிறார்கள். டெண்ட் கொட்டகையிலிருந்து இது போன்ற மால் வரை, காலம்தான் எப்படியெல்லாம் உருமாறுகிறது?

ஓகே. இங்குதான் நம் இந்த வார இளமைச் சுற்றுலா என்று முடிவெடுத்து பிட்ஸாவை ஆளுக்கொரு கை இழுத்துக் கொண்டிருந்த பாபு அண்ட் ஃபேமிலியைப் பார்த்தோம். அங்கிருந்த டீன்ஏஜ் புத்ரியோ, ''ஆமா நீங்க கல்கின்னு எப்படி நம்பறது?'' என்று ஒரே போடாகப் போட, கைவசமிருந்த ஐடி கார்டு, வோட்டர்ஸ் ஐ.டி., ரேஷன் கார்டு, ஸ்கூல் டிசி, பால் கார்டு என்று ஒன்று விடாமல் அவரிடம் காண்பிக்க வேண்டியிருந்தது. ''அந்தக் காலத்துல எங்க அப்பா மணலைக் குவிச்சு அதுல உட்கார்ந்து படம் பார்ப்பாரு. இப்போ மக்களுக்கு இப்படியெல்லாம் சொகுசா இருந்தாதான், திருட்டு விசிடியை உண்மையாகவே ஒழிக்க முடியுங்க'' என்றார் விழிப்புணர்ச்சி 2004.

''தமிழ்ப்படங்களைப் பார்க்க வருபவர்களுக்கு இத்தனை சொகுசு தேவையா?'' என்று இன்னொரு டேபிளில் பிட்ஸாவை அழகான விரல்களால் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த நஸியாவிடம் கேட்



• நஸியா - மேரியோ

டோம். "நல்லாக் கேட்டீங்க போங்க. நானும் என் ஃப்ரெண்ட் மேரியோவும் படம் பார்க்கவே இங்க வரலை. அடிக்கடி வருவோம். இங்க உட்கார்ந்து மனம் விட்டுப் பேசுவோம். சாப்பிடுவோம். வெரைட்டியா நிறைய புரோகிராம் நடத்துவாங்க. பரிசு தர்றாங்க" என்று குதூகலித்தார்.

'க்ரேஸி ப்ளானட்' வீடியோ கேம்ஸ் ஷாப்பில் வேலை பார்க்கும் பாபு - கார்த்திக்கிடம் "எந்தப் படம் இங்கு குதிரையாட்டம் ஓடுது?" என்றோம். பட்டென்று பதில் வந்தது - 'மதுர'.

நஸியா தொடர்ந்தார். "எனக்குத் தமிழ்ப் படங்கள் அவ்வளவா பிடிக்காது. கதையேயில்லாம எவ்ளோ மணி நேரம் படத்தை ஓட்டறாங்க. இங்கிலீஷ் படம் பாருங்க. ஆழமான கதையைக்கூட ஒன்றரை மணி நேரத்துல முடிச்சிருவாங்க" என்றவர், கடைசியாகப் பார்த்த தமிழ்ப் படம், 'படையப்பா'வாம். அடேங்கப்பா! அருகிலிருந்த மேரியோவிற்கு 'சேது' மட்டும் மிகவும் பிடித்திருக்கிறது. "சத்தியமா ஹீரோயின் கடைசியில சாவார்ன்னு நினைக்கவேயில்லை. தமிழ் சினிமாவுல ஹீரோவும் ஹீரோயினும் வானத்தைப் பார்த்தாலோ, பூமியைப் பார்த்தாலோ சட்டென பாட்டு வருவதை நிறுத்தணுங்க" என்றார், ஏனோ ஒருவித பதை பதைப்போடு. இவர் அமெரிக்கத் தூதரகத்தில் வேலை பார்ப்பவர்.


ஏனா... மீனா... டீக்கா...!

பெரிய ஹாலில் எகிப்தியச் சிலையின் முன்பு தினமும் கேம்ஸ் ஷோ நடத்துகிறார்கள். ஜெயிப்பவர்களுக்கு இலவச டிஸ்கௌண்ட் கூப்பனும், சினிமா டிக்கெட்டும். டென்ஷனுடன் மேடையேறி க்யூப்ஸ் உருட்டிக் கொண்டிருந்த நிலோஃபரிடம் தமிழ் சினிமா ஹீரோக்கள் பற்றி கேட்டதுதான் தாமதம், பொங்கி விட்டார் சந்தோஷத்தில்.

"சந்திரமுகி ஹீரோதான் என் இஷ்டமுகி. என்ன ஸ்டைல், என்ன மேனரிஸம், சூப்பர் ஸ்டார்னா இன்னைக்கும் எவ்வளவு க்ரேஸ் பாருங்க. அப்புறம் நானும் ஒரு பொண்ணுதானே, எனக்கும் மேடியைப் பிடிக்கும்" என்றார் வெட்கப்பட்டுக் கொண்டே.



• திடீர்ப் போட்டி

"சென்னையின் முதல் ஷாப்பர்டெயின்மென்ட் மால் இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்டது என்பதால் கேளிக்கைதான் முதல் நோக்கம். ஆனாலும் முதியோர் தினம், மகளிர் தினம் எல்லாமே சிறப்பாகக் கொண்டாடுகிறோம். ஃபோட்டோகிராபி, சமையல், ரெய்கி போன்ற பற்பல கலைகளுக்கு, பட்டறைகளும் நிபுணர்களால் நடத்தப்படுகின்றன. பொழுதுபோக்கு அம்சம், பயனுள்ளதாகவும் இருக்கணும் இல்லையா?" என்கிறார் அபிராமி மெகாமால் நிர்வாகி நல்லம்மை ராமநாதன்.

- எழில்

படங்கள் : ஸ்ரீ ஹரி

சில மௌன வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் பருவம் விழித்துக் கொண்டது. கோவையின் சில்லென்ற காற்று வீசத் தொடங்கிய ஜூன் மாதம்.

மரங்களால் அணைக்கப்பட்டிருந்த மெட்ரோ கிளப். கிட்டத்தட்ட எல்லா செய்தித் தாள்களையும் மேய்ந்து விட்டிருந்தார், மணிவேல். நுனிப்புல் மேய்ச்சல். பெரும்பாலும் சமீபத்திய தேர்தல் முடிவுகளின் எதிரொலிப்புகள்தாம். வென்றவர்களின் பெருமிதமும், தோற்றவர்களின் பொருமல்களும். கண்களைச் சுழலவிட்டார். அந்த மேல்தட்டு கிளப்பின் நிரந்தர உறுப்பினர் அவர். ஒரு புறம் சீட்டாட்டச் சவால்கள். தடுப்புகளுக்கு மறுபுறம் டேபிள் டென்னிஸ் என்று கதம்பமான ஒலிகள். முகத்தைத் திருப்பி ஜன்னல் பக்கம் பார்வையை வீசினார். ஜன்னல் வழியே வந்த நடுப்பகல் வெளிச்சம், அவரது நரைமுடியை மின்ன வைத்தது. கண்களின் கீழ் வளையம் கறுப்படித்தது.

யாரோ கல்லூரி மாணவர்கள் தங்கள் மோட்டார் வாகனங்களில் 'சர்ர்ர்'ரிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரே ஒரு கணம் அந்த ஜன்னல் வழியே தெரிந்து மறைந்தார்கள். அவ்வளவு விரைவு!

"என் பிரிய ரவிஷங்கர்! நீயும் உன் நண்பனும்
இப்படித்தான் வேகமாய்ப் பறந்தீர்களா?
என் இனிய முட்டாளே! உனக்கென்னடா
அவசரம் - உலகத்தை விட்டு, என்னைவிட்டு ஓட?"

முதுகில் யாரோ கைவைத்து அழைத்தார்கள். "மணிவேல்சார், மணிவேல் சார்" சிந்தனை வெட்டுப்பட திடுக்கிட்டுத் திரும்பினார். இப்போதெல்லாம் புறப்பட்ட கண்ணீரைக் கண்களுக்குள் திருப்பிவிடுவது அவருக்குக் கை வந்த கலையாகிவிட்டது. எனவே அவரது கண்ணீரை, முதுகைத்தொட்ட பாலு பார்த்திருக்க நியாயமில்லை.

சி.வி.கார்த்திகேயன்



பாலு, கிளப்பின் செயலாளர். எல்லோருக்கும் நண்பர். மீசை வைத்த குழந்தை. அவருக்குப் பின்னால் சோகமாய் புதிய முகம் ஒன்று எட்டிப் பார்த்தது.

ஆறுதல்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

''வாங்க பாலு சார்''

பாலு கவாதீனமாக அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

புதிய நபரின் கையைப் பிடித்திழுத்து எதிர்ப்புறம் அமர வைத்தார்.

''சொல்லுங்க பாலு'' பொறுமையின்றி வந்தது மணிவேலின் குரல்.

''சார்...''

''ம்....''

''இவரு... இவரு பேர் திருஞானம்''

திருஞானம் சட்டென்று கைகூப்பினார். மணிவேல் பதில் வணக்கம் போட்டு விட்டு, பாலுவைப் பார்த்தார். வெற்றுப் பார்வை.

பாலு வரவழைத்துக் கொண்ட தீவிரத்தோடு, தயக்கத்தோடு ஆரம்பித்தார். கைகளில் சற்றே பதற்றம், அதனால் கைகளைக் கோத்தபடியே, தலையைத் திருப்பித்திருப்பி, அவரைப் பார்த்தபடி சொன்னார்.

''மணி சார், இவரோட மகன் ஒருத்தன் நம்ம ரவிஷங்கர் மாதிரியே விபத்தில் அடிபட்டு அகாலமாய்ப் போய்ட்டான்.''

மணிவேல் உள்ளுக்குள் பிரவகித்த எரிச்சலை, இயலாமையை, துக்கத்தை மென்று விழுங்கினார். 'ம்... வழக்கப்படி ஆறுதல் தேடிக் கொண்டிருப்பவரிடம் ஆறுதல் கேட்டு வந்திருக்கிறார்கள்.' ஓலமிட்டது மனம்.

''ம்...''

''பையன் திடீரென்று போனதும் ரொம்ப இடிஞ்சிட்டார். இவரோட மனைவியும் பாதிக்கப்பட்டுடாங்க. ரெண்டு பேரும் பதினைஞ்சு நாள் ஆஸ்பத்திரியில அட்மிட் ஆயி இப்பத்தான் டிஸ்சார்ஜ் ஆனாங்க...''

பதில் சொல்லாமல் திருஞானத்தை வெறித்தார், மணிவேல்.

''நான்தான் வற்புறுத்தி உங்ககிட்ட கூட்டிட்டு வந்தேன். நீங்கதான் தைரியம் சொல்லணும். ஏன்னா, நாங்க என்ன சொல்லியும் எடுபடலை. நீங்களும் இதே துக்கத்தை அனுபவிச்சிட்டிருக்கிறவர். அதைக் கடந்து வாழ்ந்து காட்டறவர். நீங்க சொன்னா பொருந்தும்.''

''நீங்க பேசிக்கிட்டிருங்க, நான் காப்பி ஆர்டர் பண்ணிட்டு வர்றேன்'', அவர்களைத் தனிமைக் குழியில் தள்ளிவிட்டு, நகர்ந்தார் பாலு.

''மணி சார்... எனக்கு உங்க ஆறுதல் ஏதும் உதவாது சார். என் மனைவிக்கும், மகள்களுக்கும், சமாதானமா இருக்கட்டும்னுதான், பாலு வந்து கூப்பிட்டதும் கூட வந்தேன்.''

அவரை ஆச்சரியமாகப் பார்த்தார் மணி. தம் வயதுதான் - ஐம்பது - அவருக்கும் இருக்கும் என்று தோன்றியது.

அவரே தொடர்ந்தார். ''ஒரே பையன்னு ஏகச் செல்லமா வளர்த்தேன்.

பொண்ணுங்களும் 'அண்ணா அண்ணான்னு' உயிரே வெச்சிருந்தாங்க. இரண்டரை லட்சம் நன்கொடை குடுத்து, அவன் விரும்பின கோர்ஸ்ல சேர்த்துவிட்டேன். பாவி, திடீர்னு விபத்துல போய்ச் சேந்துட்டான்..." வரவர குரல் வலிமையிழந்து கொண்டே வந்தது. கடைசி வார்த்தைகள் கிசுகிசுப் பாகத்தான் வெளிப்பட்டன.

தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு, அந்த ஆணின் அழுகையைச் சற்றே சந்தேகத்தோடுதான் நம்ப முடியும். அதே இழப்பைச் சந்தித்த மணி வேலுக்குத் தான் தெரியும், அவருடைய கைகளின் நடுக்கம், உடலின் அதிர்வுகள் எல்லாம், நிஜம், நிஜம் என்று.

"நீங்கள், உங்கள் ஒய்ஃப், ரெண்டு பேருமே ஒரே சமயத்துல ஆஸ்பத்திரியில அட்மிட் ஆயிட்டு வந்ததா பாலு சொன்னார், இல்லையா?"

"ஆமா சார். அவன் செத்து பதினைந்து நாள் வரை, அது இதுன்னு தாங்கிகிட்டு வண்டி ஓடுச்சு, அப்புறம் திடீர்னு ஒரு நாள் மயங்கி விழுந்துட்டேன். அவ அதுக்கு முந்தியே ஆஸ்பத்திரியிலே அட்மிட் ஆயிட்டா..."

"உங்க மத்த ரெண்டு பொண்ணுங்களும் என்ன பண்றாங்க?"

"ஒருத்தி இந்த வருஷம்தான் ப்ளஸ் டு. சின்னவ எட்டாவது"

"நீங்க ரெண்டு பேரும் ஆஸ்பத்திரின்னு போனதும் யாரு வீட்ல உதவிக்கு இருந்தது? தாத்தா, பாட்டி... அத்தை...?"

"யாரும் இல்லை சார். எல்லாம் வெளியூர்ல இருக்காங்க. சாவுக்கு வந்துட்டு, இப்பத்தான் ஒவ்வொருத்தரா போனாங்க. அக்கம் பக்கமும், பொண்ணுங்க கூட படிக்கிற பொண்ணுங்க பசங்களும்தான், உதவினாங்க. என்னோட கூட வேலை செய்யறவங்களும் ரொம்ப ஒத்தாசையா இருந்தாங்க."

"பொண்ணுங்க படிப்பு...?"

"சமீபத்துலதான் ஸ்கூல் திறந்துச்சு. உடனே பத்து நாளுக்கு மேலே லீவ் போட வேண்டியதாயிடுச்சு. மறுபடியும் போக ஆரம்பிச்சுட்டாங்க, இப்ப"

பதில் ஏதும் கூறாமல், மௌனமாய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார், மணி வேல்.

திருஞானம் சற்றே பதற்றமடைந்தார். "சார், உங்க மகனோட எதிர்பாராத இழப்பையும் மீறி, நீங்க உறுதி குலையாம இருக்கிறீங்கன்னு, பாலு சொன்னார்."

"ம்... அப்படியா..." என்றவர் மனதிற்குள், "என் நடிப்பை நம்பிட்டாங்க" என்று சொல்லிக் கொண்டார்.

"உங்ககிட்ட பேசினா எனக்கும் ஒரு தெளிவு பிறக்கும்னு சொன்னார்."

"ஓஹோ"

"நான் ஒரு லிஸ்டே தயார் பண்ணியிருக்கேன்"

"சேது சமுத்திர திட்டத்துல உங்க தாத்தா தனக்கும் பங்கு இருக்குங்கறாரா? எப்படி?"
"1940ல சேது சமுத்திர மாடல் செய்து ஸ்கூல் போட்டியில் பரிசு வாங்கினாராம்..."

- மு. சாம்பமூர்த்தி



"என்ன லிஸ்ட்?"

"காலேஜஸ் அதிகமாக இருக்கற பகுதிகள்ல, வருஷத்துக்கு இந்த மாதிரி ரெண்டு மூணு சம்பவங்களாவது நடக்குதாம்..."

"ஓஹோ!"

"இதை ஆராயப் போய்த்தான் ஒரு விஷயம் தெரிய வந்தது."

"என்ன விஷயம்?"

"நீங்களும் பார்த்திருப்பீங்க. இந்த அவினாசி ரோடு, மதுக்கரை ரோட்டுல எல்லாம் இளவயசுப் பையன் படம் போட்டு, அஞ்சலின்னு போஸ்டர்



"இந்தப் பாடலை உங்க மாமியாருக்கு டெடிகேட் பண்றதுக்கு என்ன காரணம்?"

"இந்தப் பாட்டு அவங்களுக்கு சுத்தமா பிடிக்காது!"

- ஞா. பாரதி

ஒட்டியிருப்பாங்க. உன்னை மறக்க முடியாத நண்பர்கள்னு ஒரு பட்டியலே இருக்கும். அந்த ஏரியாக்களில்தான் கல்லூரிகள் அதிகம்..."

அவருக்கும் நினைவு வந்தது.

"ஆமாம். நானும் அது மாதிரி பலதும் பார்த்திருக்கேன்."

"சமீபத்துல, ஒண்ணு ரெண்டு வருஷத்தில, அப்படி இறந்தவங்களோட பேரண்ட்ஸை எல்லாம் தேடித் தேடிப் பார்க்கலாம்னு இருக்கேன்."

"ஏ... எதுக்கு?"

"அவங்க எப்படி இந்தப் பிரச்னையைச் சமாளிக்கறாங்கன்னு தெரிஞ்சிகிட்டா, என் துக்கத்தை, இழப்பைச் சரிக்கட்ட முடியும்னு நம்பறேன்..."

தமது கருத்தில் நூறு சதவிகித நம்பிக்கையோடு அவர் படபடக்க, அவரைப் பரிதாபமாய்ப் பார்த்தார் மணிவேல். தமது பேண்ட் பாக்கெட்டில், கர்ச்சிப்புக்கு இடையில் வைத்திருந்த 'அதைத்' தொட்டுப் பார்த்துக் கொண்டார். விரலும் மனசும் ஜில்லிட்டது.

"திருஞானம் சார். நான் ஒன்று சொல்லட்டுமா?"

"சொல்லுங்க சார். அதைக் கேட்கத் தானே வந்திருக்கிறேன்."

"செத்தவன் செத்துட்டான் சார். உங்களுடைய பொன்னான நேரத்தை மத்தவங்களுடைய துக்கத்தையோ, உறுதியையோ தெரிஞ்சிக்கறதுக்காக செலவிட்டீங்கன்னா, அது விரயத்திலும் விரயம்."

"?! ?!"

"நீங்களும் உங்க மனைவியும் இரட்டிப்பு அக்கறையோட உங்க குழந்தைகளை கவனிக்க வேண்டிய நேரம் இது. ஏன்னா..."

"ஏன்?"

"உங்களைப் போலவே உங்க மகனோட சாவு அவங்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்புதான். தவிர... நீங்க பாட்டுக்கு ஆஸ்பத்திரி, ஆறுதல் தேடல்னு போயிட்டா, உணர்ச்சி பூர்வமா அவங்களோடு இந்த டீன் ஏஜ்ல உருவாகற புதுப்புது நட்புங்க, உறவுங்க தப்பாய்ப் போயிட வாய்ப்புண்டு"

"என்ன சொல்றீங்க?"

"அவங்களைக் கவனிக்க நீங்க மிஸ் பண்ற ஒவ்வொரு கணமும், அவங்க அன்புக்கு ஏங்கறவங்களா மாறி, கொஞ்ச அன்பு காண்பிச்சாலும், அப்படித் தர்றவங்களை முழுசா நம்பிடறதுக்கு வாய்ப்புகள் இருக்கு..."

திடுமென்று நிமிர்ந்து அமர்ந்தார் திருஞானம். தம் பெண்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பிலிருந்து சற்றே விலகிவிட்ட தவறை, அவர் மனம் சட்டென்று உணர்ந்து கொண்டது. துக்கம்

உரிச்சு வைச்ச பொருத்தம்!

உங்கள் முகமும், நீங்கள் வளர்க்கும் செல்லப் பிராணியின் முகமும் ஒரே மாதிரி இருக்கிறதா? அடிச்சீங்க லக்கி பிரைஸ்! உடனே அடுத்த ஃபிளைட் பிடிச்சு டோக்கியோ நகருக்குப் போங்க. ஹிடேடோ யாமகுச்சி போல உங்களுக்கும் அதிர்ஷ்டம் அடிக்கலாம்!

டோக்கியோவில் 'லுக்-அலைக் பெட் கான்டஸ்ட்' என்ற நூதனப்போட்டி வருடந்தோறும் நடக்கிறது. யாமகுச்சியும் அவர் வளர்க்கும் ஃப்ரெஞ்ச் புல்டாக் புஷி குன்னும் ஒரே சாயலில் இருப்பதாக, நடுவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து முதல் பரிசு கொடுத்து விட்டார்கள்.

முதல் பரிசு மூன்று லட்சம் யென்!

புஷி குன், குஷி குன்னாக போஸ் கொடுப்பதைப் பாருங்க!

- ஆர்.எல்



சடசடவென்று பின்வாங்கி நழுவ, பொறுப்பு பூதாகாரமாய் முன்வந்து நின்றது. இரு கைகளையும் நீட்டி மணிவேலைப் பற்றிக் கொண்டவர், வார்த்தைகளே இல்லாமல், அவருக்கு நன்றி கூறினார். உணர்ச்சிப் பெருக்கால் வார்த்தைகள் வரவில்லை. அதே சமயம், பாலு அங்கே பிரசன்னமானார். அவருக்குப் பின்னால் கேன்டீன் பையன் தட்டில் ஏந்திய காபிக் கோப்பைகளைக் கொண்டு வந்தான்.

"சார், காப்பி கொண்டு வர கொஞ்சம் நேரம் ஆயிருச்சு... சாரி..." என்று ஒப்புக்குக் கூறிக் கொண்டே, இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் பாலு. 'பாதிக்கப்பட்ட தந்தைகளே, பேச வேண்டியதைப் பேசி விட்டீர்களா' என்று கேட்காமல் கேட்டது அவர் கண்கள்.

திருஞானம் பரபரப்பாய்க் காப்பிக் கோப்பையை எடுத்து, மடக்மடக்கென்று குடித்துவிட்டு, "பாலு, தேங்க்ஸ், எனக்கு நேரமாச்சு. நான் வீட்டுக்குப் போகணும். மறுபடி பார்க்கலாம். மணி சார், ஒரு தபா எங்க வீட்டுக்குக் கட்டாயம் வரணும் நீங்க. உங்க கூட பேசினா என் மனைவிக்கும் தைரியமா இருக்கும்'' சொல்லிக் கொண்டே வாசலுக்கு விரைந்தார்.

அவர் சென்றதும், பாலு நீட்டிய காப்பியை மறுத்துவிட்டு, "ஒரு நிமிஷம்" என்று அனுமதி கேட்டு, பாத்ரூமை நோக்கி விரைந்தார் மணிவேல்.

உள்ளே சென்று கதவைச் சாத்திக் கொண்டவர், பாக்கெட்டில் கைவிட்டு, கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேமித்து, நிரப்பியிருந்த தூக்க மாத்திரை பாட்டிலை வெளியே எடுத்தார். அதை அப்படியே அந்த ஃப்ரெஞ்ச் வகை டாய்லெட் ஸிங்க்கில் கொட்டினார். பிறகு பாட்டிலில் ஏதும் மீதமில்லை என்று பார்த்துவிட்டு, வெண்டிலேட்டர் ஜன்னலில் கம்பிகளின் இடைவெளி வழியே அதை வெளியே வீசினார். அது மறுபுறம் தோட்டத்தில் போய் விழுந்த ஓசை மெலிதாய்க் கேட்டது. ஸிங்க்கில் தண்ணீரைத் திறந்து விட்டார். முன்புறம் வந்து முகத்தை, கைகளைக் கழுவிக் கொண்டு, மறுபடி ஹாலுக்கு வந்தார்.

காத்திருந்த பாலு பெருமிதத்தோடு நண்பரை ஏறிட்டார்.

''மணி சார், யார் சொல்லியும் சமாதானமாகாத திருஞானத்தை, சில நிமிஷங்கள்ல மாத்திட்டீங்க. மனுஷர் போற வேகத்தைப் பார்த்தாலே தெரியுது, புது வாழ்க்கை வாழப் போறார்னு..."

''என்ன மணி சார், மௌனமாயிட்டீங்க... எனக்குத் தெரிஞ்சு நீங்கதான் எப்பவும் இரும்பு மனிதர் சார்" என்றார்.

மணிவேல் தலையை உயர்த்தி அவரைப் பார்த்தார். 'எப்பவும் இல்லை, இந்த நிமிஷத்திலிருந்துதான்' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டார். ●



• இளம் சிவப்பு ஆடையில் இருப்பவர் குரிந்தர் சாதா

ஹச்!



ஐஸ்வர்யா ராய் நின்றால் நியூஸ், நடந்தால் ஹாட் நியூஸ் என பாலிவுட் தான் பித்துப் பிடித்து அலைகிறது என்றால், ஹாலிவுட்டுமா...?

குரிந்தர் சாதா என்ற பெண் இயக்குநரின் 'பிரைட் அண்ட் ப்ரிஜுடைஸ்' ஹாலிவுட் படத்தின் ப்ரீமியர் ஷோவில் போலீஸ் பாதுகாப்பு போடும் அளவுக்கு கூட்டமான கூட்டம் நெரித்ததாம். எல்லாம் எதுக்கு? ஐஸின் முக தரிசனமோ ஆட்டோகிராஃப் அற்புதமோ பெறத்தான்.

"ஜேன் ஆஸ்டனின் 'ப்ரைட் அண்ட் ப்ரிஜுடைஸ்' நாவலின் தழுவல் கதை தான் என்றாலும், என்னுடைய பாணியில் கதை சொல்லியிருக்கிறேன். படம் பார்த்த ஐஸ்வர்யாராய், "இரண்டு நூற்றாண்டுகள் பழைய கதைக்கு, நவீன வடிவம் கொடுத்துட்டீங்களே!" என்று பாராட்டினார். ஐஸ்வர்யா ராய் சொந்தக் குரலில் ஆங்கிலம் பேசி அருமையாக நடித்திருக்கிறார். ஐஸ்வர்யா ராய், உலக அழகி மட்டும் அல்ல, உலக நடிகையும்கூட" என்று டன் கணக்கில் ஐஸ் வைத்து உருகுகிறார் சாதா.

ஐஸுக்கே ஐஸா!

- ஆர்.எல்.

திடீர் பரிசுப் போட்டி - 4
முடிவுகள்

'இந்த ஆண்டின் சிறந்த வீரர்' 'சிறந்த டெஸ்ட் வீரர்' என்ற டபுள் ஐ.சி.சி. விருதுகளைப் பெற்றிருக்கும் ராகுல் டிராவிடைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி அனுப்பினால் என்ன எழுதுவீர்கள்?' எனக் கேட்டிருந்தோம்.

சிலிர்த்துப் போன வாசக விசிறிகள் கட்டுக்கட்டாய் வாழ்த்துத் தந்தி தட்டிவிட்டதில், 'கல்கி' ஆசிரியர் குழு ஓவர் டைம் செய்து தேர்வு செய்த வாசகங்கள்.

'நியூ' 'சாதனை' படைத்த என் 'செல்லமே' 'தூள்'.

- பி. செல்வம், அரும்பாவூர்

''ராகுல் அம்மா யாரு?'' என்று எல்லோரையும் கேட்க வைத்துவிட்டாய்.

- கீதா, சென்னை

மூன்றாவது 'பிராட்மேன்' ஆகும் நாள் எந்நாள்?

- பி.எஸ். விஸ்வநாத், சென்னை

அடிக்கடி சரிந்துவிழும் இந்திய அணியின், ராகுல் திராவிட் பாதுகாப்புச் சுவருக்கு வாழ்த்து!

- சிவகுருநாதன் முதலியார், சென்னை

தென்னையும் நீயும்
ஒன்று -
மட்டையோடு உயர்வதால்!
விளையாட உனக்கு
'மேட்ச்' உண்டு.
விளையாட்டில் உனக்கு
'மேட்ச்' இல்லை.
பேட்டிங்கில் மட்டுமல்ல -
ஆல் ரவுண்டராய் ஜொலித்திடுக!

- மு.ரா. பவிரியா, தஞ்சாவூர்

ஹாய் டிராவிட்... பட்டொளி வீசிப் பறக்கட்டும் உமது BAT ஒலி...!

- லெ.நா. சிவகுமார், சென்னை

ரன்குவிப்பு ராட்சகனே!
விக்கெட் கீப்பிங் கிராதகனே!
வாழ்க!
இந்திய அணியின் வெற்றித்தூணே!
நீ வளர்க!!

- ப. ரஜினி, புதுக்கோட்டை

விருதுகள் வாங்கறது உனக்கு 'விளையாட்டா' ஆயிடுச்சு...

- பாலா, நாமக்கல்

முதல் பரிசு ரூ.200/- பெற்ற வாழ்த்து

இந்திய கிரிக்கெட் அணி, இனி திராவிட் முன்னேற்றக் கழகம்!

- அஜித், மதுரை



'இரண்டுக்குப் பிறகு வேண்டவே வேண்டாம்' என்கிற அட்வைஸ் உங்களுக்கல்ல!

- வி.என். கோபால், சென்னை

நீ கிரிக்கெட்டில் ஒரு ஐ.சி.சி. (இந்தியாவின் சீறும் சிறுத்தை)!

- ஆர். வசந்தா, சென்னை

தொடரட்டும் உனது - ராஜ 'BAT'ட்டை!

- த. சத்தியநாராயணன், அயன்புரம்

ஐயமில்லை. நீர்தான் சிறந்த வீரர், சிங்கம்தான் நீர் கிரிக்கெட் விளை யாட்டில். சிகரத்தை தொட்டமைக்கு த்ரீ சியர்ஸ்!

- அனுராதா பாலாஜி, சென்னை

நீ மட்டையோடு களத்தில் இறங்கினால் சிம்ரனைக் கண்ட ரசிகனைப் போல், உன்னைப் பார்த்து ரன்கள் ஓடிவரும்.

- அவ்வை கே.சஞ்சீவிபாரதி, கோபி

ராகுல்... நீ... பவுண்டரியுடன் வாழ்க பல்லாண்டு.

- ஜி. சுந்தரமூர்த்தி, அரியலூர்

12. மாதுலர் மயக்கம், வீரர் தயக்கம்

காஞ்சி அரண்மனையில், மகாராணியின் மாளிகைக் கூடத்தில் சந்திர காந்தங்களின் ஒளியில், எதிரே அமர்ந்திருந்த ராஜமாதுலரின் சித்தம் சலித்துக் கிடப்பதை மகாராணியால் எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது. 'மதுவும் மங்கையும் தேவைப்படாதவன் உலகில் பிறக்கவே தேவையில்லை' என்ற சித்தாந்தத்தில் பூரண ஈடுபாடு அவருக்கிருப்பதையும் அறிந்தே தானிருந்தாள் அவள். சலனப்பட்ட அவரது விழிகள் சந்திர காந்தத்தின் ஒளியில் பேராசை மின்ன, அந்த யவன மங்கையர் மீது பதிந்திருப்பதையும் கவனித்தாள். தான் கூறும் திட்டமெதுவும் அவரது சித்தத்தில் தற்போது ஏறாது என்பதும் புரிந்ததால், அந்த யவன மங்கையரிடம் விழிகளால் அவரை கவனிக்க உத்தரவிட்டு, எழுந்து உள்ளே நடந்தாள் மகாராணி.

அடுத்து அவரை நெருங்கி மேலே விழாத குறையாக, உயர்ந்த யவன நாட்டு மது வகையை கிண்ணங்களில் ஊற்றிக் கொடுத்து உபசரிக்கத் தொடங்கினர் அந்த மங்கையர்.

சற்று நேரத்தில் திரும்பி வந்த மகாராணியின் கரங்களில் இரு ஓலைக் குழல்கள் இருந்தன.

"ராஜமாதுலா, இப்போது நம் திட்டங்களைத் தொடர, உன் ஒத்துழைப்பு அவசியம். இந்த ஓலைகளில் அடுத்து ராகுலன் திருவெள்ளறையில் செய்ய வேண்டிய பணியும், கொங்குநாட்டு கெந்ததேவ ராயனைத் தொடர்பு கொள்ளவும் உத்தரவுகளிருக்கின்றன. இவற்றை நீயே எடுத்துச் சென்று அவனிடம் கொடுத்து விடு." என்றாள் மகாராணி.

ராஜமாதுலர் அரைமயக்கத்தில் தலையசைத்தார்.

"ராஜமாதுலா, உன் அற்ப சந்தோஷங்களுக்காக நம் திட்டங்களில் கவனமின்றி இருந்து விடாதே. தேவையானால் இந்த இரு யவன மங்கையரையும் உன்னுடன் அழைத்துச் செல். நாளைக்காலை ராகுலனைச் சந்திக்க நீ புறப்பட்டுவிட வேண்டும். புரிந்ததா?"

"உன்னை சகோதரியாகப் பெற்றது என் பாக்கியம் மகாராணி" என்ற ராஜமாதுலர் யவன மங்கையருடன் புறப்பட்டார், தமது மாளிகைக்கு.


அவரது மாளிகையை அடைந்தபின் அவர் இழுத்த இழுப்பிற்கெல்லாம் வளைந்து கொடுத்த யவன மங்கையர், குவளை குவளையாக மதுவைக் கொடுத்து அவரைப் பூரண மயக்கத்தில் ஆழ்த்தினர். முழுவதுமாக மயங்கிக் கிடந்தவரை மஞ்சத்தில் கிடத்திய யவன மங்கையர் முகங்களில் விஷமப் புன்முறுவல் மின்னின.

தமிழில் கூறுவதை ஓரளவு புரிந்து செயல்பட மட்டுமே தெரியும் என்றும், எழுதவோ, வாசிக்கவோ அறியாதவர்கள் என்றும் மகாராணியாலும், ராஜமாதுலராலும் பூரணமாக நம்பப்பட்ட அந்த மங்கையரில் ஒருத்தி, அடுத்தவளுக்கு ஏதோ சைகை காட்டினாள். அடுத்து ராஜமாதுலரிடமிருந்து அந்த இரு ஓலைக் குழல்களையும் எடுத்துப் பிரித்தவள், வேறு ஓலைகளை எடுத்து, அதில் அப்படியே நகலெடுக்கத் தொடங்கினாள்.

நகலெடுத்து முடித்ததும் மீண்டும் அடுத்தவளிடம் ஏதோ கூறிவிட்டு, மாளிகையின் பின்பக்கமிருந்த இரண்டொரு காவலரிடமும் பேசிவிட்டு இருளில் வெளியேறி, அந்த ஓலைகளைச் சேர்க்க வேண்டிய இடம் நோக்கி

மகுட வைரம்

விஷ்வக்ஸேனன்



விரைந்தாள்.

அரண்மனையில் பிறந்து வளர்ந்தாலும், விடியலில் எழுந்து விடும் பழக்கமுடைய குமுதவல்லிக்கு, அன்றும் கருக்கல் நேரம் முடியுமுன்பே விழிப்பு வந்தது. அருகில் அயர்ந்து உறங்கிய கார்குழலியை எழுப்ப மனமின்றி, மெல்ல எழுந்து, சத்திரத்தின் பின் பகுதிக்கு வந்தாள்.

விடிவதற்கு இன்னும் சில நாழிகைகளே இருந்தன. கீழ்வானத்தில் வெளிச்சக் கீற்றுகள் புலப்படத் தொடங்கியதை வானத்து வெள்ளி விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டிருக்க, விரிந்து கிடந்த வயல் வெளிகளில், மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணிகளின் ஓசையும், கிராமத்து மனிதர்களின் அதட்டும் குரல்களும் தொலைவில் ஒலித்தன. தூரத்தில் மெல்லத் தெளியும் நிழலுருவமாய் அழகிய கிராமமொன்றும் புலப்பட்டது.

சத்திரத்தைச் சுற்றியிருந்த மரங்களில் கிள்ளைகளும், மைனாக்களும் கீச்கீச்சென்று குரல் கொடுக்கத் தொடங்கின. வயல்களுக்கு நடுவே நீண்டு கிடந்த பாதையொன்றும், நீண்ட ஸர்ப்பம் படுத்துக் கிடப்பதுபோல் வளைந்து வளைந்து புலப்பட்டது.

ஆடம்பரமும், ஆரவாரமுமின்றி அமைதியாக விடியலை எதிர்கொண்டிருந்த அந்த எளிய கிராமத்தைக் கண்டவளுக்கு, சற்று ஏக்கமும் பிறந்தது. அடுத்து,

'அந்த சோழவீரரின் கிராமமும் இப்படித்தானிருக்கும் அல்லவா? சோழநாட்டு கிராமங்கள் இன்னும் அழகானவை. அவரும் இப்படித்தான் விடியலில் மாடுகளுடன் வயல் வரப்புகளில் சென்றிருப்பார். ஆனால் இப்போது அவரது தோரணையும், நடையும், சாதாரண கிராமத்து மனிதராகத் தெரியவில்லையே. விசாலமான நெற்றியும், சுருண்டு பக்கங்களில் தொங்கும் குழல்களும், கூர் நாசியும், வலுவான கரங்களும்... என்ன, நான் அவரைப் பற்றி அதிகமாக சிந்திக்கிறேனோ!' என எண்ணியவளின் முகம் சிவந்து அசல் குமுதமா

யிற்று. அதுவரை அவள் அனுபவித்தறியாத உணர்வும், வெட்கமும் அவளை ஆக்கிரமித்தன. தன் உணர்வுகளைக் குறித்து, தன்னையே வியந்து கொள்ளவும் செய்தாள் இளவரசி. அவளது உணர்ச்சிகளை இன்னும் கிளற பின்னாலிருந்து ஒலித்தது ஒரு குரல்.

"இளவரசியார் விடியலின் அழகில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது."

சட்டெனத் திரும்பியவள், சத்திரத்தின் பின்புறக் கதவில் சாய்ந்து பராந்தகன் நிற்பதைக் கண்டாள். அவன் சாய்ந்து நின்ற விதம், நெடுநேரமாகத் தன்னை கவனித்தபடி அவன் நின்று கொண்டிருக்க வேண்டுமென்பதைப் புலப்படுத்தியது.

மெல்ல தன்னை திடப்படுத்திக் கொண்ட குமுதவல்லி, ''ஆம் சோழ வீரரே, எதிரில் தெரியும் கிராமம் எத்தனை எளிமையாக, அழகாய்த் தெரிகிறது! பார்க்கும்போதே மனதுக்கு இதமும் நிம்மதியும் பிறக்கிறது'' என்றாள்.

"ஆம் இளவரசி. தேவைகளை உயர்த்திக் கொண்டு, வாழ்க்கையின் தரம் உயர்ந்துவிட்டதாக எண்ணுகிறோம். ஆனால் ஒவ்வொரு தேவைக்கும் மன நிம்மதியில் ஒரு பங்கைக் கொடுத்துத்தான் பெறுகிறோம். மனிதன் ஏனோ இதைப் புரிந்து கொள்வதே இல்லை. ஆனால்..."

எளிமைக்கு இதைவிட அழகான விளக்கம் இருக்க முடியாதென நினைத்த இளவரசி. ''ஆனால் என்ன வீரரே?'' என்றாள்.

பராந்தகன் மெல்லச் சிரித்தான். "இளவரசி, தற்போது நம் தேவை இங்கிருந்து முழுதாகத் தப்பி பாண்டிய நாட்டை அடைவது. அதற்கும் தடை வந்து கொண்டிருக்கிறதென்று நினைக்கிறேன். அதோ பாருங்கள்" என்றான்.

அவன் சுட்டிக் காட்டிய திசையில், வயல்களுக்கிடையே நீண்டுகிடந்த பாதையும், அதில் வெகு தூரத்தில் புழுதிப் படலமும் புலப்பட்டன.

அதே சமயத்தில் சத்திரத்தின் வாயிலில், புரவியொன்று கனவேகமாக வந்து நிற்கும் ஒலியும், அடுத்து பகதத்தனின் குரலும் கேட்டன.

"பராந்தகா... பராந்தகா... கார்குழலி..."

பராந்தகனும் குமுதவல்லியும் சத்திரத்தின் கூடத்தை அடைந்து, விழிகளை உருட்டிக் கொண்டு பதற்றத்துடன் நின்ற பகதத்தன் முன்பாக நின்றனர். கார்குழலியும் எழுந்து வந்தாள்.

"என்ன நேரிட்டது பகதத்தா?"

"பராந்தகா, யவக்கிரீவனைத் துரத்திய பூதத்தைப் போல, காஞ்சியிலிருந்து ராஷ்டிர கூடர்கள் சினத்து ரதத்தை விசாரித்துக் கொண்டே நம்மைத் தொடர்ந்து வந்துவிட்டார்கள்."


பராந்தகன் கடகடவென்று பலமாகச் சிரித்தான்.

''அடேய், இது சிரிப்பதற்கான சமயமா?''

"ஒன்றுமில்லை பகதத்தா, உன் புராணக் கதைகளை காஞ்சியிலேயே விட்டு விட்டாயோ என்று நினைத்தேன். மூன்று தினங்களாகக் காணவில்லையே. மீண்டும் ஆரம்பித்துவிட்டாயே என்று சிரித்தேன்" என்றான் பராந்தகன்.

"என்ன செய்வது? அங்கு என் கதையைக் கேட்பார் யாருமில்லை. சரி... நாம் விரைவில் புறப்பட வேண்டும். அபாயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது"

அனைவரும் நிலைமையைப் புரிந்து,



- ஞா. பாரதி

கபாலா நியூமராலஜி



வாஸ்து, கைரேகை, ராசிக்கல் என நாம்தான் அலைகிறோம் என்று நினைத்தால், அமெரிக்கா அதுக்கும் மேலே.

'ஸ்டார் கேஸிங்' என்ற பெயரில் ராசி, நட்சத்திரம் என பித்துப் பிடித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அக்டோபர் - 28, 1955ல் பிறந்த மைக்ரோ சாஃப்ட் சக்கரவர்த்தி பில்கேட்ஸ் விருச்சிக ராசிக்காரராம். ஹீப்ரு கபாலா நியூமராலஜிபடியும் அவருடைய 9ம் எண் வெற்றிக்குரியதாம். இப்படி நிறைய கண்டு பிடித்திருக்கிறார்கள். அப்ப, எழுபது மில்லியன் டாலர் சொத்துக்கு உழைப்பும் முயற்சியும் காரணமில்லையா? அட தேவுடா!

- ஆர்.எல்.

விரைவாக வாயிலை அடையத்தான் செய்தார்கள். அவர்கள் ரதத்தை அடையு முன்பாக, சத்திரத்தின் முன்னாலிருந்த கிளைப்பாதையில் புரவிகள் பல பாய்ந்து வந்தன. வாட்களையும் ஈட்டிகளையும் உயர்த்தியபடி, இருபதுக்கும் குறையாத ராஷ்டிர கூடர்கள் பாய்ந்து வந்தனர்.

நிலைமை மிஞ்சிவிட்டதை உணர்ந்த இளவரசி, விழிகளில் அச்சம் படர நின்ற கார்குழலியை அணைத்து, "அஞ்சாதே கார்குழலி" என்றாள். அவள் விழிகள் பராந்தகனை நோக்கின.

அவன் முகத்தில் சலனமேதுமில்லை. சற்றுமுன் பலமாகச் சிரித்ததன் மிச்சம் இன்னுமிருக்க, ரதத்தை அணுகியவன் இருக்கைக்குக் கீழிருந்து பகதத்தனின் பட்டையான வாளை எடுத்து அவனிடம் நீட்டி விட்டு, தன் பெரும் வாளையும் எடுத்துக் கொண்டான்.

சினத்து ரதத்தையும், சத்திர வாயிலில் நிற்பவர்களையும் கண்டுவிட்ட ராஷ்டிர கூடர்கள், புரவிகளிலிருந்து இறங்கிப் பாய்ந்து வந்தனர். பராந்தகன் நிதானமாக முன்னே நடந்தான்.

பராந்தகனுக்கு முன்பாகப் பாய்ந்து விட்ட பகதத்தனின் நீண்ட சினத்து அங்கி பறந்து சுழல, பட்டையான அவன் வாள் கன வேகத்தில் சுழன்று வருபவர்களைத் தேக்கியது. பார்வைக்குச் சற்றுப் பருத்த தேகமும், உருண்ட பெருவிழிகளுமாய் பகதத்தன் வாளை வீசிய லாகவமும், வேகமும் ராஷ்டிர கூடர்களை அசர அடித்தன.

பராந்தகனின் கைவாள் அவர்களை பிரமிக்க வைத்தது என்றால், நீண்ட அவன் கரமும் வாளுமாகச் சேர்ந்து தொலைவிலேயே தங்களை நிறுத்தியதையும், பக்கவாட்டில் அணுக முயன்றவர்கள், பட்பட்டென்று சரிந்து விட்டதையும் கண்டவர்கள், அது சுத்தமான சோழப் படைத்தலைவர்களின் அதிவேக வாள் வீச்சு என்பதைப் புரிந்து இன்னும் பிரமித்தார்கள். போதாக் குறைக்கு, பக்கத்துச் சாளரத்திலிருந்து சத்திரத்து யவனனின் பெரும் வில் விடுத்த அம்புகள், ராஷ்டிர கூடர்களை மளமளவெனச் சரிக்கத் தொடங்கின.

இளவரசியை மீண்டும் சிறை செய்வது அத்தனைச் சுலபமல்ல என்பதைப் புரிந்து கொண்ட ராஷ்டிர கூட வீரர் தலைவன், தன் வீரர்களில் ஒருவனை அழைத்து, உடனே சென்று பிரதான சாலையிலும், எல்லைக் காவலிலும் நிற்கும் ராஷ்டிர கூட வீரர்களை அழைத்து வருமாறு பணித்தான்.

அடுத்த அரை நாழிகையில் அவன் உத்தரவு நிறைவேறவும் செய்தது.

அனுப்பி வைக்கப்பட்ட வீரன், ஐம்பதுக்கும் மேல் ராஷ்டிரகூடர்களுடன் சத்திரத்துப் பாதையில் வேகமாகப் புரவிகளில் வருவதைக் கண்ட வீரர் தலைவன் முகத்தில் திருப்தி பரவியது. விரைந்து வருமாறு அவர்களை நோக்கி சைகை செய்தவன், பராந்தகனை நெருங்கினான்.

வந்து கொண்டிருந்த சிறுபடைப் பிரிவை பராந்தகனும் கவனித்தான். வீரர் தலைவன் வாளுடன் தன் வாளை மோத விட்டவன், "இளவரசி, கார்குழலியை

அழைத்துக் கொண்டு ரதத்தில் ஏறி விடுங்கள். பகதத்தா, பின்வாங்கி வந்து விடு. சத்திரத்து யவனனை பின்புறத்து வாயில் வழியே தப்பித்துவிடச் சொல்" என்று மளமளவென்று உத்தரவிட்ட படியே, கரகரவென வாளை அதிவேக மாகச் சுழற்றத் தொடங்கினான்.

பராந்தகனின் உத்தேசம் இன்ன தென்பதைப் புரிந்து கொண்ட வீரர் தலைவன் இரைந்தான். "வீரர்களே, ரதத்தைப் பக்கவாட்டில் சூழ்ந்து கொள்ளுங்கள். எவரையும் தப்பிக்க விடக்கூடாது. பலமாகத் தாக்குங்கள்."

ஆனால் அவன் உத்தரவுகளுக்கு எதிராக, பின்னாலிருந்த வீரர்களின் வாட்கள் பட்பட்டென்று நின்று, உறைகளுக்குள் புகுந்தன. வந்து கொண்டிருந்த படைப் பிரிவும், புரவிகளின் கயிறுகள் இழுக்கப் பட்டு, பலத்த கனைப்பொலிகளுடன் பாதி வழியில் சரேல் சரேலென நின்றன. எழுந்த புழுதி அடங்கத் தொடங்கியது.

"வாருங்கள், ஏன் நின்று விட்டீர்கள்?" என்று பலமாக இரைந்த வீரர் தலைவனுக்கு பதிலேதும் வரவில்லை. வாட்களை உறையிலிட்ட வீரர்கள், ஏதோ அணி வகுப்புக்குத் தயாராவது போலப் பின்வாங்கி, வரிசையில் நின்றனர். தலைகளைத் தாழ்த்தவும் செய்தனர்.

"என்ன ஆயிற்று உங்களுக்கு?" - இரைந்தபடியே திரும்பிய வீரர் தலைவனின் விழிகள் நிலைகுத்தி நின்றன. அவன் கை வாளும் அவனையறியாமல் தாழ்ந்து, உறைக்குள் சென்று பதுங்கியது.

மாளிகையின் பக்கவாட்டிலிருந்து அதீத அலங்காரங்களுடன், வெகு கம்பீரமாக, ராஜநடை நடந்து வந்தது, ஒரு வெண்ணிறப் புரவி. அதன் பின்னால் சிறு படைப்பிரிவொன்றும் சீரான நடையில் வந்து நின்றது.

அலட்சிய நடை நடந்த அந்த வெண்ணிறப் புரவிமீது ஆரோகணித்து, வீரர் தலைவனை உற்று நோக்கியபடி வந்து கொண்டிருந்தான், 'பல்லவன் வில்லவன் என்று உலகில் பலராய்ப் பலவேந்தர் வணங்கு கழல், பல்லவன் மல்லையர் கோன்' பல்லவச் சக்கரவர்த்தி நந்தி வர்மன்.

(தொடரும்)



ஹலோ, இறைவா - 12

வல்லமை தரும் பிரார்த்தனை!

சுவாமி விவேகானந்தர் சிறுவன் நரேந்திரனாக இருந்த போது, அவருடைய அப்பா, கண்ணாடியின் முன் நரேந்திரனை நிறுத்தி வைத்து, அவரை, அவருக்கு உணர்த்திய சம்பவத்தை போனவாரம் சொன்னேன் அல்லவா? இப்போது, அவரது தாயார் சம்பந்தப்பட்ட ஒரு சுவையான நிகழ்ச்சியை, உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

ஒருநாள், நியூயார்க் நகர வீதி ஒன்றில் விவேகானந்தர் சிலருடன் நடந்து போய்க் கொண்டு இருந்தார். அவரது பார்வையோ, சாலையில் இருந்த தந்திக் கம்பத்துக்கு மேல் எதையோ உற்று நோக்கியபடி இருந்தது. உடன் வந்தவர்களும் 'எங்கே, எதை விவேகானந்தர் அப்படி ஆழமாக உற்றுப் பார்க்கிறார்?' என்று அந்தத் திசையில் தங்கள் பார்வையைச் செலுத்தினார்கள். ஆனால் அவர்கள் கண்களுக்கு எதுவும் தென்படவில்லை. கொஞ்சம் குழம்பிப் போய், "சுவாமி! அங்கே என்ன பார்க்கிறீர்கள்?" என்று அவர்கள் கேட்க, "என் மனத்தைப் பார்க்கிறேன்" என்றார் விவேகானந்தர்.

விவேகானந்தருடைய மனம், பொதுவாக மனிதர்கள் நிலைக்கு அப்பாற்பட்டு, சஞ்சரித்துக் கொண்டு இருக்கும். அதனால்தான் அவரது பார்வை எப்போதுமே கம்பீரமாக மேல் நோக்கியபடி இருக்கும். அவர் கை கட்டி, கம்பீரமாக நேர்கொண்ட பார்வையுடன் நிமிர்ந்து பார்க்கும் அழகைப் பார்க்கிறபோது, நமக்குள்ளே வீரம் வரும்!

சுவாமி விவேகானந்தரின் கம்பீரமான தோற்றத்துக்கு, அவரது அம்மாவும் ஒரு காரணம். ஒருநாள் தம் மகனுக்கு அந்த தாய் கொடுத்த அறிவுரை: நரேன்! நீ யார் முன்பும் சிரம் தாழ்ந்து நிற்கக் கூடாது. நீ நிற்கிற போது உன்னுடைய தன்னம்பிக்கை வெளிப்பட வேண்டும். அதைத்தான்

மாணவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய தொடர்!



சுவாமி போதமயானந்தா

சுவாமி, தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார்.

இது போல எல்லாருமே வாழ முடியும். அதற்குக் கை கொடுப்பது பிரார்த்தனை. ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்கிறபோது ஒவ்வொரு பூவாக ஆண்டவனின் பாதங்களில் போட்டு, 'நமஹ' என்று சொல்வது வழக்கம். 'நமஹ' என்றால் என்ன? 'நான் உன்னை வணங்குகிறேன்!' அதாவது ஆண்டவனை மாபெரும் சக்தியாக மனதார ஏற்றுக்கொண்டு, எளியவர்களான மனிதர்கள், தங்களது மரியாதையை, வணக்கத்தைத் தெரிவிக்கும்முறைதான் பிரார்த்தனை!

பிரார்த்தனையில் ஒரு சில வகை உண்டு. பிரார்த்தனைக் கூடத்திலோ, பள்ளிக்கூடத்தின் திடலிலோ ஒன்றுகூடி, இறைவணக்கம் செய்வது, கோவிலிலோ, அரங்குகளிலோ, எல்லோரும் ஒன்றுகூடி, கூட்டுப் பிரார்த்தனை, பஜன்ஸ் பாடுவது, கோவில், சர்ச், மசூதி, குருத்வாரா போன்ற புனிதத் தலங்களில் போய், அந்தந்த பிரிவைச் சேர்ந்த சமூகத்தினருடன் சேர்ந்து வழிபாடு செய்வது, இவையெல்லாம் சமுதாயப் பிரார்த்தனை என்ற பொதுவான பெயரால் குறிப்பிடப்படுகிறது.

அடுத்தது உலகளாவிய பிரார்த்தனை. வேதத்தில் சொல்லப்பட்ட இரண்டு ஸ்லோகங்களை நான் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். இவற்றை எழுதியது யார் என்று நமக்குத் தெரியாது என்றாலும், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் அவற்றை நாம் உச்சரித்துக் கொண்டு இருக்கிறோம் என்பதே, அந்த ஸ்லோகங்களின் பலத்துக்கு ஆதாரம்.

'சர்வ ஸ்தரது துர்காணி
சர்வோ பத்ராணி பஷ்யது
சர்வசத் புத்தி மாப்னோது
சர்வ சர்வத்ர நந்தது.'

இந்த ஸ்லோகத்தின் ஒவ்வொரு வரியும் 'சர்வ' என்ற வார்த்தையில் ஆரம்பிப்பதைக் கவனியுங்கள். 'சர்வ' என்றால் அனைவரும் என்று பொருள். இதிலிருந்தே இது, ஜாதி, மதம், இனம், மொழி, நாடு என்கிற வேறுபாடுகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட, உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்று என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

இந்த ஸ்லோகத்துக்கு என்ன அர்த்தம் என்று தெரிந்து கொள்ள நீங்கள் ஆர்வமாக இருப்பீர்கள். சொல்கிறேன். எங்கே இருந்தாலும், எல்லோரும் துன்பங்களிலிருந்து விடுபட வேண்டும்; எங்கே இருந்தாலும், எல்லோரும் நல்லது என உணர வேண்டும். எங்கே இருந்தாலும், எல்லோரும் நல்ல மனத்தைப் பெற வேண்டும். எங்கே இருந்தாலும், எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இதனை தனி நபர் பிரார்த்தனை என்று கூடச் சொல்லலாம். ஒரு தனி நபர், உலகளாவிய பிரார்த்தனை செய்கிறபோது கிடைக்கிற பலனில் அவருக்கும்தானே பங்கு உண்டு!

அனைவரது நலனுக்காகவும் நாடினமும் செய்யும் பிரார்த்தனை, தனிப்பட்ட நபர்களையும் நாளடைவில் மாற்றும் சக்தி கொண்டது. பொதுநலனுக்கான தொடர்ந்த பிரார்த்தனை, தனி நபர்களின் மனதை விசாலப்படுத்தும். இதனால் சுயநலம் சிறுக சிறுகக் குறைந்து, ஒரு கட்டத்தில் முற்றிலுமாக அழிந்துவிடும். சுயநலமில்லாத மனிதராக இருப்பது என்பது, எவ்வளவு நல்ல விஷயம்? ஒரு சில பேர் சுயநலமின்றி இருப்பதால் தானே உலகில் பல நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன? அப்படிப்பட்டவர்கள் அதிகரிப்பது எவ்வளவு சந்தோஷமான விஷயம்?

"கலெக்டர்கிட்ட மனு கொடுக்கப் போறீங்களா... என்ன விஷயம்?"

"போலீஸ் ஸ்டேஷன் இருக்கற எங்கத் தெருவுல திருட்டு பயம் அதிகமா இருக்கு... ஸ்டேஷனை வேற இடத்துக்கு மாற்றிடணும்னு..."

- மு. சாம்பமூர்த்தி



முன் குறிப்பிட்டதைப் போல, இன்னொரு ஸ்லோகமும் உண்டு. அதையும் தினமும் அனைவரும் காலையும், மாலையும் சொல்ல வேண்டும்.

'துர்ஜன சஜ்ஜனோ பூயாத்
சஜ்ஜன சாந்தி மாப்நுயாத்
சாந்தோ முச்சேத பந்தே ப்யோ
முக்தஸ் சான்யான் விமோசயேத்'

இந்த ஸ்லோகத்துக்கு என்ன அர்த்தம்?

எதிர்மறையான எண்ணங்களைக் கொண்ட மனத்தில் நல்லெண்ணங்கள் ஏற்படட்டும். நல்ல எண்ணங்களைக் கொண்ட மனத்தில், அமைதி ஏற்படட்டும். அமைதியான மனம் கிடைக்கப் பெற்றவர்கள், பந்த பாசங்கள், விருப்பு, வெறுப்புகளிலிருந்து விடுதலை பெறட்டும். அந்த நிலையை அடைந்தவர், மற்றவர்களும் அந்த நிலையை அடைய உதவட்டும்.

இந்த ஸ்லோகங்களை, அர்த்தம் தெரிந்துகொண்ட பிறகு, மறுபடி ஒரு தடவை படித்துப் பாருங்கள்! சுயநலமில்லாத, பொதுநல நோக்கு எவ்வளவு அழகாக வெளிப்படுகிறது!

எல்லோரும், குறிப்பாக மாணவர்கள், இந்த இரண்டு ஸ்லோகங்களையும் காலை, மதியம், மாலை என்று மூன்று வேளை, ஐந்து தடவைகள், இவ்விரு ஸ்லோகங்களையும் சொன்னால் நல்லது. நம் மனதில் திரும்பத் திரும்ப சொல்லப்படும் இந்த ஸ்லோகங்கள், சுயநலம் என்கிற தூசியைத் துடைத்து, மனத்தைச் சுத்தம் செய்து, பொதுநலம் என்கிற வெளிச்சத்தை ஏற்படுத்தும். அந்த அளவுக்கு, ஆழ் மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை படைத்தவை இந்த ஸ்லோகங்கள் என்றால் மிகையில்லை.


நல்ல எண்ணங்கள், மன அமைதி இவையெல்லாம் சேர்ந்து, சிந்தனையில் ஒரு தெளிவைத் தரும். தெளிவாகச் சிந்திப்பதன் மூலமாக சொல்லப்படும் கருத்துகளை எளிதாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். அதன் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளை, மற்றவர்கள் தயங்காமல் ஏற்றுக் கொள்வார்கள்.

(இப்போதைக்கு விடை பெறுகிறேன்)

படம்: **யோகா**

அருள்வாக்கு

அநாதைக் குழந்தைகளின் ஸம்ரக்ஷணை, திக்கற்ற ஏழைகளுக்கு ஸேவா ஸதனம் வைப்பது, ப்ராணி வதையைத் தடுப்பது, பசு வளர்ப்பது, பசிக் கஷ்டம் யாருக்கும் வராமல் உபகரிப்பது என்றிப்படி, எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால், பரமேச்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.



பணி என்றால் ஸர்வீஸ். ஸ்கூல் வைப்பது, ஆஸ்பத்திரி கட்டுவது, ஜல வஸதி பண்ணித் தருவது எல்லாம் ஸர்வீஸ்தான். நாம் ஸோஷல் ஸர்வீஸ் - ஸமூஹப் பணி என்றாலே இதுகளைத் தான் நினைக்கிறோம். ஆனால் இந்தப் பணியெல்லாம் இறைப் பணியில் கொண்டு சேர்த்தால்தான் நிறைவுள்ளதாகும் என்று நமக்குப் புரிய வைக்கிறதற்காகத்தான், ஈச்வர ஸம்பந்தமான பணிக்கே 'திரு' என்று அடைமொழி கொடுத்து 'திருப்பணி' என்று பேர் வைத்திருக்கிறார்கள். 'திருப்பணி' என்கிற வார்த்தை எல்லா ஸர்வீஸுக்கும் உச்சி அதுதான் என்று அர்த்தம் கொடுக்கிறது.

வெறும் பணியாக இல்லாமல் திருப்பணியாக இருந்ததால், 'ரைட்' கேட்பது, 'ஸ்ட்ரைக்' பண்ணுவது என்பதெல்லாம் இல்லாமல், மனப்பூர்வமாக உழைத்தார்கள். கார்யம் ஒழுங்காக நடந்து, இன்றைக்கும் லோகமே ப்ரமிக்கும்படியாக, எங்கே பார்த்தாலும் கோயிலும் கோபுரமுமாக இருக்கிறது. இப்போது இத்தனை ஜனங்கள், என்ஜினீயரிங் முன்னேற்றம் எல்லாம் இருந்தும் அவற்றைப் பழுது பார்க்கக்கூட நமக்குச் சக்தியில்லை!-

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

வலிதான்



• காந்தி கிருஷ்ணா

அம்மாவிடம் இழந்த பாசம் பக்கத்து வீட்டு அக்காவிடம் கிடைக்கிறது. திருமணமாகிப் போகும் அவளைக் கணவனிடமிருந்து பிரிக்க முயலும் டீன் இளைஞனின் பொசசிவ் உணர்வுக்குப் பெயர் காதலா? காமமா? கத்தி மேல் நடந்து காட்டும் வித்தையில் கெட்டிக்காரர் என்ற பெயரைத் தட்டியிருக்கிறார் 'செல்லமே' பட இயக்குனர் காந்தி கிருஷ்ணா. அவருடன் மினி சந்திப்பு.

நீங்கள் இயக்கிய 'நிலாக்காலம்' இரு தேசிய விருதுகளைப் பெற்றது. இருந்தும் அடுத்த படம் தர, ஏன் இத்தனை தாமதம்?

உங்கள் கேள்வியிலேயே பதில் ஒளிந்திருக்கிறது. 'நிலாக்காலம்' ஒரு கலைப் படம். நிறைய பாராட்டுகளைப் பெற்றுத் தந்தது. உலகப் பட விழாக்களில் வலம் வந்தது. இங்கே பரபரப்பான கமர்ஷியல் வெற்றியை மட்டுமே வெற்றியாகப் பார்க்கிறார்கள். கமர்ஷியல் ஹிட் கொடுத்தால்தான், அடுத்தடுத்து வாய்ப்புகள் தேடி வரும். சினிமா மீது தேர்ந்த ரசனையும், நேசிப்பும் கொண்ட ஒரு தயாரிப்பாளருக்காகக் காத்திருந்தேன் என்பதும், தாமதத்துக்கு முக்கியமாக காரணம். 'செல்லமே' படத் தயாரிப்பாளர்கள் ஞானவேல், ஜெயப் பிரகாஷ் இருவரும் அந்த ரகம்தான்.

ஷங்கரின் வலது கை, ஆரம்பம் முதலே அவரது இணை இயக்குனர் போன்ற அனுகூலங்கள், உங்களுக்கு கை கொடுக்கவில்லையா?

எனது மரியாதைக்குரிய அடையாளம் அது. பவித்ரன் இயக்கிய 'ஐ லவ் இந்தியா' படத்தின் கதை விவாதத்தில் நான் பங்கெடுத்தேன். அப்போது ஷங்கர் இணை இயக்குனர். எனது விவாதங்களை ரகசியமாக ரசித்து வந்தவர், ஒருநாள் நடு இரவில் எனது அறைக்கு வந்தார். "நான் எனது முதல் படத்தை இயக்கப் போகிறேன். நீ எனது பிரதான உதவியாளன்" என்றார். 'ஜென்டில்மேன்'ல் தொடங்கி 'இந்தியன்' வரையிலும் அவரோடு பணி புரிந்தேன். ஒரு நல்ல நண்பனைப் போல் நடத்துவார். எனது சந்தோஷமான நாட்கள் என்றால், அவை அவருடன் பணியாற்றிய நாட்கள்தாம். அவரது மாணவன் என்பதால்தான், 'என்ஜினியர்' பட வாய்ப்பு கிடைத்தது.

அன்று அரவிந்த்சாமி, மாதுரி தீக்ஷித் என பெரிய நட்சத்திரங்களோடு தொடங்கப்பட்ட உங்கள் முதல் படம், மிகுந்த எதிர்பார்ப்பிற்கிடையில் நின்று போனபோது இடிந்து போனீர்களா?

அந்தப் படத்தின் டைட்டிலுக்குக் கீழே 'தி மேன் ஆஃப் டெஸ்டினி' என்று கேப்ஷன் போட்டிருந்தேன். அது உண்மை என்பது போல, 'நான்தான் எல்லாமே' என்று விதி விளையாடிவிட்டது. முதல் அடியே பலமாக இருந்ததால், பத்து நாட்கள் வரையிலும்கூட வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்திருக்கிறேன். அப்போதெல்லாம் என்னைத் தட்டிக் கொடுத்தவர் எனது இயக்குனர்.

இயக்குனராக ஜெயிக்கிறவரை திருமணத்தைப் புறக்கணித்து, பாதி வாழ்க்கையைத் தொலைத்துவிடும் வழக்

த்தை, உங்களைப் போன்ற உதவி இயக்குனர்கள் கடைப்பிடிக்கிறார்கள். அப்படியென்ன லட்சியப் பிடிவாதம்?

சக இயக்குனர்களின் வாழ்க்கையை நான் விமர்சிக்க விரும்பவில்லை. பொதுவாக சமுகம், சினிமா இயக்குனர் என்றால், தொடர்ந்து தவறான கண்ணோட்டத்தில் பார்க்கிறது. உண்மையில் சினிமா இயக்குனர்கள் பலரும், தனி மனித ஒழுக்கத்தோடு இருக்கிறார்கள். அதிக உழைப்பாளிகள். ரசிகர்களை சந்தோஷப்படுத்த, தங்கள் சந்தோஷங்களை இழந்து, இடைவிடாது சிந்திப்பவர்கள். எனது சொந்த வாழ்க்கையில் அடுத்தடுத்து பெரிய இழப்புக்களைச் சந்தித்ததால், என்னைப் பற்றி யோசிக்க முடியாமல் போய்விட்டது.

குடியாத்தம் அருகில் உள்ள ரங்க சமுத்திரம் கிராமம்தான் எனது சொந்த ஊர். பொறியியல் பட்டதாரி. நான் குடும்பத்துக்கு மூத்த பையன். நடுத்தர விவசாயக் குடும்பம். நெல் வயல்களுக்கு நடுவில்தான் எங்கள் வீடு. எனக்கு இரண்டு தம்பிகள். பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் சென்னைக்கு வந்தேன்.

நான் ஊரில் இல்லாத குறையைத் தீர்த்தவர்கள் என் தம்பிகள். என்னை உற்சாகப்படுத்திக் கொண்டேயிருந்த நண்பர்கள். 'செல்லமே' பட வேலைகள் ஆரம்பித்தபோது, எனது மூத்த தம்பி மஞ்சள் காமாலையில் படுத்த படுக்கையாக இருப்பதைக் கேள்விப்பட்டு பதறிப் போனேன். சென்னையில் சிகிச்சையளிக்க, அவனை உடன் அழைத்து வரும்படி கார் அனுப்பினேன். வரும் வழியிலே அவன் பிரியா விடை கொடுத்துவிட்டான். மனத்தைக் கல்லாக்கிய படி படப்பிடிப்பில் கவனம் செலுத்தினேன். அடுத்த மாதமே, எனது சித்தியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற இளைய தம்பி விபத்தில் சிக்கிக் கொள்ள, சித்தி சம்பவ இடத்திலேயே இறந்து போனார். தம்பிக்கு படுகாயம். இந்த நேரத்தில் விஷயத்தைக் கேள்விப்பட்டு, எனது இயக்குனர் எனக்கொரு எஸ்.எம்.எஸ் அனுப்பினார். 'Pain is the secret of success' என்ற அந்த எஸ்.எம்.எஸ்ஸை படப்பிடிப்பு முடிந்து, முதல் காட்சியை தயாரிப்பாளர்களுக்குப் போட்டுக் காட்டி, அவர்கள் கை குலுக்குகிறவரை அழித்து விடாமல் வைத்திருந்தேன்.

வெற்றி ஒரு பக்கம் ஆறுதல் தந்தாலும், எனது இழப்புகளின் வலி இன்னும் அழுத்திக் கொண்டேயிருக்கிறது. இதில் திருமணத்தைப் பற்றியெல்லாம் நினைக்க எங்கே இடமிருக்கிறது?

- ஜெய்



• 'செல்லமே' -படத்தில்

வெற்றியின் வழி

சுண்டல் ஜோக்ஸ்

''ஏண்டி புவனா
இந்த சுண்டலெ
லாம் தொண்டை
குள்ளே இறா
கவே மாட்டே
குதே? ஒ



மெழுகு வாசனை வேறு வருதே?''

''ஐயைய்யோ! அது நிஜ சுண்டல் இல்லீங்க! கொலுப்படியில் வைக்கறதுக்காக, வாங்கின மெழுகு சுண்டல்!''

''சே! வர வர எதுக்குத்தான் குரல் கொடுக்கறதுன்னு இந்த மனித உரிமை கமிஷனுக்கு விவஸ்தையே இல்லாமல் போச்சு!''

''ஏன்?''

''மெகா சீரியல்கள் பார்த்து அழுகிற தாய்க்குலங்களுக்கு இடைஞ்சலா இருக்குன்னு, நவராத்திரியை, நவபகல்னு மாத்தணும்னு போராட்டம் செய்யறாங்களாம்...!''



''நேத்து ஏன் உமா பீச்சுக்கு வரலை?''

'''பக்கத்து வீட்டு கொலுவுக்குப் போயிட்டு எங்கம்மா நிறைய சுண்டல் கொண்டு வந்துட்டாங்க. பை!''ன்னு ஒரு எஸ்எம்எஸ் அனுப்பினேனே! அதை நீ பார்க்கலையா, சுரேஷ்''




–பாஸு

"மெகா சீரியல் பார்த்துக்கிட்டே சுண்டல் செஞ்சியா?"
"ஆமாம்! எப்படித் தெரிஞ்சது?"
"சுண்டல்லாம் ஒரே உப்புக் கரிக்குதே?"





"காலம் என்னமா முன்னேறிடுச்சு."
"ஏன்? எதுக்காக இப்படி அலுத்துக்கறே?"
"அடுத்தத் தெரு அம்புஜம் மாமி செல்ஃபோனிலேயே ஒரு பாட்டு பாடிட்டு, சுண்டலை கூரியரில் அனுப்பச் சொல்லிட்டா!"




"அம்மா! நீ செஞ்சிருக்கிற சுண்டலெல்லாம் ஊசல் நாத்தம் நாறுது!"
"அப்படியா சொல்றே? எனக்கு ஜலதோஷமா இருக்கறதால ஒண்ணுமே தெரியலையேடா!"
"கொலுப் படிக்கட்டுல இருக்கற பொம்மைங்கள்ளாம்கூட மூக்கைப் பொத்திட்டு இருக்கறதைக் கவனி! இப்பவாவது நம்புறியா?

படங்கள்: அர்ஸ்

பொடாவில் கைதான சில பிரபலங்கள் பின்னர் விடுதலை அடைய, பொடா சட்டத்தை ரத்து செய்வதாக மத்திய அரசு அறிவிக்க, பொடாவைப் பற்றி பேச்சற்றுப் போய்விட்டது.

ஆனால் பொடாவின் தணல் இன்னமும் தகித்துக் கொண்டு தான் இருக்கிறது.

'கடந்த 24.11.2002ல் தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் ஆயுதப் பயிற்சி செய்து கொண்டிருந்த இருபத்தியேழு பேர் கைது செய்யப்பட்டனர். அப்போது நடந்த மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார்' என்றது





* பழனிச்சாமி



* துரைசாமி

தொடரும் பொடா... கதறும் கிராமம்...!

காவல்துறை.

இப்போது பொடா விலக்கப் பட்டும், அந்த இருபத்தியேழு பேரில் இருபத்தி நான்கு பேர் இன்னும் பொடா கைதிகளாக சிறையில் வாடுகிறார்கள். இவர்களது பெயில் பெட்டிஷன் உயர் நீதிமன்றத்தில் அப்படியே தேங்கி நிற்கிறது. அதுவும், மதம் பிடித்த பொடாவுக்கு ஒட்டுமொத்தமாக ஏழு பேரை வாரிக் கொடுத்து விட்டு, பரிதவித்துக் கிடக்கிறது நத்தம் காலனி.

தர்மபுரியிலிருந்து உடல் அதிர ஆட்டோ குலுக்கலில் பயணப்பட்டால், சில கி.மீக்களில் வருவது நாய்க்கன்பாளையம் கிராமம். அதன் காலனிப் பகுதிதான் நத்தம் காலனி.

சில நாட்களாகப் பெய்துகொண்டிருக்கும் மழையால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சை பூத்திருக்கிறது. ஆனால் தீப்பெட்டி சைஸ் வீடுகள், வெளியே துவைத்து உலர்த்தப்பட்டிருக்கும் கந்தல் துணிகள், அழுக்கு உடையுடன் ஓடி விளையாடும் குழந்தைகள்... என - முகத்தில் அறைகிறது வறுமை. நாம் ஊருக்குள் போனதும் ஊர் மக்கள் மரத்தடியில் குழுமி விட்டார்கள்.

"இங்கே எல்லோருமே விவசாயக் கூலிங்கதான். நாலஞ்சு வருசமா மழை இல்லை. அதனால இங்கே வேலை இல்லை. இப்போ ஆளாளுக்கு பெங்களூர், கோயம்புத்தூருன்னு போயி கூலி வேலை பார்க்கறோம். ஒருவேளைக் கஞ்சிக்கே கஷ்டம்... இதுல பொடா வேற..." ஆதங்கமாய்ச் சொல்கிறார்கள்.

இந்தக் காலனியைச் சேர்ந்த 'பொடா' சிறைவாசிகள் ஏழுபேரில்

ஒருவர் துரைசாமி. இவரது மனைவி செல்வி, உடைந்த குரலில் பேச ஆரம்பித்தார். ஸ்கூல் யூனிபார்மில் இருந்த கடைக்குட்டி ஆனந்த், அம்மாவின் சேலை நுனியை முறுக்கியபடி நிற்கிறான்.

"எங்களுக்கு மூணு பிள்ளைங்க. பெரியவ அர்ச்சனா எட்டாவது படிக்கிறா. அடுத்தவன் அஜீத், மூணாவது படிக்கிறான். இவன் கடைசிப் பையன் ஆனந்த். இப்போதான் பள்ளிக் கூடத்துல சேர்த்திருக்கேன். காலிபாட்டில் வியாபாரம் செஞ்சுகிட்டிருந்தார் என் வீட்டுக்காரர். அவரை 'பொடா'வுல போட்டு ரெண்டு வருசம் ஆகப் போகுது'' என்றவர் சற்றே நிறுத்தி மீண்டும் பேச ஆரம்பித்தார் :

"மூணு புள்ளைங்கள வச்சுக் கிட்டு என்ன பண்றதுன்னு தெரியலை... அப்புறம் மாதர் சங்கத்துல கடன் வாங்கி பெட்டிக்கடை வச்சேன். நெதத்துக்கு இருபது, முப்பது கிடைச்சாலே அதிகம். அதுவும் வியாபாரம் ஆனாத்தான். எங்கம்மா மாசத்துக்கு அம்பதோ, நூறோ கொடுப்பாங்க. என் வீட்டுக்காரரோட தம்பி வீட்டுல சாப்பாடு போடறாங்க. ரொம்பக் கஷ்டமான வாழ்க்கைங்க... குடும்பத்துக்குன்னு ஆளு இல்லேன்னா...'' அதற்குமேல் பேச முடியாமல் மௌனமாகிறார். சிறுவன் ஆனந்த் சோகம் கப்பிய முகத்துடன் அம்மாவையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.



• ஆனந்த்

அவனது அக்கா அர்ச்சனா. "இங்க ஊர்ல சில பேரு 'உங்க அப்பா ஜெயில்ல இருக்காரா'ன்னு கேட்பாங்க. 'இனிமே அப்படிக் கேக்காதீங்க. சீக்கிரம் வந்துடுவாங்க'ன்னு சொல்வேன்'' என்பவளின் கண்கள் தளும்புகின்றன.

மீண்டும் பேச ஆரம்பிக்கிறார் செல்வி: ''தீபாவளி நெருங்க நெருங்க பயமா இருக்கு. அவரு இருந்தவரைக்கும் ஏதோ எங்க சக்திக்கு ஏத்த மாதிரி தீபாவளி கொண்டாடுவோம். இப்போ அவரு சிறைக்குப் போயி ரெண்டு தீபாவளி ஆயிடுச்சு. சாப்பாட்டுக்கே வழி இல்லாதப்போ, புதுத் துணி, வெடி எல்லாம் எங்கே வாங்கறது? தீபாவளி அன்னிக்கு புள்ளைங்க எல்லாம் ஏங்கிப் போய்க் கிடக்கும். 'ஊர்ல எல்லாரும் தீபாவளி கொண்டாடறாங்க... நமக்குக் கிடையாதாம்மா'ன்னு கேக்குங்க. நானும் 'நமக்கெல்லாம் தீபாவளி கிடையாது'ம்பேன். அதை மீறி புதுத் துணி வேணும்னு அழு

• செல்வி, அர்ச்சனா



வுங்க புள்ளைங்க. என்ன செய்யறது. நானும் சேர்ந்து அழுவேன்'' என்றவரின் குரல் கம்முகிறது.

நீண்ட நேர அமைதிக்குப் பிறகு மீண்டும் பேசிய செல்வி, ''பிள்ளைங்க மூணும் அப்பா மேல ரொம்பப் பாசமானவங்க. அவரை சென்னை சிறையில வச்சுருக்காங்க. அங்க போய் பார்க்கிறதுன்னா ஒரு ஆளுக்கே அறுநூறு, எழுநூறு ஆவும். வயித்துப்பாடே பெரிசா இருக்கறப்ப அது முடியுமா? அப்பா முகத்தைப் பாக்காம புள்ளைங்க ஏங்கிக் கிடக்கு...''. அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. அவர் கண் கலங்குவதைப் பார்த்து, கடைக்குட்டி ஆனந்தும் அழ ஆரம்பிக்கிறான்.

செல்வியின் அருகிலிருந்த சகுந்தலா பேச ஆரம்பிக்கிறார். ''இவருக்கு மூன்று மகன்கள், ஒரு மகள். "ப்ளஸ் டூ முடிச்சுட்டு வீட்டுல இருந்தா என் மக ரமணி. இருபது வயசு. அவளுக்கு ஒரு கல்யாணம் பண்ணிப் பார்த்துடணும்னு நான் ஆசைப்பட்டேன். ஆனா அவ, 'நர்ஸ் வேலைக்குப் படிக்கணும். நாலு பேருக்கு உதவி செய்யணும்'னு சொல்லிக்கிட்டே இருந்தா... இப்போ ஜெயில்ல இருக்கா'' என்று பெருமூச்சு விட்டவர், "அவ ஜெயில்ல இருக்கறப்ப அவங்க அப்பா உடம்பு முடியாம செத்துப் போயிட்டார். அதுக்குக் கூட அவளை விடலை. ஒத்த பொண்ணு. அவளுக்கு அப்பா முகத்தை பாக்கக் கொடுத்து வைக்கலை'' என்றவர் அதற்கு மேல் பேச விரும்பாதவராய் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.



• சகுந்தலா

இன்னமும் சிறுவன் ஆனந்தின் அழுகை தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. "அப்பா நினைப்பு வந்தாலே அழ ஆரம்பிச்சுடுவான்'' என்கிறார்கள், சுற்றிலுமிருந்தவர்கள்.

• அஜித், ஆனந்த், அர்ச்சனா



அடுத்து இன்னொரு பொடா கைதியான பழனிச்சாமியின் தந்தை ஆண்டியப்பன் பேசினார். இவருக்கு நான்கு மகன்கள்; ஒரு மகள். பழனிச்சாமி தான் கடைசிப் பையன்.

)ருபத்து நான்கு வயது.

"ப்ளஸ் டூ முடிச்சுட்டு வீட்டுல)ருந்தபடியே இம்ப்ரூவ்மெண்ட் தர்வு எழுதறதுக்காக படிச்சுக் ட்டிருந்தான். மத்த மூணு பசங் ளுக்கும், பொண்ணுக்கும் திரு ணம் ஆயிடுச்சு. கடைசிப் பையன் றதுனால அவன் மேல உசுரையே ச்சிருந்தோம். அவனை ஏதும் வேலைக்கு அனுப்பாம, இந்தத் ள்ளாத வயசுலேயும் நான் கூலி வேலைக்குப் போயி சம்பாதிப்பேன். அவன் நல்லாப் படிச்சு வேலைக்குப் போகணும்னு ஆசைப்பட்டான்... றும்..." - பேசி முடித்தார்.

அடுத்ததாக ரவி என்ற பொடா கைதியின் தாய், "ரவி கார்ப்பென் டர் வேலைக்குப் போயிட்டிருந்தான். அவன் அண்ணனும் கூலி வேலை தான் பார்க்கிறான். அவனுக்குக் கல் யாணம் ஆயிடுச்சு. ரவியை திடீர்னு கைது செஞ்சதுல, அவன் தங்கைக்கு மனசு பாதிச்சிருச்சு. திடீர்னு அது காட்டுக்கு எங்காவது போயிடும்... இப்போ தர்மபுரி அரசு மருத்துவ மனையில்தான் வைத்தியம் பார்க் கிறோம்" என்றார் சோகமாய்!

அழுதழுது சக்தியற்று விம்ம ஆரம்பித்திருந்தான் ஆனந்த்.

'பொடா'வை முன் தேதியிட்டு ரத்து செய்யாதது தான் இந்த அவல நிலைக்குக் காரணம். ஆனால் வைகோவைத் தவிர, வேறு அரசியல் தலைவர்கள் இதை வலியுறுத்த வில்லை.

இன்னும் சில அரசியல்வாதிகள் பொடா ரத்து செய்யப்பட்டதை(யும்) தங்களது வெற்றியாக அறிக்கை விட்டு மகிழ்கிறார்கள்.

ஆனால்...

ஆனந்த் இன்னமும் விம்மிக் கொண்டிருக்கிறான்.

- டி.வி.எஸ்

படங்கள் : **ஆர். ரவிக்குமார்**

போராடுகிறோம்!

இந்த வழக்கில் கைதான ஆண்களை சென்னை மத்திய சிறைக்கும், பெண் கைதிகளை வேலூர் சிறைக்கும் மாற்றி ஏழு மாதங்களாகிவிட்டன. ஆனால் இதுவரை நத்தம் காலனியிலிருந்து யாரும் சென்னைக்கோ, வேலூருக்கோ சென்று கைதிகளைப் பார்க்கவில்லை.

இந்தக் கைதிகளுக்காக மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த வழக்கறிஞர்கள்தான் வாதாடி வருகிறார்கள். அவர்களில் ஒருவரான சிபிசிஎல்லைச் சேர்ந்த ஹரிபாபு, "கடந்த ஐந்து மாதங்களாக இவர்களுக்கு பெயில் கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகி வருகிறோம். ஆனால் இன்னமும் பெயில் மனு கிடப்பிலேயே இருக்கிறது. 'பொடா' சட்டத்தை முன் தேதியிட்டு ரத்து செய்ய வேண்டும். அதாவது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பொடா வழக்குகளை ரத்து செய்ய வேண்டும். அதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிறோம்" என்றார்.



"அவர் தயாரிச்ச படத்துக்கு மட்டும் எந்தப் பிரச்னையும் வராததுக்குக் காரணம் படத்தோட தலைப்புதான்..."

"என்ன தலைப்பு...?"

"ராமதாசுக்கு நன்றி..."

- சஷ்டிக் வேலன்

வலம்புரி முத்து

சத்தியப்ரியன்

24

மார்பெலும்புகள் சிதைந்து போய், இதயம் அடிபட்டு, திருஞானம் இறந்து போயிருந்தான். போஸ்ட்-மார்ட்டம் என்ற பெயரில் மிகவும் இழுத்தடிக்க வேண்டாம் எனச் சொல்ல வேண்டியவர்களிடம் சொன்னதால், உடலை அப்படியே அனுப்பிவிட்டார்கள். இறந்த உடலைப் பாதுகாக்கும் கண்ணாடிப் பதப்பெட்டியில் உடல் வந்தது. அளவுக்கதிகமாக அவன் ரத்தத்தில் பெதடீன் மருந்து கலந்திருந்ததாக மருத்துவச் சான்றிதழ் கூறியது. 'ஒரு வயதுச் சிசுவுடன் விதவைக் கோலம் தாங்க வேண்டி வந்துவிட்டதே' என்ற கவலை மாமனார் தியாகராஜனுக்கு. பெற்ற மகனை, தான் இப்படி கல்குண்டாக இருக்கும்பொழுது பறிகொடுக்க நேர்ந்துவிட்டதே என்ற துயரம் மாமியார் சிவகாமிக்கு. அவன் மூலம் ஏற்பட்ட மனைவி என்ற ஸ்தானமும், அதே அவனில்லாமல் போனதால் ஏற்பட்ட விதவை என்ற ஸ்தானமும், தாமரைக்கு விரும்பக் கூடியதாக இல்லை. 'இது என்ன, விதி எல்லா மூலைகளிலிருந்தும் தாக்குகிறது!' என வேதனைப்பட்டாள்.

உன்னூரில் திருஞானத்தின் சாவு காற்றெனப் பரவியது. அவர்கள் சார்ந்த நிறுவனமே பத்துக்கும் மேல் என்பதால் ஊழியர்கள், பங்குதாரர்கள், நிர்வாகிகள் எண்ணிக்கையே அதிகம் இருந்தது. உறவுக்காரர்களுக்கு ஈமெயில் மூலமாக, செல்ஃபோன் மூலமாக, எஸ்.டி.டி. மூலமாகத் தகவல் பறந்தது. துக்கம் கேட்க ஜனங்கள் வந்த வண்ணம் இருந்தனர். புத்திர சோகத்தில் மூழ்கித் தவிக்கும் பெற்றோருக்கு ஆறுதல் சொல்வதா, வாழத் தொடங்கும் முன்பே புருஷனைப் பறி கொடுத்த மனைவிக்கு ஆறுதல் சொல்வதா எனத் தடுமாறினார்கள். அவன் மேல் தேவையில்லாத துவேஷம் பாராட்டிய ஓரகத்திகள் கூட, தாமரையின் தற்சமய நிலைக்கு இரக்கம் தெரிவித்தனர். தாமரை மதுராவுக்குப் பால் கொடுப்பதும், வெளியில் வந்து அமர்வதும், மீண்டும் பிள்ளையைக் கவனிப்பதுமாக இருந்தாள்.

இழவுக் காரியங்கள் தாமாகவே நடந்தேறிக் கொண்டிருந்தன. பசுதானம் பெயருக்கு நிகழ்வதால், அதுபோல வேண்டாம் என்று தியாகராஜன் நிஜமாகவே பசுதானம் செய்ய வேண்டும் எனப் பிரியப்பட்டார். பலகோடி ஜன்மமானாலும், இந்தப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கழுவ முடியாது எனத் தோன்றியது. செய்யும் கருமங்களைச் சாத்திரப்படி செய்வதாலாவது மனதுக்கு ஒரு சாந்தி கிடைக்காதா எனத் தோன்றியது. பசு வரவழைக்கப்பட்டது. பசுவை நல்லவிதமாக வைத்துக் கொள்ளும் அந்தணர் ஒருவர் மைலாப்பூரிலிருந்து அழைத்து வரப் பட்டார்.

வாய், கை கட்டப்பட்டு, உடல் அந்தப் பெரிய கூடத்தின் நடுவில் கிடத்தப்பட்டது. தலைமாட்டில் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்கள். தேங்காய் ஒன்று உடைத்து வைத்தார்கள்.

அருணாசலம், சீதை, பழனியப்பன், விசாலாட்சி ஆச்சி, நால்வரும் டாக்ஸியில் வந்து இறங்கினார்கள். உயிர்க்குலை அறுந்து விழும்படி, பெற்ற மகளைக் கட்டிக் கொண்டு விசாலாட்சி வைத்த ஒப்பாரி அந்த வீட்டையே நிலைகுலைய வைத்தது. பழனியப்பன் பெற்ற மகளின் கைகளைப்பற்றிக் கொண்டு, இடையறாது கண்ணீர் சொரிந்தார்.

தாலிக்கு அரும்பெடுத்த தட்டானும் கண்குருடோ?

சேலைக்கு நூலெடுத்த சேணியனும் கண்குருடோ?

பஞ்சாங்கம் பார்த்து வைத்த பாப்பானும் கண் குருடோ?

எழுதினவன் தான்


குருடோ? எழுந்தாணி கூரில்லையோ?

என ஒப்பாரி பாடுபவர்களின் ஓலம் மரணத்துக்கும், இருப்புக்குமான அவல முரணைச் சுட்டிக் காட்டுவதாக இருந்தது.

வாசலில் நான்கு கம்புகள் ஊன்றி சம்பிரதாயமாகப் பந்தல் போட்டார்கள். பந்தலுக்கு அருகில் உரல் ஒன்று போட்டார்கள். அதில் சிறிது பச்சை நெல்லைப் போட்டு, ஒப்புக்காக உலக்கையை மதுராவின் பசுந்தளிர்க் கையால் பிடிக்கச் சொன்னபொழுது கதறாதவர்களே இல்லை எனலாம். பிஞ்சுமகள் நெல்குத்தி வாய்க்கரிசி வாங்கிக் கொள்ளும் திருஞானத்தின் குரூரத் தலையெழுத்தை, யாரால் மாற்றி விட முடியும்!

உள்ளிருந்து நெருங்கிய உறவினர்களால் குளிப்பாட்டப்பட்ட உடல், வாசல் பந்தலுக்குக் கொண்டு வரப்பட்டது. பட்டம் சுற்றுதல் என்ற சடங்கானது - உடலையும், பந்தலையும் வலம் வருவது - நடந்தேறியது.

நகரத்தின் முக்கியப் பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், தொழில் அதிபர்கள், பண்டிதர்கள் என ஏராளமானவர்கள் துக்கம் விசாரிக்க வந்திருந்தனர்.



வேன் ஒன்று பெஸன்ட் நகர் மயானத்துக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகி இருந்தது. பங்காளி வீட்டு ஆண்கள், திருஞானத்தின் உடலைச் சுமந்து வேனில் ஏற்றினார்கள். உடல் கிடந்த பாயைச் சுருட்டுவதற்கு மீண்டும் மதுரா அழைக்கப்பட்டாள். ஒரு வயது பிஞ்சுக் கரங்கள், இறந்த தந்தை கிடந்த பாயைத் தொட்டன.

''ஆத்தா! ஓம் புருசன் மூஞ்சியை நல்லாப் பார்த்துக்க ஆத்தா'' என அலறினார்கள்.

தாமரை திருஞானத்தின் முகத்தைப் பார்த்தாள். 'அவன் பேரென்ன?' எனக் கைகொட்டிச் சிரித்த முகம். 'உனக்கு கதிரேசன் போதை, எனக்கு பெத்தடின் போதை' என்ற முகம். 'மனைவி என்பவள் புஷ்கோட்டில் செருகப்படும் தங்கப் பித்தான் மட்டுமே!' என்ற முகம். 'பொண்ணு சிரிக்கறப்ப கதிரேசன் மாதிரியே இல்லை?' என வக்கிரமாகச் சிரித்த முகம். இதில் எந்த முகத்தை அவள் கடைசியாகப் பார்த்துக் கொள்ள ஆசைப்படுவாள்?

வீதி வரை சென்று, பெண்கள் அழுது விட்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். உறவுக்காரர்கள் இரண்டு, மூன்று கார்களில் மயானம் நோக்கிக் கிளம்பினார்கள்.

"நல்ல பெரிய வளாகம் அப்பச்சி, தனித்தனியாக புரோகிதங்க இருக்காங்க. காரியம் செய்யவும் சரி, தானம் வாங்கவும் சரி என்ன ஒரு கட்டமைப்பா இருக்காங்க. பட்டணம் பட்டணம் தான். அஞ்சு நிமிஷம்தான். உள்ள போன பாடி சாம்பலா வந்திருச்சு'' என மின்சார மயான மகிமையைப் பேசி மாளவில்லை ஊரிலிருந்து வந்தவர்களுக்கு.

வாசலிலேயே பந்தல் போட்டு பெரிய பெரிய பரிசாரகர்கள் ஏற்பாடு செய்யப் பட்டு உணவிற்கு ஏற்பாடானது. தியாக ராஜனும், சிவகாமியும், தாமரையும் ஒரு வாய் சோறு கூட உண்ணவில்லை. தாமரை புகுந்த வீட்டின் பிரும்மாண்டத்தில் தாமரையின் தாய் வீட்டினர் பம்மிப் பம்மி நடமாடினர்.

"வாழ்வரசியாப் போக வேண்டியவ இப்படி சாகக் கொடுத்தவளா நிக்கிறியேடி?'' என்றாள் விசாலாட்சி.

"நான் வாங்கிட்டு வந்த வரம்."


''கலியாணம் பேசத் துவங்கினதிலருந்து மறுப்பு; மறுப்பு. அதாஞ்ச, இப்படி எல்லாத்தையும் பறி கொடுத்த நிக்கிற.''

''இல்லையே! எனக்கு எதையும் பறிகொடுத்தா மாதிரி தெரியல ஆத்தா! நான் பறி கொடுத்தது இப்ப இல்ல. கலியாணத்துக்கு முன்ன."

"துக்கிரித்தனமா எதையாவது பேசி வைக்காத ஆத்தா. அவுக யாரு காதுல யாவது விளப் போவுது."

"நான் எதுக்கு ஆத்தா பயப்படணும்? இந்த சின்னஞ்சிறு பிஞ்சைப் பார்த்துக் கேட்டாக. இது சிரிக்கிறப்ப கதிரேசன் சாடையா இருக்கேன்னு. அப்பவே நாண்டுகிட்டு செத்துடமாட்டோமான்னு ஆயிருச்சு. பறி கொடுக்க தாலியைத் தவிர வேறு எதுவும் பாக்கி இல்ல. இப்ப தாலியும் போகப் போவுது, அவ்வளவுதான்."

தாமரையை நீராட்டி பந்தல் நடுவில் அமர்த்தினார்கள். அவள் அருகே ஒரு நாழி நிறைய நெல், வெள்ளைப்பூண்டு, தண்ணீர் சொம்பு மூன்றும் வைக்கப்பட்டன. முதலில் பங்காளி வீட்டு ஆண்



களும், தாமரை வீட்டுப் பங்காளிகளும் பந்தலை மும்முறை வலம் வந்தார்கள். 'இது என்ன கொடுமையடா சாமி' என தியாகராஜன் குமுறினார். 'சின்ன வயசுல சாகக் கொடுத்தவளுக்கு இம்புட்டு சடங்குகள் செய்யோணுமா ஆத்தி!' என விசாலாட்சி குமுறினாள். இது போன்ற அவ

ங்களின் மூலம் மக்களின் கசடும், அழுக்கும், வக்கிரமும், குரூரமும் வெளிப்படுகின்றன சடங்குகள் என்ற பெயரில்.

அருணாசலம்தான் கோடி வெள்ளைச் சேலை எடுத்து வந்திருந்தான். "அய்யய்யோ! என் தங்கமே! முகூர்த்தச் சேலை வாங்கிக் கொடுத்த நானே, உனக்கு ச்சை கொடுக்கறபடி ஆண்டவன் எழுதிப்புட்டானே தங்கச்சி" என அவன் முகத்தை மூடிக் கொண்டு கதறினான். ரத்தபாசம் என்பது சந்தர்ப்பம் பார்த்து வெளிப்பட்டு விடும் போல. மனிதர்கள் எல்லா நேரத்திலும் சந்தர்ப்பவாதிகளாக இருப்பதில்லை.

தியாகராஜனின் அத்தை எனக் கருதப்பட்ட வயதான விதவைப் பெண்மணி தாமரையின் தாலிச் சங்கிலியைக் கழற்றித் தண்ணீர்ச் செம்பில் போட்டாள்.

காலம் யாருக்காக நின்றது? 'கல்லன்றி கழித்தல்' சடங்கு நடந்தது. அவனுடைய அஸ்தி சமுத்திரக் கரையில் கரைக்கப்பட்டது.

பதினாறு நாள் சடங்காக நடைபெற்று முடிவாக சவுண்டியும் நடந்தது.



"தாமரையைக் கூட்டிட்டுப் போறீயளா? இல்லை, இங்கனயே இருக்கட்டுமா?" என்ற கேள்வி எழுந்தது.

சிவகாமிக்கோ, தியாகராஜனுக்கோ மருமகள் தங்கள் வீட்டோடு இருப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. சந்தோஷம் தான். ஆனால் இதில் யோசித்து முடிவு எடுக்க வேண்டியவள் தாமரை தானே தவிர, வேறு ஒருவர் இல்லை.

"என்ன சொல்ற தாமரை?" என்றான் ஆத்தா.

இந்தக் கேள்வி நிச்சயம் எழும் என்று தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்பாகவே இதைப் பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். விசாலாட்சிக்குப் பெண்ணை வீட்டோடு கூட்டிக் கொண்டு போக சம்மதம் என்றாலும், இனி வரும் காலங்களில் எல்லாம் அவள் தனிமைப்பட்டு, துன்புற நேருமே என்ற அச்சம் இருந்தது. வாழும் வீட்டில் இளம் விதவையை வைத்துக் காப்பாற்ற அனைவருக்கும் பொறுமை வேண்டும். வார்த்தைகளைக் கொட்டினால் அள்ள முடியாது எனத் தெரிந்தும் கொட்ட முடியாமல் இருக்க முடியுமா எனத் தெரியவில்லை. மகனை இழந்த துக்கத்தை மறைக்க, விதவை மருமகளையும், பேத்தியையும் பார்ப்பது மூலம், அவனது பெற்றோர் ஆறுதல் அடைவதற்கும், மகளை விதவையாக வீட்டுக்குக் கூட்டி வருவதற்கும் பேதம் இருக்கத்தான் செய்கிறது. இது போன்ற நேரங்களில் பெண்களின் நிலைப்பாடு கடுமையான அவலத்துக்கு உள்ளாக்கப்படுகிறது.

"நான் ஒங்க கூடவே வந்திடறேன் ஆத்தா" என்றாள் தாமரை.

"வா ஆத்தா" என மனமார வரவேற்றார் பழனியப்பன்.

"முடிவாச் சொல்றியா தாமரை?" என்றாள் விசாலாட்சி.

"வேணுமின்னா மனசு ஆறுற வரைக்கும் ரெண்டு மாசமோ, மூன்று மாசமோ உங்க வீட்டில் இருக்கட்டுமே. அப்புறம் கூட இங்க வந்து இருக்கட்டும்" என்றாள் சிவகாமி அனுசரணையாக.

"அது பிரியப்படுதுன்னா வந்து இருக்கட்டுமே அத்த" என்றாள் சீதை. இவளுக்கு நேர்ந்த கொடுமை எல்லாரையும் புரட்டிப் போட்டுவிட்டது.

முடிவாக அனைவரும் டாக்ஸியில் கிளம்பிக் காரைக்குடிக்குப் போவதாக ஏற்பாடானது. பேத்தி மதுராவுக்கு வேண்டுமென்ற உடைகளையும், விளையாட்டுப் பொருள்களையும் அடுக்கிக் கொடுத்த தாத்தாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

(தொடரும்)

கிரி

விண்ணைமுட்டும் தென்னை மரங்கள், பச்சைப் பசேல் வாழைத் தோட்டங்கள், ஊரின் நடுவே வற்றாத ஆறு. இயற்கை கொலுவீற்றிருக்கும் ஒரு கிராமத்தில், மென்மையான மனசுகளோடு கூடி வாழ வேண்டிய இரு குடும்பங்கள், வன்மையான பகையுணர்ச்சியால் வீச்சரிவாள்களைத் தூக்கிக் கொண்டு அலைகிறார்கள். அரிவாள் சத்தத்திலேயே



டி. இமானின் பின்னணி இசை அடங்கிப் போய் விடுகிறது.

பெப்சி விஜயன் தமது இரண்டு மகன்களை போலீஸ் கண்களிலிருந்து மறைக்க, எதிரியான விஜுசக்கரவர்த்தி வீட்டில், அவரது அனுமதியோடு மறைத்து வைக்கிறார். அவர்களோ விஜுசக்கரவர்த்தியிடம் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறி, போலீஸ் வளையத்தில் சிக்கிக் கொண்டு தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதற்குப் பிறகுதான் பெப்சி விஜயனின் ரத்தம் சாரி... கதை சூடு பிடிக்கிறது. ஊரை விட்டே தப்பி ஓடிவிட்ட விஜுசக்ரவர்த்தியின் மகனை தேடிக் கண்டுபிடித்து பழிவாங்கத் துடிக்கிறார் வில்லன் அப்புறமென்ன, தலைமுறைகளை கடந்து திரைக்கதையைத் திமிர்பிடித்த அலைய வைக்கிறார் இயக்குனர் சுந்த சி. அலுப்புத் தட்டாத கதையோட்ட என்பதால் தலை தப்பிக்கிறது. ஹீரே வான அர்ஜுனுக்குத் தரப்பட்டிருக்கு பணி, அப்பா வழியில் செஞ்சோற்று கடன் தீர்ப்பது. ரீமாசென், ரம்யா ஆகி இரண்டு கதாநாயகிகளோடு லட்ச கணக்கில் செலவழித்த செட்களி முன்பு, டமுக்க டப்பா டூயட் ஆடுவது வழக்கமான, ஆனால் சுறுசுறுப்பான அர்ஜுன். பிளவு பட்டுக் கிடக்கும் ஊன ஒன்றிணைக்க, படாதபாடு. புதி போலீஸ் அதிகாரி பிரகாஷ்ராஜ்தான் தொலைந்து போன விஜுசக்ரவர்த்தியின் மகன் என்ற திருப்பம், எளிதில் யூகித்துவிடக் கூடியது, என்றாலும் அன ரசனைக்குரியதாக செதுக்கி யிருக்கிறார்கள். அன்பே சிவ கமலை நினைவூட்டும் அவரது பாத்திரம் மனத்தில் 'பச் சென்று ஒட்டிக் கொள்கிறது தமது படங்களில் காமெடிக்கு அதி முக்கியத்துவம் தரும் சுந்தர் சி இ தி லு குறைவைக் வி ல் லை வடிவேலு மதன் பாட இடையிலான காமெடியில் கண்ணியம் காத் இயக்குனர், தம்பி அக்காள் உறவைக் கொச்சைப் படுத்துவதுபோல், தரக்குறைவான காமெடியையும் கையாண்டிருப்பது நெருடுகிறது.

ஆலம்புழா வல்லங்களி போல பிரம் மாண்டமாக இல்லாவிட்டாலும், படகுப் போட்டியை கிளைமாக்ஸ் காட்சியில் விறுவிறுப்பாகப் படமாக்கியிருப்பதைப் பாராட்டலாம்.

- விஷ்வல்தாசன்


● ஆவரெஜ்

அக்னிசர்மா பக்கம்



மேஷம்

துணிவும் நம்பிக்கையும் கைகோத்து உங்ககூட வரும் நேரங்க இது. உங்க சிந்தனைத் தெளிவு பல சிக்கல்களைத் தீர்க்கும். உத்தியோகத்திலயும் கூடுதல் பொறுப்பும், கொஞ்சம் உழைப்பும் ஏற்படும். புதுசா ஏதேனும் முயற்சி பண்ணற ஐடியா இருந்தா ஆரம்பிச்சுடுங்க. கூட்டுத் தொழில் பண்ணறவங்க உஷாரா இருங்க. குடும்பத்தில கொஞ்சம் விட்டுக் கொடுத்துப்போங்க. பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.



ரிஷபம்

அங்கங்கே பிரேக் பிடிச்சுப் பிடிச்சுப் போயிட்டிருந்த உங்க வண்டி இனி ஹைவேயில ஓடும். தடங்கல்கள் எல்லாம் மறைஞ்சு, முன்னேற்றம் எல்லாக் காரியங்களிலேயும் ஏற்படும். உத்தியோகத்திலயும் உற்சாகம் கூடும். கலைத்துறை, ஓட்டல், டிராவல்ஸ், ஜவுளி தொழில்ல இருக்கறவங்களுக்கு அனுகூலமான நேரம். குடும்பத்தில மகிழ்ச்சிகரமான மாற்றம் வரும். பெண்களுக்கு எல்லாவகையிலும் அனுகூலமான வாரம்.



மிதுனம்

நீங்க போற ரோடுல ஸ்பீட் பிரேக்கர் அதிகமா இருக்குங்க. உஷாரா இருங்க. சிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும் உடனே நிவர்த்தி ஆயிடும். புது ஆட்கள் கிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையா பழகுங்க. ஆபீஸ்ல நிதானமா நடந்து பிரச்னைகளைத் தவிர்க்கலாம். அதிகம்


பேசாதீங்க. கலைத்துறை, பத்திரிகை, துறைகள்ல மேன்மை ஏற்படும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. பெண்களுக்கு எண்ணம்போல எல்லாம் நடக்கும்.

மீன ராசிக் காரரான ரஞ்சிதாவுக்கு எண்ணம் எல்லாம் நிறைவேறுமாம்!




• 'ரோஜா' டி.வி. தொடரில்

நடக்குமென்பார்; நடக்கும்!




கடகம்

நிதானமும், பொறுமையும் தேவைப்படற நேரங்க இது. பண விஷயத்தில் உஷாரா இருங்க. ஆபீஸ்லேயும் கொஞ்சம் அனுசரித்துப் போறது நல்லது. புது முயற்சிகள் இப்ப வேண்டாம். கலைஞர்களையும், ரியல் எஸ்டேட், எலக்ட்ரானிக்ஸ் தொழில்கள்ல இருக்கறவங்களையும் அதிர்ஷ்டம் தேடி வரும். குடும்பத்தில சுப மங்கள காரியம் கை கூடும். பெண்களுக்கும் மாணவர்களுக்கு அனுகூலமான நேரம்.




சிம்மம்

உற்சாகமும், உல்லாசமுமான நேரம்தான். தொட்டதெல்லாம் வெற்றி தரும் வேளை. புது அறிமுகங்களும், தனவான்களின் ஆதரவும் சந்தோஷம் தரும். உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏதும் கிடைக்கலாம். எலக்ட்ரானிக்ஸ், பத்திரிகை, ரியல் எஸ்டேட் தொழில்ல இருக்கறவங்க புது முயற்சி தொடங்கலாம். குடும்பத்தில பொருளாதார மேன்மை ஏற்படும். பெண்களுக்கு அதிர்ஷ்டப் பரிசு காத்திருக்கு.



கன்னி

பொதுவா எல்லாம் நல்லபடியா நடந்தாலும், முழுப்பலன் கிடைக்கத் தாமதமாகும். நிதானமான முயற்சி தேவை. உத்தியோகத்தில அதிர்ஷ்டத் திருப்பம் காத்திருக்கு. புத்திசாலித்தனமா பயன்படுத்துங்க. புதிய தொழில்கள் ஆரம்பிக்கறதை கொஞ்சம் தள்ளிப் போடறது நல்லது. ஏற்றுமதி இறக்குமதி தொழில் மேன்மை பெறும். குடும்பத்தில் சிறு சலசலப்பு ஏற்படும், உஷாரா இருங்க. பெண்கள் ஆரோக்கியத்தில் கவனமா இருங்க.




துலாம்

எதிர்பாராத செலவுகள் வந்தாலும், தேவையான உதவியும் கிடைக்கும். பயணங்களில் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் எதிர்ப்புகள் விலகி அனுகூலம் கிடைக்கும். கெமிக்கல்ஸ், மருத்துவம், கலைத்துறை, கமிஷன் துறைகள்ல மாமூலான பலன்கள் கிடைக்கும். குடும்பத்தில உடன்பிறந்தவரால் சிறு பிரச்னைகள் வரலாம். ஆரோக்கியத்தில் அலட்சியம் காட்டாதீங்க, உடனே கவனிங்க.



விருச்சிகம்


எதிர்பாராத திருப்பங்கள் நேர்ந்தாலும், அனுகூலமானதா இருக்கும். சகல காரியங்களிலும் முன்னேற்றம் ஏற்படும். வேலை கிடைக்காதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். சொந்தத் தொழில், கூட்டுத் தொழில் முன்னேறும். சட்டம், காவல், ராணுவம் துறையினர் சாதனை படைப்பாங்க. குடும்பத்தில் பணக் கஷ்டம் தீர்ந்து மகிழ்ச்சி நிலவும். பெண்கள் உற்சாகமும் உல்லாசமுமாக இருப்பார்கள்.



தனுசு

எதிர்பாராத சந்திப்பு, பயணம் ஏற்படலாம். தெய்வ பலத்தை அதிகரிக்க முயற்சி செய்வது நல்லது. உத்தியோகத்தில் பழைய கோரிக்கைகள் நிறைவேறும். ஓட்டல், டிராவல்ஸ், தொழில் உபகரணங்கள், ரியல் எஸ்டேட் துறையினர் மேன்மை பெறுவார்கள். குடும்பத்தில் சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். பெண்களுக்கு முன்னேற்றமான வாரம்.

அக்டோபர் 13 முதல் 19 வரை




மகரம்

பொருளாதாரத்தில் பெரிய முன்னேற்றமான, சந்தோஷம் தரும் வாரம். உத்தியோகத்தில் விரும்பிய மாற்றம் கிடைத்து உற்சாகம் கூடும். கலைத்துறை, ஓட்டல், டிராவல்ஸ் தொழில்கள் முன்னேறும். ஏற்றுமதி இறக்குமதி லாபம் தரும். குடும்பத்தில் ஒற்றுமையும் அமைதியும் கூடும். பெண்களுக்கு சிறப்பான வாரம். நினைத்த காரியம் கைகூடி மகிழ்ச்சி தரும்.



கும்பம்

துணிவும், தன்னம்பிக்கையும் கூடி எதிர்ப்புகளை மறைய வைக்கிற நேரம். வெளி நாட்டிவிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து உற்சாகமூட்டும். உத்தியோகத்தில் சகஜமாகப் பழகி வருவது நன்மை தரும். அரசு பணியாளர் எதிலும் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. யந்திரம், எண்ணெய் வகை, தோல் பொருள்கள் தொழில்கள் ஏற்றம் பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது நல்லது.



மீனம்

இதுவரை இருந்த கஷ்டங்கள், தொல்லைகள் மறைந்து புதிய பாதை தெரியும். இருந்தாலும் பயணங்களில் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். உத்தியோகத்தில் பிரச்னைகள் மறையும். புதிய தொழில் தொடங்க நல்ல நேரம். ரியல் எஸ்டேட், வீடு மனை வாங்க நினைப்பவர்கள் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது அவசியம். அலட்சியம் ஆபத்தில் முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெண்கள் எண்ணம்போல எல்லாம் நிறைவேறும்.

இது நல்ல வாரம்

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	அக். 13 (புரட். 27)	ஹஸ்தம்	சதுர்த்தசி	மஹாளய அமாவாசை
வியாழன்	அக். 14 (புரட். 28)	சித்திரை	அமாவாசை	திருவையாறு, திருச்சி, மதுரை ஆலயங்களில் நவராத்திரி ஆரம்பம்
வெள்ளி	அக். 15 (புரட். 29)	சுவாதி	துவிதியை	நவராத்திரி பூஜாரம்பம்
சனி	அக். 16 (புரட். 30)	விசாகம்	திருதியை	-
ஞாயிறு	அக். 17 (ஐப். 1)	அனுஷம்	சதுர்த்தி	துலா காவேரி ஸ்நானம்
திங்கள்	அக். 18 (ஐப். 2)	கேட்டை	பஞ்சமி	-
செவ்வாய்	அக். 19 (ஐப். 3)	மூலம்	சஷ்டி	ஸரஸ்வதி ஆவாஹனம்-



"உங்களுடன் உரையாடியதில் எனக்கு மகிழ்ச்சி" என்று பேட்டியாளர் குறிப்பிட்டவுடன், "எனக்கு உங்களுடன் பேசியதில் மகிழ்ச்சி இல்லை" என்று பட்டென்று பேட்டியை முடித்தார், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. பேட்டி கண்டவர் : பி.பி.சி.யில் ஒளிபரப்பாகும் 'ஹார்டு டாக்' நிகழ்ச்சியின் கரன் தாபர். இன்னும் கேட்க வேண்டிய கேள்விகள் நிறைய இருப்பதாகத் தோன்றினாலும், கரன் தாபரின் பேட்டி விறுவிறுப்பாக இருந்தது. ஜெயலலிதாவைப் பேட்டி கண்ட அனுபவம் பற்றி, கரன் தாபரிடமே கேட்

"நான் அ.தி.மு.க வின்

டோம். டெல்லியிலிருந்து கரன் தாபர் அளித்த பேட்டியின் முக்கியப் பகுதிகள்.

இதுதான் ஜெயலலிதா உங்களுக்கு அளித்த முதல் பேட்டியா?

"முதல் பேட்டி, ஆனால் இரண்டாவது அப்பாயின்ட்மென்ட்" என்று புதிர் போட்டுவிட்டு விளக்கினார். "இரண்டாவது முறையாக ஜெயலலிதா தமிழக முதலமைச்சர் ஆனவுடனே, பேட்டிக்கு அணுகினோம். சில மாதங்கள் கழித்து அவரும் நேரம் அளித்தார். ஆனால் எதிர்பாராதவிதமாக, பேட்டிக்கு ஒரு வாரம் முன்பு, சுப்ரீம் கோர்ட் ஆணைப்படி அவர் பதவி விலகும்படி ஆனது. எனவே பேட்டி காணமுடியாமல் போய்விட்டது.

அவர் மறுபடி முதலமைச்சர் ஆனதிலிருந்து பேட்டிக்கு முயற்சி செய்து கொண்டு இருந்தோம். கடைசியாக நேரம் ஒதுக்கிக் கொடுத்தார்."

பேட்டிக்கான கேள்விகளை எப்படித் தயார் செய்து கொண்டீர்கள்?

நான் டெல்லியில் இருந்தாலும், தினமும் காலையில் கண் விழிப்பது 'ஹிந்து' நாளிதழுடன்தான். எனவே தமிழ்நாட்டு அரசியல் நிலவரம் குறித்து நன்கு அறிவேன். தவிர, எங்களது ஆய்வுக் குழுவினர், ஜெயலலிதா பற்றிய கட்டுரைகள், அவரது பேட்டிகளைப் படித்தார்கள். தமிழக பத்திரிகையாளர்களுடன் பேசினார்கள். அப்போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கேள்விகளைத் தயார் செய்து கொண்டேன். இதில் அசோக் உபாத்யாயா என்ற எனது நிறுவன அதிகாரியின் பணி குறிப்பிடத்தக்கது.

பேட்டியை சென்னையில், கோட்டை அலுவலகத்தில் வைத்துக் கொண்டதன் பின்னணி என்ன?

அது ஜெயலலிதாவின் முடிவு. பேட்டி ஒளிபரப்பாவதற்கு ஒரு வாரம் முன்பு, செப்டெம்பர் பதினைந்தாம் தேதி, புனித ஜார்ஜ் கோட்டையில், பத்தாவது மாடியில் உள்ள கூட்ட அரங்கில், பேட்டியை ஒளிப்பதிவு செய்தோம். (ஜெ.வின் ராசியான பச்சைப் பின்னணியில், ஒரு சிறு வட்டமான மேஜை. அதில் ஜெவும், கரன் தாபரும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர்)

பேட்டியின்போது, நீங்கள் இரு

…கொ.ப.செ அல்ல”

–கரன் தாபர்

வருமே டென்ஷனாக இருந்தீர்கள் போலிருந்ததே?

நான் ரிலாக்ஸ்ட் ஆகத்தான் இருந்தேன். ஜெயலலிதா டென்ஷனாக இருந்தாரா என்பது எனக்குத் தெரியாது.

அவரை மடக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒவ்வொரு கேள்வியையும் நீங்கள் கேட்டது ஏன்?

ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். நான் தமிழக அரசாங்கத்தின் மக்கள் தொடர்பு அதிகாரி இல்லை. அ.தி.மு.க. கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் இல்லை. பி.பி.சி.யில் ஒளிபரப்பாகும் ஒரு நிகழ்ச்சியின் பேட்டியாளர். நிகழ்ச்சியின் பெயரே Hard Talk. மக்கள் மனத்தில் நினைக்கிற விஷயங்களை, கேட்க நினைக்கிற கேள்விகளைக் கேட்பதுதான் எனது கடமை. எனவே, கேள்விகளைக் கேட்பதுதான் என் நோக்கமே தவிர, அவரை மடக்குவது நோக்கமில்லை.

பேட்டிக்கு முன்பும், பேட்டிக்குப் பின்பும் முதலமைச்சர், உங்களுடன் கலகலப்பாகப் பேசினாரா?

குறித்த நேரத்துக்கு வந்தார். பேட்டி ஆரம்பமானது. இருபத்து மூன்று நிமிட ஒளிப்பதிவு, முடிந்தவுடன் எழுந்து சென்றுவிட்டார். ஒளிப்பதிவு செய்த பேட்டியில் எதையும் வெட்டாமல், அப்படியே ஒளிபரப்பினோம்.

“இந்தப் பேட்டிக்கு நான் ஒப்புக் கொண்டிருக்கக் கூடாது” என்று பேட்டியில் முதலமைச்சர் குறிப்பிட்டது உங்களுக்கு வருத்தமளித்ததா?

இல்லை. நான் என் கடமையைச் செய்தேன். பேட்டிக்கு ஒப்புக் கொள்வதும், ஒப்புக் கொள்ளாததும் அவரது விருப்பம். பேட்டியின்போது, விரும்பாத கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் இருப்பது, அவரது உரிமை. அதுபற்றி நான் விமர்சனம் செய்யக் கூடாது.

ஜெயலலிதா என்கிற அரசியல்வாதி பற்றி உங்கள் கருத்து என்ன?

அவர் மீது எனக்கு மதிப்பும், மரியாதையும் உண்டு. சில விஷயங்களில் அவர் என்னை வியப்பில் ஆழ்த்தி இருக்கிறார். ஆனால் அவர் குறித்த எனது தனிப்பட்ட கருத்து பேட்டிக்கு அவசிய



மில்லாதது.

இன்னொரு தடவை பேட்டி காண வேண்டும் என்றால், ஜெயலலிதா சம்மதிப்பார் என்று நினைக்கிறீர்களா?


எனக்குத் தெரியாது. அது அவரது உரிமை.

- எஸ். சந்திரமௌலி

ஸோஷலிஸம்

இந்தியர்களாகிய நாம் 'போகும் கதிக்கு வழி' தேடுவதில் நம்பிக்கை கொண்டவர்கள்; புண்ணியம் சம்பாதிக்க விரும்புகிறவர்கள். நமக்குப் புண்ணியம் சம்பாதிக்க ஒத்தாசை செய்கிறவர்கள் யார்? ஏன், பிச்சைக்காரர்கள் தான்.

இப்போது நம் தேசத்தில் பிச்சைக்காரர்கள் விஷயத்தில், எவ்விதக் குறைவுமில்லை. பொழுது விடிந்ததும் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக நம்முடைய வீட்டைத் தேடி வந்து கொண்டிருக்கிறார்கள்; நம்முடைய புண்ணிய மூட்டையைப் பெருக்குவதற்காகவே அவர்கள் வருகிறார்கள். அவர்களுக்குத்தான் என்ன சிரத்தை? நாம் தூங்கி விழிப்பதற்குள் வாசலில் வந்து நிற்கிறார்கள். "என்ன, அம்மா! இன்னுமா தூங்கறீங்க? எழுந்து பிச்சை போட்டுட்டுத் தூங்குங்க!" என்கிறான் அந்த அதிகாலைப் பிச்சைக்காரன். பிறகு ஒருவர் பின் ஒருவராய் வருகிறவர்கள், ஒவ்வொரு முறையைக் கையாளுகிறார்கள். சிலர் கெஞ்சிக் கேட்கிறார்கள்; சிலர் பாடிக் கொண்டு வருகிறார்கள்; சிலர் 'லபோ லபோ' என்று கத்துகிறார்கள்; சிலர் வயிற்றில் அடித்துக் கொள்ளுகிறார்கள். சில கறார் பிச்சைக்காரர்கள், 'ஒரு வீட்டிலேயே எத்தனை நேரம் காத்திருக்கிறது' உண்டுன்னா உண்டுன்னு சொல்லுங்க; இல்லேன்னா இல்லேன்னு சொல்லுங்க" என்று கண்டிப்பாய்க் கேட்கிறார்கள். "நாம்ப அரிசி வாங்கிறதில்லை; காசு கொடுத்தாக் கொடுங்க, இல்லாபோனா ஒன்றும் வேண்டாம்" என்று உலகத்தையே துச்சமாக நினைத்துப் பிச்சை கேட்பவர்கள் உண்டு. இன்னும் "நாங்க பிச்சைக்கு வரலை; திருப்பதி வேண்டுதலை" என்றும், "பிள்ளைக்குப் பூணூல்," "பெண்ணுக்குக் கலியாணம்" என்றும் சொல்லிக் கொண்டு பலர் வருகிறார்கள். ஒரு பெண்ணும் பெறாமலே கன்னிகாதான பலனை அடைய, அவர்கள் நமக்கு வழி காட்டுகிறார்கள்.



மற்றும், தலையில் காந்தி குல்லாவும், சட்டையில் ஜவஹர்லால் பெண்டண்டும் தரித்து, தோளில் கதர் ஹாவர் ஸாக்குடன் சிலர் வந்து "கண்ணனூர் சிறைச்சாலையிலிருந்து விடுதலையடைந்தோம்; ஊருக்குப் போக ரயில் சார்ஜுக்குப் பணமில்லை" என்று கேட்கிறார்கள். "ஏன்? இந்த ஊர்க் காங்கிரஸ் தலைவர்களைப் போய்ப் பாருங்களேன்" என்றால், "காங்கிரஸ் தலைவர்களா அவர்கள்? சுத்த அயோக்கியர்கள்! மூன்று வருஷத்துக்கு முன் அவர்களிடம் ரயில் சார்ஜு வாங்கிக் கொண்டதை இன்னும் நினைவு வைத்துக் கொண்டு கேட்கிறார்கள்! எல்லாரும் சுயகாரியப் புலிகள், அப்படி, இப்படி..." என்று வசைபுராணம் தொடங்குகிறார்கள்.

இந்த இனத்தில் சிலர், "வேலூர் ஜில்லா போர்டு தேர்தலுக்குப் பிரசாரம் செய்ய வந்தேன்" என்றும், "லக்னௌ காங்கிரஸுக்குப் போய்விட்டுத் திரும்புகிறேன்" என்றும் கூறுகிறார்கள். இவர்கள் உங்களிடம் கேட்பதெல்லாம் ரயில் சார்ஜுக்குத்தான். ஆனால் தரித்திரம் பிடித்த நீங்கள், ஓரணா இரண்டணாவுக்கு மேல் கொடுப்பதில்லையாதலால், அதெல்லாம் காப்பி ஹோட்டலிலேயே செலவழிந்து, ரயில் சார்ஜுக்குப் பணம் சேர்வதேயில்லை.

இன்னும் ஒரு வகையான பிச்சை

யும் உண்டு. அது உங்களுடைய வாலிபப் பருவத்தின் மனோராஜ்யக் காதல் வாழ்க்கையை நினைவூட்டுவதாகும். சென்ட்ரல் ஸ்டேஷனுக்கெதிரில் நீங்கள் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும்போது, திடீரென்று யாரோ உங்கள் தோளைத் தொட, நீங்கள் கூச்சமுற்றுத் திரும்பிப் பார்க்கிறீர்கள். ஆறரை அடி உயரமும், அதற்குத் தகுந்த அகலமும் உள்ள ஆஜானுபாகுவான ஒரு பட்டாணி ஸ்திரீ நின்று ஒரு புன்னகை புரிந்து கையை நீட்டுகிறாள். ஒருகணம் உங்களுக்கு என்னவெல்லாமோ தோன்றி விடுகிறது. வீட்டிலே உங்கள் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பரதேவதையின் ஞாபகம் வருகிறது. "ஆனாலும் வாழ்க்கையில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் அருமையாய்த் தானே நேர்கின்றன?" என்ற ஓர் எண்ணம் மின்னல் போல் தோன்றி மறைகிறது. "பாபு! ஏக் பைஸா தீஜியே!" என்ற குரலைக்



வேண்டாம்!

கேட்டதுந்தான் சொப்பன உலகத்திலிருந்து கீழிறங்கி, "சீ! இவள் பிச்சைக்காரியா?" என்று நினைக்கிறீர்கள். உங்கள் திகைப்பைப் பார்த்துப் பக்கத்தில் நிற்பவர்கள் எல்லாரும் சிரிக்கிறார்கள். இதற்குள் பஸ் வந்துவிட, நீங்கள் அவசர அவசரமாய் ஏறி, வழக்கம்போல் ஓரத்து ஸீட்டுக்குச் சண்டையிடாமல் நடுமத்தியில் பத்திரமாய் உட்கார்ந்து விடுகிறீர்கள். பஸ் கிளம்புகிறவரையில் உங்கள் இருதயம் பக்குபக்கென்று அடித்துக் கொள்கிறது.

இப்படிப் பல்வேறு ரஸமான முறைகளைக் கடைப்பிடிக்கும் பிச்சைக்கார வர்க்கமே மறைந்து விடுவதை நாம் விரும்ப முடியுமா? 'ஸோஷலிஸம்' பூரணமாய் அமலுக்கு வரும்போது, அந்த வர்க்கம் இல்லாமல் போவது நிச்சயம். எல்லாருக்குமே உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க வீடும் இருந்து விட்டால், யார் பிச்சை எடுக்க முன் வருவார்கள்? அத்தகைய நிலைமையில் - பிச்சைக்காரர்களே இல்லாத உலகத்தில்... உங்களையும் என்னையும் போன்ற புண்ணியாத்மாக்கள் வாழ்வதற்கே இஷ்டப்பட மாட்டோம். ஒரு பிடி அரிசி வாங்கிக் கொள்ள ஒரு பிச்சைக்காரன் இல்லையென்றால், வேறு எந்த வழியில் நாம் புண்ணியம் சம்பாதிப்பது? 'ஐயமிட்டுண்' என்று அரிச்சுவடி வகுப்பிலேயே படித்தோமே, அதை எப்படி நிறைவேற்றுவது? அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுத்தக் கூடிய '**ஸோஷலிஸம் வேண்டாம்**' என்று நாம் சொல்லாவிட்டால், வேறு எதைத்தான் வேண்டாமென்று சொல்லப் போகிறோம்?

- கல்கி களஞ்சியம்
வானதி பதிப்பகம்

● ஏ.எஸ். யோகானந்தம், கலிங்கியம்

? 'குரைக்கவும் தெரியும் கடிக்கவும் தெரியும்... மத்திய அரசைக் கண்காணிக்கும் 'காவல் நாய்கள் நாங்கள்' என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் பொலிட் பீரோ உறுப்பினர் சீதாராம் எச்சூரி சொல்வது பற்றி...?

! எச்சரிக்கவும் செய்வோம்; ஆதரவு வாபஸ் நடவடிக்கை எடுக்கவும் அஞ்ச மாட்டோம் என்பதைத் தான் இப்படியொரு உவமையை உபயோகித்து விளக்க

ரஜினி ஸ்டைலில் பேசுகிறாரே ராஜசேகர ரெட்டி..?

முயன்றிருக்கிறார். 'நகுதற் பொருட்டன்று நட்பு' என்று நயம்படச் சொல்லியிருக்கலாம்.



● உறுத்தும் உவமை!



● மடியில்...



● ..... கனமின்றி...

● ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி

? தமிழக அரசு மூன்று ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகளை அறிவித்திருப்பது எதைக் காட்டுகிறது...?

! எத்தனையோ விஷயங்களில் பின் வாங்கியதுபோல், இதுவும் ஒரு வாபஸ் நடவடிக்கை.

● வி. கல்யாணி, திருநெல்வேலி - 11

? தேசிய நெடுஞ்சாலை ஆணைய விளம்பரத்தில் எந்தப் பொறுப்பும் இல்லாத கருணாநிதிக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை பா.ஜ.க ஆட்சேபித்துள்ளதே?

! சரிதான்! கருணாநிதி ஓர் எம்.எல்.ஏ மட்டுமே. கட்சி விளம்பரங்களில் அவருக்கு முக்கியத்துவம் தருவது கட்சித் தலைவர் என்பதால்... அது கட்சியின் விருப்பம். ஆனால், அரசு விழா விளம்பரங்களில் அதே முக்கியத்துவம் தருவது தவறு. 'இந்தியா ஒளிர்கிறது' விளம்பரங்களைக் கண்டித்தவர்கள் இப்படி நடந்து கொள்ளக் கூடாது.

● க. ராமநாதன், திருவேங்கடம்

? 'ஜனாதிபதியையும் விசாரிக்க லோக்பால் அமைப்புக்கு அதிகாரம் வழங்கலாம்' என்கிறாரே அப்துல் கலாம்?

! பிரதமரும்கூட அப்படித் தான் சொல்கிறார். இரு வருக்கும் மடியில் கன மில்லை, எனவே மனத்தில் பயமில்லை. இருந்தாலும் அந்த லோக்பால் அமைப் பில் நியமனம் செய்யப்படு பவர்கள் சுத்தமானவர் களாக இருக்க, கடு மையான விதிகளையும் ஆரம்பத்திலேயே விதிக்க வேண்டும்.

● ரா. சாலமோன், ஆலங்குளம்

? ஜெயலலிதாவின் பி.பி.ஸி பேட்டியில் நீங்கள் புதிதாகத் தெரிந்து கொண்டது என்ன?

! ஒன்றுமில்லை. பி.பி.ஸியின்



* சரக்கு ரயில் வேகம்!



* அழகு * அறியாமை!



* அபஸ்வர அழைப்பிதழ்

கேள்விகள் எப்போதும் போல் காரம்; 'ஜெ'யின் பதில்கள் வழக்கமான கொதிப்பு!

● என். பாலகிருஷ்ணன், மதுரை

? 'கவர்ச்சி இல்லாத சினிமா வேஸ்ட்' என்கிறாரே ரீமா சென்?

! இந்த மாதிரி நினைத்த பலரும், பிற்பாடு கதையை நம்பித்தான் காலத்தை ஓட்டினார்கள் என்கிற உண்மை ரீமா சென்னுக்குத் தெரியவில்லை, பாவம்!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? கிரிக்கெட் போர்டு தலைவர் தேர்தல் குறித்து...?

நீங்கள் கேட்டவை-தராசு

! மேட்ச் - ஃபிக்ஸிங்!

● உஷா, சென்னை - 4

? கிரிக்கெட் மேட்சில் சரியாக விளையாடாத வீரர்களின் சம்பளத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைப் பிடித்தம் செய்வதாக நிபந்தனை விதித்தால், இன்னும் கவனமாக ஆடுவார்கள் இல்லையா?

! அவ்வாறு செய்வது அநீதி. விளையாட்டில் தோற்பதும் ஜெயிப்பதும் வீரர்களின் முயற்சி, கவனம் ஆகியவற்றை மட்டுமே பொறுத்தது அல்ல. எதிரணியின் பலம், ஆடும் சூழல், அன்றைய ஆட்ட நிலை என பல காரணிகள் பாதிக்கும். முயற்சியில் குறைவிருந்ததை நிரூபிக்க முடியாது. ஆறு முறை நன்றாக ஆடி, ஓரிரு முறை சொதப்பினால் தண்டனை என்பது சரியல்ல. அடிக்கடி மோசமாக ஆடினால் அணியிலேயே இடம் இராதே!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? லஞ்ச ஊழலை ஒழிப்பது எப்படி என்பது தொடர்பான நுணுக்கங்களை அறிய கென்ய அமைச்சர் இந்தியாவுக்கு வந்துள்ளது பற்றி...?

! திருப்பதிக்குப் போய் சீப்பு விற்க நினைத்த கதைதான்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? சென்னைக்கு விரைவில் கிருஷ்ணா நதி நீர் கிடைக்க வழி வகை செய்யப்படும் என ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி உறுதியளித்துள்ளாரே...?

! தமிழக முதல்வருக்கு அவர் அளித்த வரவேற்பும் சரி, வாக்குறுதியும் சரி... பண்பட்டிருந்தது. கேரளா, 'கர்நாடகா வழங்காவிட்டாலும், நாங்கள் உங்களுக்கு உரிய கிருஷ்ணா நீரைத் தருவோம்' என்று சொன்னது, இன்றையச் சூழலில் வாய்பிளக்க வைக்கும் அதிசயம்ங்க. ஆனால் 'உபரிநீர் இருக்குமானால்'னு ஒரு வார்த்தை சேர்த்துக்கிட்டதுதான் புஸ்...

● அ. கஹைல் ரஹ்மான், திருச்சி -21

? 'வரலாற்றுப் பாடப் புத்தகங்களை மத்திய அரசு திருத்துவது தவறு' என்கிறாரே முரளி மனோகர் ஜோஷி?

! அப்படியானால் அவங்க ஆட்சியிலே ஏன் அந்த

தப்பை வரிஞ்சு கட்டிக்கிட்டுப் பண்ணிணாங்களாம்!


● ஆர். புஷ்பமாலா, அச்சரப்பாக்கம்★

? "என் மகன் இப்போதைக்கு அரசியலுக்கு வர மாட்டான். வர வேண்டிய நேரத்தில் கரெக்டாய் வந்துவிடுவான்" என்று ரஜினி ஸ்டைலில் ராஜசேகர ரெட்டி கூறியுள்ளாரே...?

! அட தேவுடா! பில்லல பாலிடிக்ஸ் அக்கடகூட உன்னதா!



★ வரலாற்றுத் தவறுகள்!



★ தமிழக அடிச்சுவட்டில்...

● ஈ.யுவராணி, அக்ரஹாரம்

? மத்திய அரசின் தீவிரவாத தடுப்பு அவசரச் சட்டம் ஆர்.எஸ்.எஸ், வி.எச்.பிக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதற்குத்தான் கொண்டு வரப்படுகிறது என வி.எச்.பி தலைவர் குற்றம் சாட்டியுள்ளாரே?

! அப்படியானால் ஆர்.எஸ்.எஸ்ஸும் வி.எச்.பி.யும் தீவிரவாத இயக்கங்கள்னு ஒத்துக்கறாரா?

● க. வேடியப்பன், கும்மிடிப்பூண்டி□

? ஆந்திராவில் நக்சலைட் தீவிரவாதிகளின் பொதுக்கூட்டங்களில் ஏராளமானோர் கூடுவது எதைக் காட்டுகிறது?

! அவர்களில் எத்தனை பேர் தங்கள் வீட்டுப் பிள்ளைகளை இயக்கத்துக்குக் காவு கொடுக்கத் தயாராயிருப்பார்கள் என்பதையும் சிந்திக்க வேண்டும். பெரும் கூட்டத்துக்குக் காரணம் 1) நீண்ட காலம் தடை செய்யப்பட்ட இயக்கத் தலைவர்களைக் காணும் சராசரிக் குறுகுறுப்பு. 2) இயக்கத்தின் வன்முறையை ஆதரிக்காவிட்டாலும், அதன் இலட்சியங்களில் ஈடுபாடு.

★ ரூ. 50 பரிசு பெறுபவர்
ஆர். புஷ்பமாலா,
20, வரதரெட்டியார் காலனி,
அச்சரப்பாக்கம்,
காஞ்சிபுரம் 603 301

□ ரூ. 100 பரிசு பெறுபவர்:
க. வேடியப்பன்,
12, வி.எம். இரண்டாவது தெரு,
சாந்தி ஸ்டோர் பின்புறம்,
கும்மிடிப்பூண்டி 601 201

● ரேவதிப்ரியன், ஈரோடு

? ராஜ் டி.வியில் சுஹாசினியின் லோட்டஸ் ஜங்ஷன் நிகழ்ச்சி எப்படி...?

! கூட்ஸ் இஞ்சின்!

● வே. ஆறுமுகம், கள்ளக்குறிச்சி

? சிக்கன நடவடிக்கையின் மூலம் ஆண்டுக்கு இரண்டாயிரம் கோடி மிச்சப்படுத்தப் போகிறதாமே மத்திய அரசு...?

! அமைச்சர்கள், அதிகாரிகள், எம்.பிக்களின் போக்குவரத்து, பயணச் செலவுகள், வாகனம் வாங்குதல் போன்றவற்றுக்குப் புதிய நிபந்தனைகள் அறிமுகப்படுத்தி இதைச் செய்ய முயன்றிருக்கிறது. வரவேற்க வேண்டிய முயற்சி; தீவிரமாக அமல்படுத்த வேண்டிய ஆணையும்கூட— அதனினும் முக்கியம், இவ்வாறு மிச்சமாகும் பணம் குறுகிய காலத்தில் வேறு வீண் செலவில் விரயமாகாது பார்த்துக் கொள்வது.

● ஆர். செல்லம்மாள், மதுரை - 16

? கிரிக்கெட் வீரர்களுக்கு வருடத்துக்கு 50 லட்சம், 35 லட்சம் என்றெல்லாம் கொடுப்பது ஏன்? இவ்வளவு பணம் கொடுக்காவிட்டால் என்ன பாதகம் ஏற்படும்...?

! போட்டி ஏற்பாடு செய்யும் அமைப்புகள் இதைவிடப் பல மடங்கு அதிகமாகச் சம்பாதிக்கின்றன. அதனால்தான் கிரிக்கெட் வீரர்களுக்கும் அதில் கணிசமான பங்கு தரப்படுகிறது. எல்லாம் உலகளாவிய தொலைக்காட்சி ஒளிபரப்பு, அதில் குவியும் விளம்பரங்களின் மகிமைதான்!

கடன் வாங்குவது ஏன்?



"இந்தியாவில் அந்நியச் செலாவணி ரூ. 5.44 இலட்சம் கோடி கை இருப்பில் இருக்கும்போது, உலக வங்கியிடம் கடன் வாங்குவது ஏன்?" என்று குடியாத்தம் வாசகர் ஆர்.எம். மலையன் கேட்டிருக்கிறார். அதற்கான விளக்கம்:

சமீபத்தில் ரிஸர்வ் வங்கியின் அறிக்கைப்படி இந்தியாவின் வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு சுமார் 110 பில்லியன் அமெரிக்க டாலர். அதே நேரத்தில் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் சுமார் 104 பில்லியன் அமெரிக்க டாலர். அதன்படி நிகர கையிருப்பு 6 பில்லியன் டாலர். ஒரு பில்லியன் என்பது 100 கோடி. ரூபாய் மதிப்பில் கையிருப்பு 4,95,000 கோடி. கடன் 4,68,000 கோடி. ரூபாய் மதிப்பில் நிகர இருப்பு 27,000 கோடி. நமக்கு அன்னியச் செலாவணி எப்படிக் கிடைக்கிறது, எப்படிச் செலவாகிறது என்று பார்ப்போம். மேலும் எப்படி கடன் ஏற்படுகிறது என்றும் தெரிந்து கொள்வோம். நமக்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணி கீழ்க்கண்ட முக்கியமான வழிகளில் சேருகிறது.

எல்லாம் அமெரிக்க டாலர் கணக்கில்: (1) நமது ஏற்றுமதியின் மதிப்பு, (2) வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் குடும்பச் செலவிற்காகவும் மற்றும் இங்கு முதலீடு செய்வதற்காகவும் அனுப்பும் வெளிநாட்டுச் செலவினங்கள். (3) வெளிநாட்டு சுற்றுலாக்காரர்கள் இங்கு செலவழிக்கும் பணம் (4) வெளிநாட்டுத் தூதரக்ங்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் செலவிற்காக அனுப்பப்படும் பணம் (5) வெளிநாட்டினர்கள் இங்கு முதலீட்டுக்காக பங்கு மார்கெட்டிலும் மற்றும் தொழில் தொடங்குவதற்காகவும் அனுப்பும் பணம். (6) உலக வங்கிகள் மூலமும் மற்றும் பணக்கார நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளும் நமக்கு அவ்வப்போது வழங்கும் கடன்

அதே மாதிரி நமது அன்னியச் செலாவணி கீழ்க்கண்ட முறைகளில் செலவாகிறது.

(1) நமது இறக்குமதியின் மதிப்பு (நமது இறக்குமதியில் கிட்டத்தட்ட அறுபது சதவிகிதம் கச்சா எண்ணெய்க்காக ஆகிறது) (2) இந்தியர்கள் வெளிநாடு போகும்போது எடுத்துக் கொண்டு போகும் அன்னியச் செலாவணி (3) நமது தூதரகங்களுக்காக ஆகும் செலவு (4) நாம் வாங்கிய கடனுக்கான வட்டி செலுத்தும் போது (5) நாம் வாங்கிய கடனை தவணை முறையில் திருப்பித் தரும்போது.

வங்கியில் ஒருவர் தொழில் செய்வதற்காக பத்து லட்சம் ரூபாய் கடன் வாங்குகிறார். தம்மிடம் இருக்கும் பணத்தையும் சேர்த்து (ரூபாய் 2 லட்சம் என்று வைத்துக் கொள்ளலாம்) அவரிடம் இருக்கும் ரொக்கம் - ரூபாய் 12 லட்சம், அவருக்கு இருக்கும் கடன் - 10 லட்சம். அவரிடம் இருக்கும் பணம் 12 லட்சமாக இருக்கும்போது, அவர் ஏன் 10 லட்சம் கடன் வாங்க வேண்டும் என்று தோன்றலாம். இந்தக் கடன் 10 லட்சமும் சேர்த்துத்தான் அவரிடம் இருக்கும் பணம் 12 லட்சமாகும்.

அதே மாதிரி இந்தியாவின் கையிருப்பான 110 பில்லியன் அமெரிக்க டாலர், அன்னியச் செலாவணியில், திருப்பித்தர வேண்டிய கடனும் உள்ளடங்கி இருக்கிறது என்பதுதான் விஷயமே.

- வி. கோபாலன்

லட்டு அய்யங்கார்!

"**அ**தெப்படி, திருப்பதி லட்டுக்கு மட்டும் இப்படியொரு டேஸ்ட்? என்னத்தைக் கலக்கறீங்க அதிலே?"

"வேறென்ன, கலப்படமில்லாத பக்தியைத்தான்"– சிரிக்கிறார் நரசிம்மாச்சாரி, இப்போது திருப்பதி பிரசாதங்களைத் தயாரிக்கும் மடைப்பள்ளியின் நிர்வாகி. சிரித்துவிட்டுத் தொடர்கிறார்:-

"ஏழுமலையானுக்கு அன்னப்பிரசாதம், பணியாரப் பிரசாதம் என இரு வகைப் பிரசாதங்கள் வைத்து பூஜிக்கப்பட்டு வருகிறது. இதற்கென தனித்தனியே திருமடைப்பள்ளிகள் உள்ளன. எத்தனையோ பிரசாதங்கள் படைக்கப்பட்டாலும், லட்டுக்கு இருக்கும் மகிமையும், வரவேற்பும் அலாதியானது. ஆரம்பக் கட்டத்தில் லட்டானது தீபாவளி, யுகாதி, சங்கராந்தி உள்ளிட்ட சிறப்புப் பண்டிகைகளின் போது மட்டுமே பக்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தது. முதலில் பூரா சர்க்கரை எனும் நாட்டுச் சர்க்கரையால் லட்டு தயாரிக்கப்பட்டது. பின்னர் வெல்லத்தால் தயாரிக்கப்பட்டு, தற்பொழுது சர்க்கரையால் தயாரிக்கப்பட்டு வருகிறது. 1950களில் நடந்த சம்ப்ரோக்ஷணத்திற்குப் பிறகு, லட்டுக்குக் கிடைத்த மாபெரும் வரவேற்பு காரணமாகவும், தேவை அதிகரிப்புக் காரணமாகவும், அதிக அளவில் லட்டு தயாரிக்க வேண்டிய கட்டாயம் உருவானது.

லட்டு தயாரிப்பதற்காக புதிய நுணுக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன்படி பக்தர்களுக்கு விநியோகிப்பதற்காக சிறிய லட்டுகள் தயாரிக்கப்பட்டன. ஒரு புரோக்தம் என்பதற்கு 51 லட்டுகள் என்ற அளவில், தயாரிக்கப்படத் தேவையான மூலப் பொருள்களுக்கான விகிதாச்சாரம் நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி ஒரு புரோக்தத்துக்கு தேவையான மூலப் பொருட்கள் :

கடலை மாவு	- 2.100 கிலோ
சர்க்கரை	- 4.200 கிலோ
நெய்	- 2.100 கிலோ
முந்திரி	- 525 கிராம்
திராட்சை	- 350 கிராம்
பாதாம்	- 175 கிராம்
குங்குமப் பூ	- 3 கிராம்
ஏலக்காய்	- 35 கிராம்

இந்த முறைப்படி லட்டு தயாரிக்கப்படும் பொழுது ஏற்பட்ட சுவையின் காரணமாக, லட்டுகளின் தேவை அதிகரித்துக் கொண்டே வந்தது. இந்த சமயத்தில்தான் ஆந்திர அரசு பரம்பரை பரம்பரையாக லட்டு தயாரித்து வரும் முறையை ரத்து செய்து விட்டு, குறிப்பிட்ட சிலரைப் பணியாளர்களாக அமர்த்திக் கொண்டது. அதே சமயம் தயாரிக்கும் முறையிலும் மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதன்படி புதிய புரோக்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் காரணமாக மூலப்பொருள்களின் சதவிகிதம் குறைந்தது.

குறிப்பாக 175 கிராம் கொண்ட லட்டு தயாரிக்கும் பொழுது பாதாம் பருப்பு தரப்படுவதில்லை. குங்குமப்பூ இரு வகை லட்டுகளுக்கும் தரப்படுவதில்லை போன்ற குற்றச்சாட்டுகள் எழுந்தாலும், லட்டுகளின் தரமானது மூன்று நிலைகளில் சரிபார்க்கப்படுகிறது. அதாவது மூலப்பொருள்களின் கொள்முதல், தயாரிப்பு, தயாரிப்புக்குப்பின் என்ற நிலைகளில் அதன் தரமானது சரிபார்க்




* கல்யாணம் அய்யங்கார்



* பிரும்மோத்ஸவத்தில் திருமலையப்பன்

கப்படுகிறது. இதற்கென சி.எஸ்.ப்.டி.ஆர்.ஐ. மற்றும் தேவஸ்தான தரக்கட்டுப்பாடு ஆய்வுக் குழுக்கள் இயங்கி வருகின்றன.



இது போன்ற பணிகளில் ஈடுபடுவதற்கென பணியாளர்கள் தேர்வு செய்யப்படும் முறை, சற்றே கடினமானது. வைஷ்ணவராக இருக்க வேண்டும். உபநயனம் ஆனவராக இருக்க வேண்டும். படிப்பு அவசியமில்லை. சமுதாயத்தில் நல்ல அந்தஸ்துடைய ஒருவரின் சிபாரிசு உள்ளிட்ட பல்வேறு விதிமுறைகள் உள்ளன.

இத்தகைய லட்டுகளை தயாரித்துத் தருவதற்காக ஆரம்பத்தில் நான்கு குடும்பங்களுக்கு உரிமை தரப்பட்டிருந்தது. அக்குடும்பத்தைச் சார்ந்த வாரிசுகளே பரம்பரை பரம்பரையாக பிரசாதத் தயாரிப்பில் ஈடுபட்டு வந்தனர். அக்குடும்பத்தினரால் இத்திருப்பணியைத் தொடர்ந்து செய்ய முடியாமல் போகவே, இப்பொறுப்பானது எனது தகப்பனார் ஸ்ரீமான் பூதேரி கல்யாணம் அய்யங்காரிடம் ஒப்படைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான சமையல் தொழிலாளர்களைக் கொண்டு லட்டு முதலான நைவேத்ய வகையறாவைத் தயாரித்து வந்தார். இவரது இயற்பெயர் ஸ்ரீநிவாஸ ராகவன். திருமணம் நடத்த வசதியற்ற ஏழைகளுக்குத் திருமாங்கல்யம் வாங்கித் தந்து, திருமணம் நடக்க உதவி செய்தே இவரது பெயர் கல்யாணம் அய்யங்கார் என்று மாறிவிட்டது. ஏழைகளுக்கு உதவி செய்தே 'திருப்பதி கர்ணன்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்று, ஜீயர் சுவாமிகளால் 'ஆசார்ய தீப ப்ரகாசர்' என்ற விருதையும் பெற்றார். பூதேரி கல்யாணம் அய்யங்காரின் நூற்றாண்டு இது. இவ் வருடம் முழுவதும் இராமாயணச் சொற்பொழிவுகள் நடத்த விழாக் கமிட்டியினர் ஏற்பாடு செய்துள்ளார்கள்."

- இரா.முத்துக்குமார்



புத்தகம் படிக்கிற பழக்கம் குறைந்து கொண்டு வருவதாக அனைத்துத் தரப்பினரும் முணு முணுத்துக் கொண்டிருக்கிற போது, சென்னை ராமகிருஷ்ணா மடம் வெளியிடும் புத்தகங்களின் விற்பனை, ஆண்டு தோறும் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பது ஆச்சரியமான உண்மை. மடத்தின் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு வெளியீடுகள் ஆண்டுக்கு இரண்டரைக் கோடி ரூபாய்க்கு விற்பனை ஆகின்றன. இத்தனைக்கும் இன்றைய பதிப்புலக வியாபார சர்ப்புகளான ஜோதிடம், சமையல், வாஸ்து, சுயமுன்னேற்றம் போன்ற சப்ஜெக்ட்களை இவர்கள் தொடுவதில்லை. மாணவர்கள், நடுத்தர வயதினர், குடும்பத் தலைவிகள், சீனியர் சிட்டிஸன்ஸ் என இவர்களின் வாசகர்கள் பலதரப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஆன்மிகம் மற்றும் சமூகப் பணியில் ஈடுபட்டுள்ள ராமகிருஷ்ண மடம், புத்தகம் வெளியிட ஆரம்பித்ததன் நோக்கம் என்ன?" என்று சென்னை ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி ஞானதானந்தாவிடம் கேட்டோம்.

"நிச்சயமாக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக இல்லை. பகவான் ராமகிருஷ்ணர், அன்னை சாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரது கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில்தான் புத்தகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

பகவான் ராமகிருஷ்ணர் சுவாமி விவேகானந்தர் ஆகியோரது சொற்பொழிவுகளையும், இதர விஷயங்களையும் தொகுத்தது யார்? எப்படி?...

"கொல்கத்தாவில் மகேந்திர நாத் குப்தா என்று ஒரு பள்ளிக் கூடத் தலைமை ஆசிரியர் இருந்தார். அவர் பகவான் ராமகிருஷ்ணரது பேரபிமானி. வாரத்துக்கு இரண்டு மூன்று நாட்கள் அவர் பகவானுடன் சில மணி நேரங்கள் அமர்ந்து, அவர் பேச்சுகளை கவனிப்பார். பகவானைச் சந்திக்கிற பக்தர்களின் கேள்விகளையும், அவற்றுக்கு பகவான் தரும் பதில்களையும் கேட்டுக் கொள்வார். வீட்டுக்குப் போனதும், தியானம் செய்துவிட்டு, பகவான் சொன்னவற்றையெல்லாம் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து, அவற்றை எழுத்தில் வடிப்பார். சந்தேகம் வரும் போது, பகவானிடம் கேட்டுத் தெளிவு படுத்திக் கொள்வார். மகேந்திர குப்தாவுக்கு 'எம்' என்று சுருக்கமான பெயரும் உண்டு.

பகவானுக்கு 'எம்' கிடைத்ததுபோல, விவேகானந்தருக்கு வாய்த்தவர் குட்வின். இவருக்கு சுருக்கெழுத்து தெரியுமாதலால், விவேகானந்தரது சொற்பொழிவுகள், உரையாடல்கள் முழுவதையும் சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டு விடுவார் குட்வின்.

பகவான் ராமகிருஷ்ணரது சீடர்கள், பகவானின் சொற்பொழிவுகள், ஆன்மிகக் கருத்துகள், அவருடன் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என, அனைத்தையும்

கலைஞர் பெற்ற கீதை!





* சுவாமி ஞானதானந்தா

எழுதி வைத்திருக்கிறார்கள்.

ராமகிருஷ்ண மடம் காலப்போக்கில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் கிளை பரப்பியது. எனவே, அந்தந்த மாநில மொழிகளில் பல்வேறு புத்தகங்களும் மொழி பெயர்க்கப்பட்டன. படிக்கிறபோது இது வேறு ஒரு மொழியிலிருந்து, மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது என்கிற உணர்வு துளியும் ஏற்படாத அளவுக்கு, சரளமாக மொழி பெயர்ப்பு செய்யப்படுவது எங்களது சிறப்பான அம்சம்.

சமீபத்தில், இந்து முன்னணி ராமகோபாலன், கலைஞர் கருணாநிதியைச் சந்தித்தபோது கொடுத்த பகவத் கீதை புத்தகம்கூட ராம கிருஷ்ண மடம் வெளியிட்டதுதான் போலிருக்கிறதே!

"ஆமாம்! மடத்தைச் சேர்ந்த துறவிகள் ஆழ்ந்த ஞானம் கொண்டவர்கள். புராணங்கள், உப நிஷத்துகள், பாகவதம், கீதை என்று அனைத்தையும் சாதாரண மக்களுக்கும் புரிகிறாற்போல விளக்கமாய் எழுதியிருக்கிறார்கள். மொழி பெயர்ப்புகளும் எங்கள் மடத்தின் துறவிகளால்தான் செய்யப்படுகின்றன. இன்று ராம கிருஷ்ண மடத்தின் வெளியீடுகள், பல்வேறு இந்திய மொழிகளில் மட்டுமின்றி, பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்க, ருஷ்ய, ஜப்பானிய மொழிகளிலும் வெளியாகி உள்ளன.

உங்களுடைய வெளியீடுகளில் அதிக அளவில் விற்பனை ஆவது எது?

தமிழைப் பொறுத்தவரை, 'ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள்' என்ற புத்தகம் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது - விவேகானந்தரது, 'சகோதர, சகோதரிகளே!' என்ற புத்தகத்துக்கு இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு. சென்ற வருட சென்னை புத்தகக் கண்காட்சியில், இந்தப் புத்தகம் தொள்ளாயிரம் பிரதிகள் விற்பனையானது ஒரு சாதனை.

சமீப காலமாக, புத்தக விற்பனைக்காக வேன் மூலமாக கிராமங்களுக்குச் செல்கிறீர்களாமே!

"ஆம்! மக்களுக்கு நற் கருத்துகளை எடுத்துச் சொல்லி, விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன், விவேக முரசு என்ற வேனை தயார் செய்திருக்கிறோம். இதன் மூலமாக கிராமங்களுக்குச் சென்று, விவேகானந்தர் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஒலி, ஒளிக்காட்சியைக் காட்டுகிறோம். மடத்தின் வெளியீடுகளையும் விற்பனை செய்கிறோம். கடந்த இரண்டு மாதங்களில் முப்பது கிராமங்களுக்கு விவேக முரசு சென்று வந்துள்ளது.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படம் : **கௌதம் ராம்**

கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி நுண்ணலையில் ஒரு மின்னல்!
(சென்னை மாநகருக்கு மட்டும்)

8 பக்கங்கள்
17, அக்டோபர் 2004 இதழுடன் இலவச இணைப்பு

உச்சாணி



கடவுளின் பொக்கிஷக் குழந்தை!



திருவள்ளுவரின் முத்தான வரிகளில் ஒன்று - 'தோன்றிற் புகழொடு தோன்றுக.' இதை ஒரு குழந்தை தான் எல்.கே.ஜி. படிக்கும் பொழுதிலிருந்தே நிரூபித்து வருகிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா!

திருகுமார் - செல்வி தம்பதியின் ஒரே செல்லமான கீர்த்தனா, தற்பொழுது சாந்தோமிலுள்ள ரோஸரி மெட்ரிகுலேஷனில் மூன்றாவதுதான் படிக்கிறாள். "அங்கிள், இதெல்லாம் என் சர்டிபிகேட்ஸ்" என்று ஒரு பெரிய சூட்கேஸைத் திறந்து காண்பித்தால், அதில் நூற்றுக்கும் அதிகமாக வெவ்வேறு போட்டிகளில் பரிசுகள் வாங்கிய தன் சான்றிதழ்கள்! கப்போர்டில் எண்ணிலடங்கா கோப்பைகள். எல்.கே.ஜி. முதல் இன்று வரை பள்ளியில் நடத்திய மிட் டேர்ம், காலாண்டு... என அனைத்துத் தேர்வுகளிலும் தவறாமல் நூற்றுக்கு நூறு அனைத்துப் பாடங்களிலும் வாங்கியதில் (வாங்கி) பெற்றோர் பரிசளித்த விதவிதமான பொம்மைகள், என வீடு முழுக்க இக்குட்டியின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.

மேஜிக், பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, ட்ராயிங், கீபோர்டு வாசித்தல், பெயிண்டிங், பொது அறிவு, தமிழ் & ஆங்கிலப் பேச்சுப் போட்டி, திருக்குறள், ஸ்லோகம், லண்டன் ட்ரினிடி கல்லூரியில் இசைப் பயிற்சி என முக்க வாங்கும் அளவுக்கு, வானுக்குக் கீழுள்ள அத்தனை திறமைகளையும் பெற்றிருக்கிறார்.

ஒரு எட்டு வயதுக் குழந்தை மேஜிக்கில் நிபுணராக விளங்குவது இதுவரை தமிழகம் அறியாதது. "ஹலோ, லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன் ஐ ஆம் மிஸ். கீர்த்தனா.." என்றபடி மேஜிக்கோலை வைத்து "ஜீ... பூ... ம்பா" ஓதி, மேஜிக் பண்ணும் அழகை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். பொதுவாக இக்காலப் பெற்றோர்கள் செய்யும் தவறைக் கீர்த்தனாவின் பெற்றோர் செய்யாமல், நல்ல தமிழையும் முறையாகப் பயிற்றுவித்திருக்கிறார்கள். 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்' என்று பரிசுத்தமாக 'ழ'கரத்தை ஒலித்தபடி, திருக்குறளையும் கடகடவென ஒப்புவிப்பது, தமிழுக்கான கூடுதல் இனிமை.

"இவ சாதிக்கணும்னு நினைக்க எதுவுமே சொல்லித் தரலை. இவளுக்கே ஒவ்வொன்றையும் பார்த்து ஆர்வம் வந்து, இன்ஸ்பைரா கத்துக்கிட்டா. நிறைய இவ மேல இருக்கு படிப்பு..." என்றார் தன் மகளை சான்றோள் எனக் கேட்ட தாயான செல்வி.

"சினிமா, டிவிகளில் நடிப்பதற்கான வாய்ப்புகள் நிறைய வந்தது. ஆனால் எதையும் வாசல்படி ஏற விடவில்லை. படிப்பும் இத்தனை திறமைகளுமே போதும்" என்கிறார் திருகுமார். அடுத்தபடியாக கீர்த்தனாவை சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குத் தயார்ப் படுத்தி வருகிறார்.

சமீபத்தில் பாரத் ஜோதி விருதையும், ஸ்காலர்ஷிப்பையும் வாங்கியிருக்கும் கீர்த்தனாவின் கனவு - 'டாக்டராகணும். அதுவும் ப்ரெயின் ஸ்பெஷலிஸ்டாகணும்'" என்கிறார் கண்கள் படபடக்க. இவளின் துறுதுறுப்பும் பச்சிளம் பற்கள் சிரிப்பும், கடவுளைக் கண்ட உற்சாகத்தையே அளித்தது.

கீர்த்தனாவுடன் செலவழித்த ஒவ்வொரு நிமிடமும், அப்துல் கலாம் ஏன் இக்கால குழந்தைகள் மீது (மட்டும்) நம்பிக்கை வைத்து அழுத்த அடி போடுகிறார் என்பது தெள்ளத் தெளிவாகவே புரிந்தது.

📷 ஷிவ் ✍ கண்ணன்



📷 இரா.சண்முகசுந்தரம்



பொலிட் பீரோ

சின்னவருக்கு அமைச்சர் பதவி என்ற கிசுகிசுப்பு மெல்ல அடங்கி வருவது, அந்த நினைப்பில் ஏகக் கெத்துடன் உலா வந்த அவரது ஆதரவாளர்களுக்கு பெரிய சோகத்தை ஏற்படுத்திவிட்டது போல! இப்போது எல்லாவற்றிற்கும் காரணம், திட்டமிட்டு மீடியாவில் அரங்கேற்றிய சுத்துகளும், 'கிசுகிசுப்பு' தேர்மிறையில் எழுப்பப்பட்டதும்தான் என புலம்பி வருகின்றனர்.

(புலம்பு! கிசுகிசுவுக்குக் கூட காலநேரம் பார்க்கணுமோ?)

பசுமை பால் நிறுவனத்தில் சமீபத்தில் ஏற்பட்ட குழப்பங்கள், துறை சார்ந்தவருக்கு பெரும் தலைவலியாக உருவெடுக்கப் போகிறது என அவரது சுற்றமும் நட்பும் பேசி வருகிறார்களாம். லாபம் கிடைக்க வேண்டிய திட்டமொன்றை தம்முடைய அலட்சியத்தாலும், அனுபவமின்மையாலும் கோட்டைவிட்டுவிட்டதாக, கோட்டையில் யாரோ பற்ற வைத்துதான் காரணம் என்ற பேச்சும் அடிபடுகிறது.

'**வ**யது சான்றிதழ் கொடுத்து 'சரக்கு வாங்கிக் கொள்ளலாம்' என்ற சமீபத்திய உத்தரவு மக்கள் மத்தியிலும் மேலிடத்துக்கு பக்கபலமாக இருக்கும் மெத்தப் படித்தவர்கள் மத்தியிலும், மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாம். இந்த தலைக்கு பெரிய இழப்பு காத்திருப்பதாகவும், கோபம் கொப்பளிக்கப் பேசி வருகிறார்களாம்.

சென்னை மாநகராட்சி வார்டு உறுப்பினர்களிடம் தற்பொழுது வந்திருக்கும் 'கூடா நட்பு', மிகப் பெரிய தலைவலியென பொது மக்கள் புலம்பி வருகிறார்கள். அதாவது, ஏரியா மக்கள் பிரச்னைகள் குறித்து ஆளும்கட்சி, எதிர்கட்சி என எவரிடம் கேட்டாலும், ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்காமல் மழுப்பல் பதில்களைத் தந்துவிட்டு விலகி விடுவதுதான். இந்த 'அண்டர் கிரவுண்ட்' லெவல் தரப் போகும் பாதிப்புகளின் பிரதிதான் இவ்வாறு பொதுமக்கள் புலம்பக் காரணமோ!

கலை



புதைகுழியில் நூலகம்!

சென்னைத் தாயின் கழுத்தில் இருக்கும் புகழ் மாலையிலுள்ள நறுமண மிகு மலர்களுள், சென்னைப் பல்கலைக் கழகமெனும் மலரும் ஒன்று. இந்த மலரின் இதழ்களுள் ஒன்றான பல்கலைக் கழக நூலகம், இன்று மெல்ல மெல்ல வாடி வதங்கி வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டும், என்ற உன்னத உணர்வுடன் கடிதமெழுதிய சிந்தாதிரிப்பேட்டை கல்கி வாசகர் சாந்தகுமாருக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம், அதே உணர்வுடன்.

எண்ணற்ற மேதைகளை, அறிவு ஜீவிகளை, முனைவர்களை, பட்டதாரிகளை தன்னிடமுள்ள அரிய புத்தகங்களால் செம்மைப்படுத்திய இந்த நூலகம், இன்று சீர்கெட்டு வருவது இங்கிருந்து பட்டம் பெற்றோரின் மனத்தைக் காயப்படுத்தியிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இருப்பினும் இதனைச் சீர் செய்ய இதுவரை யாரும் முயற்சிக்கவில்லையே என்பதுதான் நிச்சயம் வருத்தப்பட வேண்டிய விஷயம். சரி, இன்று நூலகத்தின் நிலைதான் என்ன?

வாசலில் நுழைந்தவுடன் புன்னகை என்பதை மருந்துக்குக்கூட காட்ட மனமின்றி, அதட்டல் தொனியுடன் கையெழுத்திடச் சொல்லும் பணியாளர்கள் - குறைந்தது கால் இஞ்சுக்காவது அழுக்குப் படலத்தைக் கொண்ட மேஜை நாற்காலிகள் - அதன் மீது சிதறிக் கிடக்கும் விலையுயர்ந்த புத்தகங்கள், ஒட்டடை படிந்த மேற்கூரை மற்றும் சுற்றுச்சுவர்கள் - சுவிட்ச் இல்லாத, மற்றும் இதோ விழுந்துவிடுவேன், அதோ விழுந்துவிடுவேன் என அந்தரத்தில் தொங்கும் மின்விசிறிகள், ஒளியிழந்து எரியும் மின்விளக்குகள், ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்பது போல ஒரேயொரு ஆங்கில நாளேடு, என்று இந்த சூப்பர் நூலகத்தின் அரிய குவாலிட்டிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

நமது நோக்கத்தை உணர்ந்து கொண்டு, இங்கு தொடர்ச்சியாக வரும் ஸ்காலர் ஒருவர், இந்நூலகத்தின் மறுபக்கத்தை இதற்காகவே காத்திருந்தவர் போல தோலுரித்துக் காட்டினார்.

"ஒரு சாதாரண மாணவனாகவும் இங்க வந்து படிச்சிருக்கேன். இன்னைக்கு ஒரு ஸ்காலராயும் வந்து படிச்சிட்டு இருக்கேன். அதனால் தானோ என்னவோ, இன்னிக்கு இந்த நூலகத்தோட நிர்வாகம் நசிந்து கெட்டுப் போறதை என்னால சீரணிக்கவே முடியல. இங்கு நடக்குற முறைகேடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. பக்கத்துல இருக்குற ஹால்லதான் எல்லாப் புத்தகங்களும் இருக்கும். அங்கிருந்து எடுத்து வந்து, இங்க வச்சி படிக்கறதுதான் வழக்கம். அந்த ஹால் ரொம்பப் பெரிசா இருக்கறதால, கடைசி வரிசை அலமாரிகளெல்லாம் பார்வையிலிருந்து சுத்தமாக விலகியிருக்கும். இதை மிஸ்யூஸ் பண்றதுக்காகவே ஏகப்பட்ட பேர் வர்றாங்க. இது மேனேஜ்மெண்ட்டுக்கும் தெரியும். இருந்தும் அதைக் கண்டுக்கறதில்லே. அதேபோல அங்குள்ள புத்தகத்தை எடுத்துட்டு இங்க வந்து படிக்கிறவங்க, அப்படியே கையோட கொண்டு போயிடறது வர வர அதிகரிச்சிட்டே இருக்கு. இப்ப ஒரு இன்ஸ்பெக்ஷன் வச்சு எல்லாத்தையும் சரி பார்த்தா, இது எந்த அளவுக்கு உண்மைன்னு தெளிவாயிடும். இந்த மாதிரி புத்தகம் வெளிய போறதுல, இங்க இருக்கிறவங்களுக்கு நிச்சயம் தொடர்பு இருக்க வாய்ப்பிருக்கு.

அடுத்து நீங்க எப்ப வந்து பாத்தாலும், ஒருத்தர் டெலிபோன்ல பேசிகிட்டேயிருப்பார். பார்க்கறதுக்கு நூலக ஊழியர் போலத் தெரியும். ஆனா அவரு எல்லாரை மாதிரியும் இங்க படிக்க வர்றவர். இங்கு வேலை செய்பவர்களிடம் ஏற்பட்ட பழக்கம், இந்த மாதிரி டெலிபோனை தனது சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்த அவரை அனுமதிச்சிருக்கு. அதே சமயம் இங்க ரெண்டு மூணு பேர், ரொம்ப சின்சியரா ஒர்க் பண்றவங்க இருக்காங்க. ஆனா இங்க நடக்குற முறைகேடுகள் அளவுக்கு அதிகமாக இருக்கறதால, அந்த சில பேரோட உண்மையான சேவைகள் கடலில் கரைத்த பெருங்காயமாகி விடுகின்றன" என பெருமூச்சு விடுகிறார்.

இவற்றையெல்லாம்விட இந்நூலகத்தை - நூலகத்தின் கதியை இங்கிருக்கும் தாதாபாய் நௌரோஜியின் 'சிலை'யின் நிலை, உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக்கிவிடும்!

நெஞ்சு பொறுக்குதில்லையே! இந்த நிலைகெட்ட நூலகத்தை நினைத்து விட்டால்!

இரா.முத்துக்குமார்

ஷிவ்



டாக்டர் கவுன்சிலர்!

முன்பெல்லாம் நம்மூர் நாட்டாமைகளின் வாரிசுகளோ, அல்லது சுத்தமாக படிப்பு வாசனையே இல்லாமல் திரிபவர்களோ, அல்லது செல்வச் செழிப்பில் திளைப்பவர்களோதான், கவுன்சிலர் பதவி உள்ளிட்ட பல்வேறு பதவிகளுக்கான தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெறுவது வாடிக்கையாக இருந்து வந்தது. ஆனால் சென்னை மாநகராட்சியின் 44ஆவது வார்டு கவுன்சிலர் பிரதாப் குமார் கொஞ்சம் மாறுபட்டவர். அப்படி என்ன செய்துவிட்டார் இவர்? - அவரிடமே கேட்டோம் :

"1991 - 96 ஆம் ஆண்டில் நடந்த தமிழகத்தின் ஆட்சி பற்றியும், முதல்வரின் செயல்பாடுகள் குறித்தும் முறையாக, பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சி மேற்கொண்டேன். அதற்காக அடுத்த மாதம் எனக்கு முனைவர் பட்டம், சென்னைப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட இருக்கிறது. அந்த ஆட்சியின் செயல்பாடுகள் குறித்து ஆராய்ந்ததைப் போன்றே, அந்த ஆட்சிக்குப் பிறகு நடந்த தேர்தல் முடிவுகள் குறித்தும் ஆராய்ந்து எழுதியுள்ளேன்" என்று புன்னகை செய்கிறார் இந்த புது டாக்டர் பிரதாப் குமார்.

இவர் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டமும், சைவ சித்தாந்தத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். இன்னும் சொல்லப் போனால் தற்போதைய மாநகராட்சி உறுப்பினர்களிலேயே அதிகம் படித்தவர் அநேகமாக இவராகத்தான் இருப்பார். இவையெல்லாம் மக்கள் சேவைக்கு எந்த அளவில் உதவும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ராஜன் முரளி

இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிக் கொண்டால், எத்தனை சுவாரஸ்யம் இருக்குமோ, அப்படியொரு சுகானுபவம் கிடைத்தது, நேரு ஸ்டேடியத்திற்கு வந்தவர்களுக்கு. 'சிட்டி ஒலிம்பிக்ஸ்' என்று போற்றப்படும் முதல்வர் மீட்டின் வெற்றிக் கோப்பை, தொடர்ந்து மூன்றாவது முறையாக எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரிக்குச் சென்றாலும், அதன் பின்னால் நடந்த பரபரப்பு நிமிடங்களை விவரிக்கிறார் அதன் விளையாட்டுத்துறை முதன்மை ஆசிரியர் திருமதி. சங்கரி.

"கல்லூரிகளுக்கிடையே எத்தனையோ விதவிதமான போட்டிகள் நடந்தாலும், விளையாட்டுக்கென்று இருக்கும் ஒரு பெரிய போட்டி இதுதான். எங்க காலேஜ்ல இருபத்தைந்து விளையாட்டு மாணவிகளுக்கு இலவசக் கல்வியும் இருப்பிடமும் தர்றதால, அதுக்குப் பிரதிபலனா இந்தக் கோப்பையை 'வின்' பண்ணுவதுதான் எல்லோருக்கும் பெரிய லட்சியமா இருக்கும்.

பதினைந்து வருடங்களுக்கு மேலாகவும் இந்தக் கோப்பையை எத்திராஜ் கல்லூரி தட்டிட்டு இருந்தாலும், கடந்த இரண்டு வருஷமா நாங்க ஜெயிச்சதால, 'ஹாட்ரிக்' அடிக்க ஆர்வமிருந்தது. எங்க சைட்ல பல பேருக்குக் காயம் ஏற்பட்டதாலும், கடந்த சில மாதங்களாக் ரெகுலரே கிடைக்காம, பீச் மணல்ல பிராக்டிஸ் பண்ணதாலயும், எல்லோருக்கும் டென்ஷனும் பயமும் நிறையவே இருந்துச்சு.

அதுக்கேத்த மாதிரி இரண்டாவது நாள் முடிவுல, எங்களுக்கு அவங்களுக்கும் இடையில ஐந்து பாயின்ட்தான் கேப் இருந்துச்சு. காரணம் 'த்ரோ' ஈவன்ட், 400, 800 மீட்டர்ல அவங்க ஜெயிச்சதால, எங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுச்சு.

மூனாவது கடைசி நாள். காயம் பட்டு இருந்தாலும் எங்க அமுதா, லாங்ஜம்ப்புல முதல்ல வந்தா. கிராமத்திலிருந்து வந்த பாப்பாத்தி, செவன்டிஃபைவ் மீட்டர் நீண்ட தூர ஓட்டங்கள் எல்லாத்துலயும் முதலிரண்டு இடங்களை ஜெயிச்சாங்க. சர்வதேச அத்லெட்டான கோகன். பிரியா 1X400 ரிலே ஓடிப் பழகாமலே, காலேஜுக்காகக் கஷ்டப்பட்டு ஓட முன் வந்தா. இப்படி எல்லாரும் எம்.ஓ.பி. வைஷ்ணவா காலேஜ் ஜெயிச்சே தீரணும்ங்கிற வெறியில இருந்ததால, கடைசியில 32 பாயின்ட் இடைவெளியில கோப்பையைத் தட்டிட்டோம். பாப்பாத்தி சேம்பியன் ஆனாள்.

இவங்களை ஊக்கப்படுத்த தினமும் காலேஜிலிருந்து நூற்றுக்கணக்கான



ஸ்டூடன்ட்ஸை அனுப்பி பலமா உற்சாகப்படுத்தினோம். கடைசியில ஜெயிச்ச பிறகு 'ஆடலன்'னு காட்டுக் கத்தல் கத்தினதைப் பார்க்கணுமே" டென்ஷன் பறந்த உற்சாகத்தில் சிரித்தார்.

— செந்தில்



செல்வராகவன் சோனியா அகர்வால் ஜோடியை அடிக்கடி பார்ப்பதாக, வடபழனியிலுள்ள ராகத் ப்ளாசாவில் வேலை பார்ப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

புதுமுகம் ஹீரோவாக நடித்திருந்தாலும் ஏ.எம். ரத்னம் - செல்வராகவன் கூட்டணியில் உருவாகியுள்ள '7ஜி ரெயின்போ காலனி' சென்னையிலுள்ள அனைத்து பெரிய திரையரங்குகளிலும் ரிலீசாகியிருக்கிறது. இதற்கு நேர்மாறாக, பா.ம.கவிற்கு பயந்தோ என்னவோ, சமீபத்தில் ரிலீசான விஜயகாந்தின் 'கஜேந்திரா' உட்லண்ட்ஸ் தவிர, லோக்கல் தியேட்டர்களில் மட்டுமே ரிலீசானது.

சென்னையிலேயே தீப்பெட்டி சைஸிலிருக்கும் திரையரங்கம் தேவிகலா. இங்குதான் 'கில்லி' தனது 175வதுநாளை வெற்றிகரமாகக் கொண்டாடியிருக்கிறது. இது போன்ற குட்டீஸ் இருப்பது நம் தயாரிப்பாளர்கள் காலரை தூக்கி விடுவதற்கு ரொம்பவே சௌகரியமாயிருக்கிறது.

ஷிவ் எழில்

ராக-தீம் இன்னும் நேரம்...



ஹரிஷ் ராகவேந்திரா, டிப்பு, மாணிக்க விநாயகம், சின்மயி, ரோஷிணி... இவர்களோடு மும்பையிலிருந்து வந்த சாதனா சர்கமும் இணைந்து கொள்ள, விஜய் டி.வி. மற்றும் செவந்த் சேனல் இணைந்து சென்னையில் நடத்திய 'இளமை இதோ இதோ', பெயருக்கேற்றாற் போல் துள்ளலோடு அமைந்தது. யாரும் அமிர்தவர்ஷினி ராகத்தில் பாட ஆரம்பிக்கவில்லை. ஆனால் மழை சிணுங்கத் துவங்கி விட்டது. தொடர்ந்து வான் பன்னீர் தெளித்தபடி இருந்தாலும், மக்கள் இரவு 10 மணிக்கு வரைக்கும் அசையாமல் இருந்ததைக் கண்டு, சாதனா சர்கமுக்கு இன்ப அதிர்ச்சியாகவே இருந்தது. இந்த இசைக்குயில்களோடு தனியாய் நடனமாடிய மாளவிகா.. இளைஞர்களைத் தாண்டி விழாவில் எதிர்பாராமல் காமெடி கிச்சுகிச்சு மூட்டி, மேலும் சுவாரஸ்யமாக்கினார் 'நண்டு' ஜெகன்.

என் பாட்டு, எப்பவுமே ஹிட்!

'இத்தனை நாட்களாக இதற்காகத்தான் காத்திருந்தாய்' என்று ஒரு பெரிய வெற்றியை தூக்கி ரீமாசென்னின் தலையில் வைத்திருக்கிறது 'செல்லமே'. இதன் கொண்டாட்ட ஓட்டத்துக்காக சென்னை வந்திருந்தவரை மடக்கினோம். ஜி.ஆர்.டி. ஹோட்டலிலுள்ள காபி ஷாப்பில் மண மணக்கும் காபியை கலந்துக் கொண்டே பேசத் துவங்கினார்.

ஹாய், அதென்ன முகத்துல கூடுதலா சந்தோஷம், என்ன சர்ப்ரைஸ்?

யா. இந்த டைம்ல 'செல்லமே' நல்லா ஓடுதுங்கிற சந்தோஷத்தை விட வேறென்ன இருக்க முடியும்? சொல்லுங்க. அதுவும் முதன்முதலா என் நடிப்புக்கும் பாராட்டு கிடைக்கிறதுல எத்தனை சந்தோஷம் தெரியுமா? எனக்கே ஆச்சர்யம். சேலை கட்டிக்கிட்டு தமிழ்ப் பொண்ணா நடிச்சது ஒரு இன்ப அதிர்ச்சிதானுன்னு சொல்லணும்.

ரீமாசென் நடிக்கிற படங்களில் பாடல்கள் அற்புதமா இருக்கே!

யா. ஒரு ஹீரோயினுக்குப் பாட்டு ஹிட்டாகறதுங்கிறது முக்கியமான விஷயம். அதிர்ஷ்டவசமா நான் வர்ற அத்தனை பாடல்களுமே ஹிட்டாகுது. பொதுவா பாட்டுக்கென்று நான் ஸ்பெஷலா எதுவும் பண்ணாட்டியும் காஸ்ட்யூம்ல கூடுதலா கவனம் செலுத்துவேன். மேக்கப் - அப் மட்டுமல்ல, காஸ்ட்யூமும் உங்கள் அழகை மேலும் மெருகூட்டும்.

மும்பையிலிருந்து வரும் ஹீரோயின்களைக் கிளாமருக்கு மட்டுமே தமிழ் சினிமா பயன் படுத்துதே?

இது தப்பான கணிப்பு. நடிக்கத் தெரியாம போனா எங்களை யாராவது சம்பளம் கொடுத்து நடிக்க வைப்பாங்களா?

நீங்க எவ்வளவு நாள்தான் கிளாமர் பண்ணுவீங்க?

ஏன், அதிலென்ன தப்பு? நான் பெரிய நடிகை'ன்னு ஆர்ட் ஃபிலிம்ல நடிச்சா எனக்கான பெரிய பெயரை தேடிக்கலாம். ஆனா மத்தவங்களுக்கு என்ன லாபம் இதனால்? தயாரிப்பாளரை நஷ்டப்படுத்துற படங்களே எனக்கு வேண்டாம். இன்றைய சினிமாவுக்கு கிளாமர் தேவை. அதனால தொடர்ந்து கிளாமர் பண்றதுல சங்கடமேயில்லை.

தமிழ் சினிமாவுல பிடிச்ச நடிகை யார்?

தெரியுமா, நான் மூணு ஹீரோயின்களோடு நடிச்சாலும் யாரிடமும் போட்டி போட்டதோ, சண்டையோ போட மாட்டேன். சிம்ரன், ஜோவெல்லாம் என் கிளோஸ் ஃப்ரெண்ட்ஸ். ஒரு ஷோவுக்கு நான் லேட்டா போயிட்டிருக்கேன். சிம்ரன் ஆடப்போறதா அறிவிச்சவுடனே விழுந்தடிச்சுக்கிட்டு ஓடிப்போய் பார்த்தேன். சிம்ரன் மாதிரி டான்ஸ் பண்ணவோ, ஜோ மாதிரி எக்ஸ்பிரஷன் காட்டவோ எல்லாராலும் முடியாது.

ஹிந்திக்குப் போகலையா?

ஏனோ அங்க செட்டாகலை. தமிழ் மற்றும் தெலுங்குல நல்ல பேரும் புகழும் இருக்கு. இதையே மெயின்டெயின் பண்ணா போதும்னு நினைக்கிறேன். என்னை உங்களுக்கெல்லாம் பிடிச்சிருக்கில்லே?

'கிரி' படத்துல குஷ்பு உங்களுக்குச் சரியாக சம்பளம் தரலையாமே?

சம்பளப் பிரச்னை சினிமாவுல இருக்கறதுதானே. மும்பையைச் சேர்ந்த குஷ்பு தமிழ்ப்படம் தயாரிப்பதை எண்ணி மகிழ்ந்து ஒப்புக் கொண்டேன். வீடு தேடி வந்து கேட்டவரிடம் எப்படி மறுப்பது? ஆனால் இன்று பிரச்னை ஏற்பட்டாலும், ஒரு நடிகையின் உணர்வுகளை இன்னொரு நடிகை புரிந்து கொள்வார் என நினைக்கிறேன்.

தமிழ் சினிமா?

சிம்பிளி கிரேட். இங்கும் எது போல விதவிதமான படங்கள் வேறெந்த மொழிகளிலும் வருவதில்லை.

ச.ந.கண்ணன்





டேஸ்ட்.காம்

சுத்தமான நெய் + அக்மார்க் நெய் கொண்டு தயாரிக்கப்படும் நம்ரூட் அல்வா, பலாப்பழ அல்வா, மாம்பழ அல்வா, பைனாப்பிள் அல்வா, ஆப்பிள் அல்வா, கேரட் மைசூர் பாக், அனி 'லட்டு, பாதம் பிஸ்தா, ப்ளவர், ரஸ்லா ரோல்... (இப்படியே எழுதிட்டுப் போனா எழுத்துகளை எறும்புகள் மொய்க்க ஆரம்பிச்சுடும்) இப்படி தித்திப்பா ஜொலிக்குது, தனது புதிய கிளையை இரின்வேவன் சாலையில் (அரசு இசைக் கல்லூரி அருகில்) ஆரம்பித்துள்ள சூர்யா ஸ்வீட்ஸ். ஏற்கெனவே ராஜா அண்ணாமலை புரத்தில் (முதல் மெயின் ரோடு) கிளை கட்டிவரும் இவர்களிடம், நீங்கள் ஆயுதபூஜை மற்றும் தீபாவளிக்கு பலகாரங்கள் ஆர்டர் செய்ய வேண்டுமானால் பத்து நாளைக்கு முன்னாடியே சொல்லி விடுங்கள். இல்லாவிடில் ஏமாற்றம் தான் மிஞ்சும் உங்களுக்கு...! முறுக்கு, சீடை, தேன்குழல், தட்டை போன்றவைகூட கிடைக்கின்றன. ஊட்டியிலிருந்து ஃப்ரெஷ்ஷாக வரவழைக்கப்படும் விதவிதமான காய்கறிகளும் இங்கு கிடைப்பது ப்ளஸ். சொல்லப் போனா, அந்த ஏரியா வாசிங்க ரொம்பக் கொடுத்து வச்சவங்க.

மதி   செந்தில்

ஆக்ஸ்ஃபோர்டு கூத்து!

'தி ஆக்ஸ்ஃபோர்ட் கம்பேனியன் டு இண்டியன் தியேட்டர்' எனும் புத்தகத்தை OUPம் பிரிட்டிஷ் கவுன்சிலும் இணைந்து பதிப்பித்திருக்கிறார்கள். வெளியிட்டது சுலல். பிரிட்டிஷ் கவுன்சில் மொத்தமும் களை கட்டத் தொடங்கியது. முதலில் கிரீஷ் கர்னாடின் நாடகத்திலிருந்து சில பகுதிகளை மேடையேற்றியது 'மெட்ராஸ் ப்ளேயர்ஸ்'. கூலல் வந்ததாலோ என்னவோ, ஒரு நீண்ட முத்தக் காட்சியும் இதில் இடம் பெற்றிருந்தது.

'கிருஷ்ணர் தூது' எனும் நாடகத்தில், "கொஞ்சுண்டு நிலமாவது தா" என்று கிருஷ்ணர் கெஞ்சிக் கேட்டும், 'மாட்டேன் ப்போ' என்று விடாப்பிடியாக காலை உதைத்துக் கொண்டு அடம் பிடிக்கிறார் துரியோதனன். "சரி, போகட்டும். போருக்காவது வா, நீ நல்ல பிள்ளை தானே" என்றால், "நானா, போருக்கா. அதெல்லாம் முடியாது" என்று முரண்டு பிடிக்கிறார். என்ன செய்ய! பதினைந்து நிமிடங்கள் ஆடியும் பாடியும் பார்த்து விட்டு சலிப்புடன் 'அடப் போய்யா' என்று போயே விடுகிறார் கிருஷ்ணர்.

ஒரு குஜராத்தி அப்பாவிற்கும் பிள்ளைக்கும் மேடையில் 15 நிமிடங்கள் காரசாரமாக வாக்குவாதம் நடந்தது. நடித்தவர்கள் எம்.டி.சி. ப்ரொடக்ஷன்ஸ் "ஹம்" 39 லேன்ஸ். நோ ப்ராப்ளம்" என்று கால் மேல் கால் போட்டு ஆட்டிக் கொண்டு, தொலைபேசியில் ஊர் வம்பு பேசும் தனது அருமை மகளைப் பார்த்து "வாழ்க்கையில் நான் அறியாமல் செய்த மிகப் பெரிய தவறு இவள் தான்" என்று புலம்புகிறார் தந்தை.



இறுதியாக வந்தது கூத்துப் பட்டறை. எங்கோ வெறித்துப் பார்த்தபடி, விட்டுவிட்டுப் பேசும் அரவாணி, இறந்த பின்பும் பாரதப் போரைப் பார்க்க உயிரோடு வந்திருக்கிறானாம். இரண்டு கைகளிலும் இரண்டு கூர்மையான கத்திகள். "பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்று நம்மைப் பார்த்து அவன் இறுக்கத்துடன் சொல்லும்பொழுது, சிறிது பயமாகத்தான் இருந்தது.

நாடகங்களும் தெருக்கூத்துகளும் ஆக்ஸ்ஃபோர்ட், பிரிட்டிஷ் லைப்ரரி, கேம்பிரிட்ஜ் என்று ஒதுங்கிக் கொள்ள, பட்டித் தொட்டிகளில் மட்டும் ஏனோ ஒலி பெருக்கிகள் 'சோதாலோ போய்' என்று விடாமல் முழக்கமிட்டுக் கொண்டிருக்கின்றன.

மருதன்

சி.ஐ.பி.



மன்மதராசாவினால் எத்தனை சங்கடங்கள்?

தந்தை எல். வைத்யநாதன், பெரியப்பா எல். சுப்ரமணியம். இது போதுமே, எல்.வி. கணேசன் உடலில் இசை ரத்தம் ஓடுவதற்கு. ஏராளமான விளம்பரங்களுக்கு இசையமைத்து விட்டு, அடுத்ததாக திரையிசையில் நுழைந்திருப்பவரின் சிறப்பம்சம், கர்நாடக சங்கீதத்துக்கு வெஸ்டர்ன் மூலாம் பூசி இளைஞர்களை அதன் பக்கம் திருப்பியிருப்பது.

சென்ற மார்ச் மாதத்தின் பொழுது வெளியான இவரின் 'எக்ஸ்ப்ளோஷன் I' ஆல்பம் சக்கைப் போடு போட, அதே மாதத்தில் இதன் இரண்டாம் பகுதி ஆல்பத்தையும் வெளியிட்டு, பாப் மற்றும் கர்நாடக இசையுலக வட்டாரத்தில் பல இன்ப அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளார்.

"ஆனால் கர்நாடக சங்கீதத்தை அதன் போக்கிலேயே கேட்டால் தானே சுகம்! ஃப்யூஷன் கலந்தால் அதன் புனிதம் பாதிக்காதா" என்றதுதான் தாமதம். பொங்கியெழுந்து விட்டார், "இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் நம் பாரம்பரியங்களை ஒவ்வொன்றாக அழித்துக் கொண்டு வருகிறோம். தியாகராஜர் அன்றைக்கு முப்பதாயிரம் கீர்த்தனைகள் பாடிவிட்டுச் சென்றதாக ஓலைச் சுவடிகள் தெரிவிக்கின்றன. ஆனால் இன்றைக்கு அறுநூறு கூட மிஞ்சவில்லை. மீதியனைத்தும் எங்கே? இதே நிலைமை தொடர்ந்தால் என்ன ஆகும் கர்நாடக இசை?" என்றவர் சில உதாரணங்களை அடுக்கினார்.

"ஏதோ நான்தான் திடீரென நுழைந்து கர்னாடிக் இசையை தலைகீழாய் மாற்றிவிடவில்லை. காலம் காலமாய் மாற்றங்கள், திருத்தங்கள் நடைபெற்றுதான் வருகின்றன. அன்றைக்கு தியாகராஜர் பக்க வாத்தியங்கள் வைத்தா பாடினார்? இல்லையே. தன்னந்தனியாகத்தான் பாடினார். தம்புரா, மிருதங்கம், கஞ்சிரா எல்லாம் நாளடைவில் பக்க வாத்தியங்களாக மாறியவைதானே! வயலின் என்ன நம் நாட்டு வாத்தியமா? அதை இன்று பக்கத்தில் வைத்துக் கொண்டுதானே அனைத்துக் கச்சேரிகளும் நடக்கின்றன?" என்றவரின் புதிய முயற்சிகளுக்கு ஒருபுறம் எதிர்ப்பும் கிளம்பியிருக்கிறது.

"என்னுடைய டார்கெட் அறுபது வயது முதியவர்கள் அல்ல. அவர்கள் ரசிக்க எத்தனையோ பாடல்கள் உள்ளன. இன்றைய தேதியில் மேற்கத்திய இசையில் மூழ்கிக் கிடக்கும் இளைஞர்கள்தான் என்னுடைய இலக்கு. வெஸ்டர்ன், ஹிந்துஸ்தானி போன்ற அவர்கள் விரும்பும் இசையோடு, கர்நாடக சங்கீதத்தை அதன் புனிதம் மாறாமல் வழங்கி, இன்றைய ஜெனரேஷனையும் நம் பாரம்பரிய இசையைக் கேட்க வைப்பதுதான் என்னுடைய பெருங்கனவு" - வார்த்தைகள் வேகவேகமாய் வந்து கொட்டுகின்றன.

"வடக்கில் மட்டும் எப்படி 'சித்தார்' ரவிசங்கரும், 'தபேலா' ஜாகிர் ஹுசைனும் மேற்கு நாடுகளில் பிரபலம் ஆனார்கள்? ஏன் இதே நிலைமை நமக்கு இல்லை? காரணம், வட இந்தியாவில் போலில்லாமல் இங்கு நமக்கு சினிமாப் பாடல்களை விட்டால் வேறு வழியில்லை. டி.வி, ரேடியோக்களில் 24 மணி நேரமும் சினிமாப் பாடல்கள்தான். 'மன்மத ராசாவும்' 'கல்யாணந்தான் கட்டிகிட்டு ஓடிப் போலாமா'வும் அர்த்தம் புரியாமல் நம் குழந்தைகள் பாடும்பொழுது எப்படி நெளிகிறோம். 90'களுக்குப் பிறகு எலக்ட்ரானிக் [illegible] பழகிப் போனதால், இனி அதன் பாணியில்தான் நம் தமிழிசையையும், கர்நாடக சங்கீதத்தையும் ஊட்டி, இளைஞர்கள் குழந்தைகளுக்கு நம் கலாசாரத்தின் மகிமையை புரிய வைக்க முடியும்." இவரின் இரு ஃப்யூஷன் ஆல்பங்களிலும் எஸ்.பி.பி., உன்னி கிருஷ்ணன், நித்யஸ்ரீ, மாதங்கி போன்ற பிரபலங்கள் பாடியிருக்கின்றனர். பாதை புதியதாயினும், எல்.வி. கணேசனின் பயணம் புனிதத்தை நோக்கியிருப்பதால், நாளை நிச்சயம் இந்த நட்சத்திரம் மின்னப் போவது உறுதியாகவே தெரிகிறது.

ச.ந. கண்ணன்

வரி விளம்பரம்

ஜோதிடம்

ஜாதகம் கணிக்க, முகூர்த்தம் பார்க்க, கல்யாணப் பொருத்தம் நிர்ணயிக்க, ப்ரச்னம் சொல்ல, பொதுப்பலன் அறிய, யோக காலம் தெரிந்து கொள்ள, வார நாட்களில் மட்டும் பகல் 10 முதல் 1 மணி வரை அணுகவும்.

கோமாண்டூர் ஸ்ரீநிவாசன், அஸ்ட்ரோ ஸ்கொயர், சாஸ்திரி நகர் முதல் மெயின் ரோடு, (வாட்டர் டேங்க் எதிரில், முதல் மாடி), அடையார், சென்னை - 20. தொலைபேசி : 24469160.

விற்பனை - நவராத்திரி

நவராத்திரிக்கு தேவையான தெய்வீக அன்பளிப்பு பொருட்கள் ரூ.2 முதல் ரூ.50க்குள். 100க்கும் மேற்பட்ட வகைகளில் கிடைக்கும். புரட்டாசி மாதத்தை முன்னிட்டு அனைத்து விதமான பாலாஜி படங்களும் (Including Diamond Balaji) தள்ளுபடி விலையில் கிடைக்கும். **Divine Collection,** 60, Rameswaram Street, T.Nagar, Ph : 55479174 and No.3, 33rd Street, Thillai Ganga Nagar, Ph : 22324656.



எழுத்தாளர் ஒரு முடிவும் தொடக்கமும்!

உலக இலக்கியத்தில், ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. முல்க் ராஜ் ஆனந்த், ராஜா ராவ், ஆர்.கே. நாராயண், நீரத் சவுத்ரி, டாம் மோரேஸ் என்று தொடங்கும் பட்டியல், தற்போழுது இயங்கி வரும் 'சல்மான் ருஷ்டி, விகரம் சேத், ஜும்பா லஹரி போன்றவர்களையும் சேர்த்து, நீண்டு கொண்டே செல்கிறது. நோபல், புக்கர் போன்ற பல உயர்ந்த இலக்கிய விருதுகள் இந்திய எழுத்தாளர்களைத் தேடி வந்திருக்கின்றன.

இதற்கெல்லாம் வித்திட்டவர் என்று முல்க் ராஜ் ஆனந்தைச் சொல்லலாம்.

நாவல் எனும் இலக்கிய வடிவத்தை, கற்பனை உலகத்திலிருந்து கைப் பிடித்து இழுத்து வந்து, புழுதி பறக்கும் தெருக்களில் காலில் செருப்புகூட அணிவிக்காமல் உலாவ விட்டவர் முல்க் ராஜ் ஆனந்த். நறுமணத்தையே முகர்ந்து ரசித்துக் கொண்டிருந்த இலக்கியத்தின் நாசிகள், துர்நாற்றத்தையும் இவரால் அறிந்து கொண்டது.

உச்சரித்தாலே நாவில் தீப்பற்றிக் கொள்ளும் என்று உயர் சாதியினர் கவனமாக ஒதுக்கி வைத்த தீண்டத்தகாதவர்களை, இவர் தமது படைப்புகளில் முன்னுரிமை கொடுத்து போற்றினார். இவரது பேனா விருப்பத்துடன் நீண்டு சென்று, அவர்களைத் தழுவிக் கொண்டது. தீண்டத்தகாதவர் (அன்டச்சபிள்) எனும் இவரது நாவலின் கதாநாயகன் பக்கி, ஒரு கழிவறை சுத்தம் செய்யும் தொழிலாளி.

முல்க் ராஜ் ஆனந்த் படித்தது, எழுதத் தொடங்ியது எல்லாமே இங்கிலாந்தில். ஆனால் இந்தியா இவரை ஈர்த்தது. அந்நிய ஒடுக்குமுறைக்கு இரையான இந்தியர்களின் அன்றைய சமூக நிலை, இவரை கோபம் கொள்ளச் செய்தது. சொந்த மண்ணிலேயே சக மனிதர்களை சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் பலர் துன்புறுத்துவது, இவருக்கு மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டின் செழிப்பைப் பற்றி தனியாக ஒரு புத்தகத்தையே எழுதியிருக்கும் இவருக்கு, சென்னை போன்ற பெரிய நகரம் கனிவுகூட காணாமல் போல பெருகியிருக்கும் சேரிகள் ஏமாற்றத்தையே அளித்தது!

இன்று தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் போன்ற ஆதிக்கக் கோட்பாடுகள், மூன்றாம் உலக நாடுகளை சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வெகுவாக பாதித்து வருகின்றன. குடிப்பதற்கு குடிநீர் இருக்கிறதோ இல்லையோ, பெப்ஸியும் கோக்கும் கொட்டிக் கிடக்கின்றன. விளிம்புகளில் தொங்கிக் கொண்டிருக்கும் மனிதர்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

ஒடுக்குமுறை எங்கு நடந்தாலும், அது எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை எதிர்த்துப் போராடும் முதல் மனிதன், ஒரு எழுத்தாளனாகத்தான் இருக்க வேண்டும் எனும் உணர்வு, இப்பொழுது உலகெங்கும் பரவியிருக்கிறது.

முல்க் ராஜ் ஆனந்த், கைப் பிடித்து அழைத்து வந்த இலக்கியம் இன்று உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்டவர்களின் தெருக்களில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது முட்கள் கீறி, காலில் குருதி வந்தாலும், தொடர்ந்து துடிப்புடன் அது முன்னேறிச் செல்கிறது. முல்க் ராஜின் மறைவு அளிக்கும் சோகத்தையும் தாண்டி, தன்னை புதுப்பித்துக் கொண்டு அது தொடர்ந்து பயணிக்கும் என்று நம்புவோம்.

✍ மருதன்

தொடர்ந்து வா... தொட்டு விடாதே!

'விடாது கருப்பு' பாணியில் ரிப்பன் மாளிகையைத் துரத்தித் துரத்தி மிரட்டி வருகிறது சிசி விவகாரம். அதுவும் சென்ற வாரம் தணிக்கைக் குழு வெளியிட்ட 50 லட்ச ரூபாய் தகவல், இப் பிரச்னைகாகப் போராடி ஓய்ந்த எதிர்கட்சிகளுக்கு பூஸ்ட் குடித்தது போல ஆகிவிட்டது. இவ் வாய்ப்பினை 'முறையாகப்' பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கும் இவர்களுக்கு கிடுக்குப்பிடி போடவே, 'கிட்டப்ட்' தேர்தல் வழக்குகளெல்லாம் தோண்டியெடுக்கப் படுகின்றனவாம். இதைப் பற்றி ஆளுங்கட்சி வட்டாரத்தில் என்ன பேச்சு தெரியுமா? 'எங்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுங்கள். ஆனால் தொட்டு விடாதீர்கள் - தொட்டால் ஷாக் உங்களுக்குத்தான்' என்று மிரட்டலும் நக்கலும் கலந்து பேசி வருகிறார்களாம்.

✍ ஸ்வரா



மனிதர்களை முட்டித் தள்ளி விட்டு மதங்கள் முன்னேறும் பொழுது சுதந்திரம் சிதைந்து போகிறது. வன்முறை துளிர் விடுகிறது.

9/11 போலவே உலக மக்களின் உணர்வுகளைப் பிசைந்த மற்றொரு நாள் 9/9. இஸ்ரேலின் முன்னாள் முதல் மந்திரி, சொற்பொழிவு ஆற்றப் போகிறார் என்ற செய்தி மாண்ட்ரியலில் (கனடா) உள்ள கன்கார்டியா பல்கலைக்கழக மாணவர்களை பெருந்தீயாக பற்றிக் கொள்கிறது. 'இஸ்ரேலின் முதல் மந்திரி ஏன் கனடாவுக்கு வர வேண்டும்?' என்று கோபம் கொள்கிறார்கள் பாலஸ்தீனிய ஆதரவாளர்கள். 'வந்தால் என்னவாம்' என்கிறது இஸ்ரேல் ஆதரவு குழு.

இயல்பாக நடந்திருக்க வேண்டிய ஒரு சிறு நிகழ்ச்சி, பெரும் கலவரமாக உருவெடுக்கிறது. மனிதர்கள் திடீரென்று தங்களை யூதர்கள், அராபியர்கள், கிறிஸ்துவர்கள் என்று அடையாளம் கொண்டு கொள்கிறார்கள். பிறைகளும், சிலுவைகளும், நட்சத்திரங்களும் வெளிச்சம் இழந்து வருகின்றன. நீ வேறு, நான் வேறு என்று எல்லோரும் பிரிந்து போகிறார்கள். அடித்துக் கொள்கிறார்கள்.

கன்கார்டியா வகுப்பறையில் கருப்புப் பூனை ஒன்று கால் பதிக்கிறது. கருத்து சுதந்திரம் எனும் எலியைத் துரத்திப் பிடித்து விழுங்குகிறது.

உலக மனித உரிமை கண்காணிப்புக் குழு நடத்திய சர்வதேச மனித உரிமைகள் விழிப்புணர்வு பற்றிய குறும்படங்கள், நுங்கம்பாக்கம் அலையன்ஸ் பிரான்சேஸில் திரையிடப்பட்டன. முதல் படமே குறிப்பிட்ட புன்கார்டியா. 9/9 பற்றிய ஒரு அழுத்தமான பதிவு.

பாலஸ்தீன மக்களின் உரிமைகளை மதிக்கும் ஒருவன், இஸ்ரேலை ஆதரிக்கும் ஒருவன், பேச்சு சுதந்திரத்தை மதிக்கும் மற்றொருவன். இந்த மூன்று பேரை பிரதானமாகத் தொடர்ந்து சென்று, கதை சொல்கிறது காமிரா. அது சொல்லும் கதை உணர்வுபூர்வமான ஒன்று. பாராட்டத்தக்க முயற்சி.

✍ கங்கா

இந்த வாரம் ஒவ்வொரு நடிகைகள் டாக்கீஸ் டாக்கும் அப்படிப் போடு! சினாதானா டோப்டு போட வைத்தது. 'தாள்-கிளிக்' டக்குது புரிஞ்சுக்க கொஞ்ச நேரமாச்சு!

- சுகந்தி நாராயணன், வடசென்னை

இளையராஜா காங்கிரஸுக்கு தலைவர் இருக்கிறார் என்பதை 'ஸ்கேன்' செய்து கண்டுபிடித்துப் பேட்டியெடுத்த உங்களைப் பாராட்டியே ஆக வேண்டும்.

- நாகராஜன், பழைய பல்லாவரம்

சென்னை சேர்ஸ் ஸ்டோரி சூப்பர் ஜாலி!

- இந்திரா சுப்ரமணியன்

Mail @ chennaiscan@kalkiweekly.com



பூமராங்



ஃபோக்கஸ்

எங்கெங்கு காணினும் குப்பையடா!



புழுதிக்கும் பிரோபுல்லிங் கொள்ளைகளுக்கும் பேர் போன பகுதிகளான மடிப்பாக்கம் - மேடவாக்கம் - ஐயப்பாநகர் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளுக்கும், தற்போது குப்பைகள் மிகப் பெரிய இடையூறாக தலையெடுக்கத் துவங்கியுள்ளது. சுகாதாரத்தைப் பல வீணப்படுத்தி வரும் குப்பைகள், எப்படியெல்லாம் இப்பகுதி வாழ் மக்களை இம்சித்து வருகிறது என்பதை ஆய்வு செய்ய, தமிழ் சினிமா ஹீரோ படத்தில் அறிமுகமாகும்போது எப்படி புழுதி பறக்கும் பில்ட் அப்பில் வருவாரோ, அதைப் போன்றே அப்பகுதிக்கு வந்திறங்கினோம்.

அப்பகுதியின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளச் சென்ற ஒவ்வொரு இடத்திலும், ஆங்காங்கே மலைமலையாய் குப்பைமேடுகள் காட்சியளித்தன. அதைக் கண்டபோது துப்புரவுப் பணி நடந்து அநேகமாக பத்தாண்டுகள் ஆகியிருக்குமோ என்ற சந்தேகமே எழுந்துவிட்டது. இது ஒரு புறமென்றால், சாக்கடை நாற்றமோ வயிற்றைப் புரட்டிப் போட்டு விடுகிறது. இப்படி குப்பை கூளங்களோடும், துர்நாற்றத்தோடும் 'ஜெகஜோதியாய்' விளங்கி வரும் இப்பகுதியில் வாழ்ந்து வரும் பொதுமக்களின் தைரியத்தை அறிந்து கொள்ள, அப் பகுதிவாசிகள் சிலரிடம் பேச்சுக் கொடுத்தோம்.

V. கணேசன் (ஐயப்பா நகரில் வாழும் பரிதாபத்திற்குரியவர்)

இந்த ஐயப்பாநகர் மட்டுமில்லாம கணேஷ்நகர், வாணுவம்பேட்டைன்னு எல்லா ஏரியாவுலயுமே இருக்கும் பொதுவான - பெரிய தலைவலி குப்பைதான். இந்தப் பிரச்னையைத் தீர்க்கச் சொல்லி, பல்லாவரம் முனிசிபாலிட்டியிடம் மன்றாடிப் பார்த்துவிட்டோம். இதுவரைக்கும் ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடலே முனிசிபாலிட்டி அதிகாரிகள். அதேபோல டிரெயினேஜ் பிராப்ளம் எனக்கு விவரம் தெரிஞ்சதுலேயிருந்தே இப்படியேதான் இருக்கு. ஆனா இந்த ஏரியா மட்டும் 'நான் மாறவே மாட்டேன்னு அடம் பிடிச்சிட்டுத்தான் இருக்கு' என்று சிரிக்கிறார். (இடுக்கண் வருங்கால் நகுக என்பது இதுதானோ?)

கணேஷ்நகர் குப்பைமேட்டுக்கு அருகில் குடியிருக்கும் தாமோதரன்:

''இங்க மலையா குவிஞ்சிருக்குற குப்பையை அள்ள டிராக்டரை எடுத்துக் கொண்டு ஒருத்தர் வருவார். குப்பையை வாங்கிட்டுப் போவார். முதல்ல ஒருநாள் விட்டு ஒருநாள் வந்துட்டு இருந்தார். இப்போ சுத்தமா வர்றதில்லே. கேட்டா வண்டி ரிப்பேர், பஞ்சர்னு சொல்லுவார். முனிசிபாலிட்டி ஊழியர்கள் மாதம் ஒரு தடவை ஒவ்வொரு வீட்டுலயும் ஐம்பது கொடு! நூறு கொடு!ன்னு மிரட்டல் தொனியில கேட்பாங்க. இதையெல்லாம் கவனிக்க சூப்பர்வைசர்னு ஒருத்தர் இருக்கார். அவரை நேர்லயோ, இல்ல செல்ஃபோன்லயோ பிடிக்கக் கொடுத்துவைக்கணும். உங்களைவிட திறமைசாலி யாருமே இல்ல'' என்று வருத்துகிறார்.

சாக்கடை நீர் செல்வதற்காக இப்பகுதியில் செய்யப்பட்டுள்ள வசதிகள் எதுவுமே இன்றைய தேதிக்கு உபயோகமாகவே இல்லை என்பதுதான், இப் பகுதி மக்களுக்கு அரசியல்வாதிகள் கொடுத்த மிகப் பெரிய சாபம் என்றே சொல்லலாம். ஆம், இன்று அங்கு சாக்கடைக் கால்வாய்கள் துப்புரவுத் தொழிலாளர்களின் மெத்தனப்போக்கு காரணமாக, குப்பை கொட்டும் இடமாக மாறி வருகின்றன. குறிப்பாக ஐயப்பா நகரில் மூன்று மாதத்திற்கு முன்பு கட்டப்பட்ட கால்வாய், இன்று மிகப் பெரிய குப்பைமேடாக மாறி வருவது இப்பகுதியின் உண்மை நிலையினைப் பிரதிபலிக்கிறது.

இவற்றையெல்லாம் தாண்டி ஒரு மிகப் பெரிய விவகாரம் ஆர்வக் கோளாறால் உருவாகி வருகிறது என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும். இங்குள்ள குப்பைகளை அகற்றச் சொல்லிப் போராடி அலுத்துப் போன பொதுமக்கள், அவற்றை எடுத்துப் போட்டு, அக்குப்பைமேட்டிலுள்ள பிளாஸ்டிக் பைகள் மற்றும் ரப்பர் செருப்புகள் எல்லாவற்றையும் எரித்து மிகப் பெரிய சுகாதார சீர்கேட்டினை ஏற்படுத்தி வருகின்றனர். ஏற்கெனவே டஸ்ட் அலர்ஜியால் அவதிப்பட்டு வரும் இப் பகுதி மக்களை, இந்தப் புதிய டாக்சின் காற்று எந்தெந்தச் சிக்கலையெல்லாம் ஏற்படுத்தப் போகிறது என்பதை உணராதவர்களாக இருக்கும் இப் பகுதி மக்களை, யார்தான் காப்பாற்றப் போகிறார்களோ என்ற கேள்வியோடு முடித்துவிட மனமில்லாததால், பல்லாவரம் முனிசிபல் கமிஷனரைத் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டதற்கு,

''குப்பை ஆங்காங்கே குவிஞ்சிருக்கறது உண்மைதான். காரணம், எல்லாத்தையும் ஒட்டுமொத்தமா எடுத்துட்டுப் போயி கொட்ட ஏத்த இடம் தற்போதைக்கு இல்ல. அதனாலதான் குப்பையள்ளும் பணி கொஞ்சம் பொறுமையா (!) நடந்துட்டு இருக்கு. சரியான இடம் கிடைக்கிற வரைக்கும் எல்லாரும் சமாளிச்சுதான் ஆகணும். எங்களால முடிஞ்ச வரைக்கும் எல்லா ஏரியாவையும் சுத்தமாத்தான்(!) வச்சிருக்கோம். இப்போ சமீபத்துல வந்த மழைதான் இங்க இருக்குற டிரெயினேஜ் பிராப்ளத்துக் காரணம்'' என ஒரு சராசரி அரசு அதிகாரிக்கே உள்ள பொறுப்புடன் சமாளித்தார். இவருடைய இந்த பதிலுக்குப் பின்னர், நாங்கள் முன்பு கூறிய வாசகத்தையே மீண்டும் கூற வேண்டியுள்ளது. இப்பகுதி மக்களை யார்தான் காப்பாற்றப் போகிறார்களோ!

இரா முத்துக்குமார்
விஜயன்

"அறிவுப்பழம் கொத்த வருவாங்க!"



📷 ஷிவ்



'குளுவாளிலே லத்தூவாலி கண்டீங்களா' என்றெல்லாம் உங்க லத்தூவாலிக்கு வெட்டாள் வருது. ஹலோ! போலதாங்க மலையான வசனட. நான் ஃபோர்க் தமிழ்ப் பொண்ணு. ஆமா.

ஐஐடியில படிக்கிற என் புது ஃப்ரெண்ட் வினிதா ஒரு ஃபோன் அனுப்பியிருந்தா. 'சாஸ்த்ரா 2004'ங்கிற டெக்னிகல் திருவிழாவோட அழைப்பிதழ் அது. சென்னையில எங்காவது தோரணம் கட்டினாலே உள்ளே நுழையற நான், விடுவேனா இதை!

'ஓவர் டு ஐஐடி கேம்பஸ். ஹாய் சென்னை ஸ்கேர் கைஸ் & கேர்ள்ஸ். இந்த இடம் தமிழ்நாடு தானா? ஆல் இந்தியாவிலிருந்து வந்துட்டன் வந்து கல்யாணமுல்லாமென்று பல பாஷை பேசறாங்க. தமிழ் வேதாண்டி!

"சிவில் ஆர்கிடெக்ட் இன்ஜினியரிங் ஸ்டூடன்ட்ஸ்க்கு ஒரு டிசைன் கொடுத்து வடிவமைக்கச் சொல்வோம். சாஃப்ட்வேர் இன்ஜினியரா' ப்ரொப்ளம் யூஸ் பண்ணி புது ப்ரோகிராம் பண்ணுவாங்க. இதுல தேர்வாகிற அறிவுப் பழத்தை கொத்திட்டுப் போக பல பெரிய நிறுவனங்கள் இங்க படையெடுப்பாங்க" என்று என் தோளில் கைபோட்டபடி தகவலளித்தார் வினிதா. "பஞ்சாபி என்பதால் சென்னை விடவும் நீ சிக்குன்னு தான் இருக்கே" தோழிக்கு சர்ட்டிபிகேட் கொடுத்தபடி ஈவென்ட் நடக்கும் இடத்திற்கு போனேன்.

ப்ராஜக்ட் X ன்னு ஒரு ஹா.. ஹா.. ஹா.. போட்டி (மூளைக்கும் வேலையிருக்கு இதுல) மொத்தமா கம்ப்யூட்டர் குச்சிகளையும், கற்களையும் கொடுத்திடுவாங்க. அவ்வளவுதான். குச்சியால 'டவர்' கட்டி, அதுல கீரனா ஒரு பார் வைச்சு, ஒரு பக்கம் கல் மூட்டையைக் கட்டி மறுபக்கம் கல்லை வைச்சு 'ஆபரேட்' பண்ணினா, யாருடைய கல்லு ரொம்ப தூரம் போய் விழுதோ அவங்களுக்கு வெரைட்டி & போனஸ் டிசைன்படி பரிசு கிடைக்குமாம். என் அறிவுக்கு எட்டாத விஷயங்களை வேடிக்கை பார்த்திருந்தப்போ, 'கர்'ன்னு ஒரு கல்லு என் பின் புறத்தை பதம் பார்த்துச்சு. "ஸாரி மேடம் வெரைட்டி அதிகமாயிருச்சி. ஓரமா நில்லுங்க"ன்னு கரெக்டா குறி வைச்சுட்டு சமாளிச்சான் ஒருத்தன். 'அடுத்த சாஸ்த்ராவுல உன்னை வைச்சுக்கிறேன்டா'ன்னு மனசுக்குள்ள திட்டிகிட்டேன்.

டிசைன். மாதிரி பல தனியார் ஸ்டால்களிலும் காலேஜ் கேர்ள்ஸ் பார்ட்டைமுக்கு மார்க்கெட்டிங் பண்ணிட்டிருந்தாங்க. "நாங்க எதிர்காலத்து இந்த அறிவுப்பிரதேசத்துல கால் வைச்ச மாதிரியுமாச்சு. சம்பாதிச்ச மாதிரியுமாச்சு" என்று பொறுப்புணர்வோடு பதிலளிக்கும்போது, அந்தப் பக்கம் 'பாகீஆல கும்பல்' "அப்பவே நாங்களும் உங்களைப் பார்த்த மாதிரியாச்சு" என்று கேஷுவலாக கமெண்ட் அடித்தனர். 'கேர்ள்ஸ் ஆர் கேர்ள்ஸ்'னு சொன்ன மாதிரி, ஐஐடியா இருந்தாலும் பசங்க பசங்கதான். இல்லையா கேர்ள்ஸ்!



அரியர்ஸ் கோல்டு மெடலிஸ்ட் லத்தூவாலி

சென்னையில் ஆண்களும், பெண்களும் டே டியூட்டி, நைட் டியூட்டிக்கு செல்வது சாதாரணப்பட்ட விஷயம்தான். ஆனால் இப்போது புதிதாக காலி குடங்களும் நைட் டியூட்டிக்கு செல்லத் துவங்கிவிட்டன. இது என்ன கூத்து என்கிறீர்களா! விடிகாலையில் வரும் தண்ணீரை முதல் ஆளாகப் பிடிக்க போட்டி போட்டு கண் விழித்த பொதுமக்களின் சிந்தனையில் உதித்த திட்டம்தான் இந்த 'நைட் டியூட்டி ஆஃப் திட்டம்'. இரவு தங்களிடம் இருக்கும் ஓட்டை உடைசல் குடங்களை தண்ணீர்க் குழாய்க்கு அருகில் வரிசையாக (பெயரெழுதித்தான்) வைத்து விடுவார்கள். காலையில் தண்ணீர் வந்தவுடன் நைட் டியூட்டியில் இருந்த குடங்களுக்கு பதிலாக, மாற்றுக் குடங்கள் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்விஷயத்தை மேலோட்டமாகப் பார்த்தால் சிரிப்பு வரலாம். ஆனால் இன்றைய யதார்த்தம் இதுதான். இந்த தண்ணீர் கஷ்டத்தால் என்னென்ன புதுக்கண்டுபிடிப்புகளெல்லாம் வரப்போகிறதோ!

✍ ஸ்வரா



நைட் டியூட்டிக்கு போகும் குடங்கள்!

சைதாப்பேட்டையில் ஒரு பிரௌஸிங் சென்டரில் சிரியஸாக 'சாட்'டிக் கொண்டிருந்த மகேஷ் என்பவரிடம், 'இப்படி அடிக்கடி சாட் செய்வதால் ஏதாவது பிரயோஜனம் உண்டா?' என்றோம்.

"ஒரு பைசாவுக்குக்கூட பிரயோஜனம் கிடையாது. வீணாப் போயிடுவீங்க. சாட் பண்ண பல நாட்டுல இருந்தும் வகை வகையா வசமாக் கிடைப்பாங்க. ஆனா பர்ஸ் பழுத்திருக்கும்" என்றார் ஞானி டோனில்!



📷 வித்யன் ✍ கங்கா

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 338 / 03 - 05 *

Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 17.10.2004